# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice



ஆயுதம் ஏந்திய காவல்துறையினரும் ஆதிக்கமிகுந்த வலது சாரி மதக்குழுவினரும் முசாபர் நகர், உத்தரபிரதேச மாநிலத்தில் முஸ்லிம்கள் மீது நடத்திய தாக்குதல்.



குஜராத்தின் அகமதாபாத் மாநகராட்சி காலுபூர், தரியாபூர், ரிலீஃப் ரோடு மற்றும் ஷாபூர் ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல கட்டிடங்களை இடித்துள்ளது.



நாட்டை மதரீதியாக பிரிக்கும் முயற்சியில் சங்க் பரிவார் மிக வேகமாக செயல்பட்டு அதன் கடைசி கட்டத்தில் உள்ளதாக தோன்றுகிறது. முஸ்லிம்களை கட்டுக்குள் வைத்திருக்க, அவர்களை பொருளாதார ரீதியாக கடுமையாக தாக்க வேண்டும் என்பதே சங்க் பரிவாரின் கருத்து.



காஸாவில் இஸ்ரேலின் அடக்குமுறைக்கு எதிராக நடந்த போராட்டத்தில் காஷ்மீரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்திய காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

# ஃபாட்வாக்களும் முஸ்லிம் பெண்களும்

– இர்ஃபான் இன்ஜினீயர்

*ஃபாட்வா பிறப்பிப்பது அரசியல் சாசனத்திற்கு எதிரானது அல்ல என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம், ஃபாட்வாக்கள் அவற்றை பிறப்பிக்கிறவர்களுடைய கருத்துகள்தானேயன்றி யாரையும் கட்டுப்படுத்துவது அல்ல என்று தெளிவுபடுத்தி இருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். அதேவேளையில், ஒரு சமநிலையான கண்ணோட்டத்துடன் நீதிமன்றம் எந்தவொரு மத நிறுவனத்தின் செயல்பாட்டையும் சட்ட விரோதமானது என்றோ பொதுநலனிற்கு எதிரானது என்றோ அறிவிக்க மறுத்துள்ளது. அரசமைப்பு சாசன கட்டமைப்பிற்கு உட்பட்டு நீதிமன்றங்கள் இஸ்லாமிய கட்டமைப்புக்குள் முஸ்லிம் பெண்கள் உரிமைகளுக்காகவும் சட்ட வாய்ப்புகளுக்காகவும் ஏராளமாகச் செய்துள்ளன. முஸ்லிம் பெண்கள் இந்த வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்திக்கொண்டு சிறப்பான உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.*

உச்சநீதிமன்றம் 2014 ஜூலை 7 அன்று விஷ்வ லோச்சன் மதன் எதிர் இந்திய அரசு வழக்கில் அளித்த தீர்ப்பில் இவ்வாறு கூறியுள்ளது:

“சுதந்திர இந்தியாவில் நமது அரசமைப்பு சாசனத் திட்டத்தின்கீழ் ஃபாட்வாவிற்கு இடமில்லை. இதற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடையாது. எந்தவொரு சட்ட நடைமுறையின்படியும், ஃபாட்வா பிறப்பிக்கிற தார்–உல்–காஸா அமைப்போ அல்லது சம்பந்தப்பட்ட நபரோ அல்லது எவர் ஒருவரோ இதனை நடைமுறைப்படுத்த முடியாது… இதற்கு சட்ட மரபு எதுவும் கிடையாது, நாட்டின் சட்டங்களில் எவ்வித ஒப்புதலும் கிடையாது.”

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு தெள்ளத் தெளிவாக இருக்கிறது. ஆயினும், மனுதாரராகிய விஷ்வ லோச்சன் மதன் தாக்கல் செய்த கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது. அகில இந்திய முஸ்லிம் தனி நபர் சட்ட வாரியம் (ஏ.ஐ.எம்.பி.எல்.பீ.), மற்றும் அதே போன்ற இதர அமைப்புகள் முஸ்லிம் நீதிமுறை அமைப்பு ஒன்றை ஏற்படுத்த முயல்கிற இயக்கத்திற்கும் நடவடிக்கைகளுக்கும் தடைவிதிக்க வேண்டும், இந்தியாவில் உள்ள ஷரியத் நீதிமன்றங்களை முற்றிலும் சட்டவிரோதமானது, அரசமைப்பு சாசனத்திற்கு எதிரானது என்று அறிவிக்க வேண்டும், அனைத்து தார்–உல்–காஸா அமைப்புகளும் ஷரியத் நீதிமன்றங்களும் கலைக்கப்பட வேண்டும், முஸ்லிம் தனிநபர் சட்டத்தின் கீழ் எந்த ஒரு திருமண விவகாரங்களையும் இந்த அமைப்புகள் கையாள அனுமதிக்கக்கூடாது, காஜிமார்களுக்கு, நயிப் காஜிகள், முஃப்திகள் ஆகியோர் எவ்வித நீதிமுறை சேவைகளையும் வழங்குவதற்கு ஏ.ஐ.எம்.பி.எல்.பீ. அல்லது தர்–உல்–உலூம் ஆகிய அமைப்புகள் பயிற்சியளிக்க தடைவிதிக்க வேண்டும் என்று மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

மனுதாரரின் கோரிக்கைகள் பாரபட்சமானவை என்பது தெரிகிறது. ஏனெனில், இந்தக் கோரிக்கைகள் முஸ்லிம் சமூகத்திற்குள் உள்ள குடும்பத் தலைவர் முறை சார்ந்த பழக்கவழக்கங்களையும் நடைமுறைகளையும் செயல்படுத்துகிற மத நிறுவனங்களுக்கு எதிராக மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. மற்ற சமூகங்களில் உள்ள இதே போன்ற கட்டமைப்புகளை இந்த வழக்கு தொடவில்லை (உதாரணமாக காஃப்–பஞ்சாயத்துகள்). வழக்குத் தொடுப்பதற்கு மனுதாரருக்கு உள்ள உரிமையை கேள்வி கேட்காமல் உச்சநீதிமன்றம் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. முஸ்லிம் சமுகத்தைச் சேர்ந்த எந்த ஒரு மத நிறுவனம் எடுக்கக்கூடிய முடிவுகளாலோ அல்லது பிறப்பிக்கக்கூடிய ஃபாட்வாக்களாலோ மனுதாரருக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை. ஆயினும், ஒரு சமநிலையான கண்ணோட்டத்தை மேற்கொண்ட உச்சநீதிமன்றம், எந்த ஒரு மத நிறுவனத்தின் செயல்பாடும் சட்டவிரோதமானது என்றோ பொது நலனுக்கு எதிரானது என்றோ அறிவிக்க மறுத்துவிட்டது.

அரசமைப்பு சாசனத்தின் 25வது சட்டஉரை நம்பிக்கைச் சுதந்திரத்தையும், ஒவ்வொருவரும் தனது தேர்வுபடி மத போதனை செய்யவும் கடைபிடிக்கவும் பரப்பவும் உள்ள உரிமையையும் உறுதிப்படுத்துகிறது. அதே நேரத்தில் அந்த முடிவுகளை அந்தக் கருத்துகளை மூன்றாவது மனிதர் மீது எந்த ஒரு வழிமுறையிலும் திணிக்க முடியாது. ஒவ்வொரு மத அமைப்புக்கும் அல்லது பிரிவுக்கும் மதம் மற்றும் அறச் செயல் நோக்கத்திற்காக நிறுவன அமைப்புகளை ஏற்படுத்தவும், பராமரிக்கவும், மத விஷயங்களில் தனது சொந்த விவகாரங்களை நிர்வகிக்கவும் உள்ள உரிமையை 26வது சட்டஉரை உறுதிப்படுத்துகிறது.

இங்கே இரண்டு பிரச்சனைகள் முன்னுக்கு வருகின்றன. ஒன்று, ஃபாட்வா சம்பந்தப்பட்டது. மற்றொன்று திருமணம் அல்லது வேறு எந்த ஒரு பிரச்சனையிலும் இரண்டு தனி மனிதர்களுக்குக்கிடையே எழக்கூடிய தாவாக்களில், பேச்சு நடத்துவது, உடன்பாட்டை ஏற்படுத்துவது, முடிவெடுப்பது ஆகிய பிரச்சனைகள் சம்பந்தப்பட்டதாகும். தர்–உல்–காஸா அமைப்புகள் ஒரு முறைசாரா நீதி வழங்கும் அமைப்புதான், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே இணக்கமான உடன்பாட்டை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதுதான் என்பது உச்சநீதிமன்றத்தின் கருத்து. சர்ச்சைகளில் தீர்வுகாண்பதற்கான கால மாற்று அமைப்புகள் இருக்கின்றன. நீதிமன்றங்களை நாடுவதற்கு முன் இத்தகைய அமைப்புகளைத்தான், தாவாக்களில் ஈடுபட்டிருப்போர் நாடுகிறார்கள். நீதிமன்றங்களை நாடுவது செலவு பிடிப்பதாகவும், அதிக காலம் எடுத்துக்கொள்வதாகவும் இருப்பது இதற்கு ஒரு காரணம். நீதிமன்றங்களின் பளுவைக் குறைக்கிறது என்பதால் உரிமையியல் நடைமுறைச் சட்டமும் (சிபிசி) கூட இத்தகைய வழிமுறையை ஊக்குவிக்கிறது. நடுவர் தீர்ப்பு / பேச்சுவார்த்தை / இணக்கமான உடன்பாடு ஆகிய நடைமுறைகள் பதவி ஓய்வுபெற்ற நீதிபதிகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. தாவாவில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நம்பிக்கை வைத்திருக்கிற, தங்களை உட்படுத்திக்கொள்கிற வணிக அடிப்படையிலான அல்லது தொழிற்சார் அமைப்புகளாலும் இந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாரம்பரியம், சாதி சமூக அடிப்படையிலான சகோதர உறவு ஆகிய அடிப்படையில் செயல்படும் பல்வேறு சமூக – மதவாத அமைப்புகளாலும் கலாச்சார அமைப்புகளாலும் இன்னபிற அமைப்புகளாலும், இந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மகளிர் அமைப்புகளும் கூட திருமண தாவாக்களில் ஆலோசனை மையங்களையும் பேச்சுவார்த்தை அமைப்புகளையும் நடத்துகின்றன.

இந்த அமைப்புகள் மதம் சார்ந்த – ஆணாதிக்கம் சார்ந்த மரபுகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கின்றன என்ற காரணத்தாலேயே இவை சட்டவிரோதமானது என அறிவிக்கவோ தடை செய்யவோ முடியாது. காஃப்– பஞ்சாயத்துகளும், தர்–உல்–காஸாக்களும் எடுக்கிற முடிவுகள் நிச்சயமாக எதிர்க்கப்பட வேண்டியவைதான். ஏனெனில், அவை பாலின பாகுபாட்டை மேலும் விரிவுபடுத்துகின்றன. பெண்களின் நிலையை பலவீனப்படுத்துகின்றன. ஆணாதிக்க மதிப்புகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்துகின்றன. ஆனால், இத்தகைய அமைப்புகளைத் தடை செய்வது தீர்வாகிவிடாது. ஏனெனில், இத்தகைய அமைப்புகள் வெவ்வேறு பெயர்களிலும், வடிவங்களிலும் மீண்டும் மீண்டும் உருவெடுத்துக்கொண்டே இருக்கும். நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த நாம் மதச்சார்பற்ற, அரசமைப்பு சாசனம் சார்ந்த அமைப்புகளை வலுப்படுத்தியாக வேண்டும். செலவுகளைக் குறைக்க வழி செய்வதன் மூலம் ஏழைகளும் நலிவுற்ற பிரிவுகளைச் சேர்ந்தோரும் இந்த அமைப்புகளை எளிதில் தொடர்பு கொள்ள முடியும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். நடைமுறைகளை எளிமைப்படுத்தி, புதிராக இருப்பதை மாற்ற வேண்டும். நீதி கிடைப்பதற்கு ஆகிற காலத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும்.

### ஃபாட்வா பிறப்பித்தல்

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஃபாட்வா குறித்த விவாதத்தை முன்னுக்குக் கொண்டுவந்துள்ளது. பட்வா குறித்து பல தவறான புரிதல்கள் இருக்கின்றன. அரபு மொழியில் ஃபாட்வா என்றால் "கருத்து" என்றுதான் அர்த்தம். அது இஸ்லாமிய நெறிமுறைகளின்படி குறிப்பிட்ட ஒரு விஷயத்தில், ஃபாட்வா பிறப்பிப்பவரின் கருத்தாகும். இஸ்லாமிய அமைப்பில் மத நிர்வாக சபை என்று இல்லை என்பதால், அந்த ஃபாட்வா யாரையும் கட்டுப்படுத்தாது. ஃபாட்வா பிறப்பிப்பவர் எவ்வளவுதான் கற்றறிந்தவராக, தகுதி உள்ளவராக இருந்தாலும், அந்த ஃபாட்வா எவரையும் கட்டுப்படுத்தாது. தர்–உல்–இஃப்தா அமைப்பு பிறப்பிக்கிற ஃபாட்வாக்கள் பொதுவாக, ஒரு கருத்தைக் கூறிய பிறகு கடைசியில் "ஆனால், அல்லாவுக்கு நன்றாகத் தெரியும்," என்ற வார்த்தைகளோடு முடிவடையும். இந்த வார்த்தைகள், அதனை வெளியிடுகிறவருடைய பணிவைக் காட்டுவதோடு, அது யாரையும் கட்டுப்படுத்தாது என்பதையும் உணர்த்துகின்றன.

ஒரு ஃபாட்வா என்பது அன்றாட வாழ்க்கைத் தொடர்பான விஷயங்களில் ஷரியா கண்ணோட்டத்தின்படி குறிப்பிட்ட கேள்விக்கான பதிலேயாகும். ஆசை, வழிபாடு, பண்டமாற்று, பொருளாதாரம், குடும்பம், ஆட்சி நிர்வாகம் உள்ளிட்ட வாழ்க்கையின் சகல அம்சங்களையும் குறித்து கருத்துக்கூறுவதுதான் ஃபாட்வா எனப்படும். எனினும், பெரும்பாலான கேள்விகள் திருமண விவகாரங்கள் தொடர்பானவையாகவே உள்ளன. யாரிடமிருந்து வேண்டுமானாலும் கேள்வி வரலாம். குறிப்பிட்டப் பிரச்சனையில் சம்பந்தமில்லாத மூன்றாவது நபரிடமிருந்தும் கேள்வி வரலாம். ஒரு மூன்றாவது நபர் தொடர்பான விஷயங்களில், பத்திரிகையாளர்கள் பொதுவாக உள்ளூர் அளவிலான மசூதியைச் சேர்ந்த இமாம் யாரையாவது அணுகுகிறார்கள். அந்த இமாம்

இஸ்லாமிய சமய கோட்பாடுகளில் குறைந்தபட்ச பயிற்சி மட்டுமே பெற்றவராக இருப்பார். ஊடகங்களின் நோக்கம் மௌல்வியின் கருத்தை வெளியிட்டு, அதைப்பற்றி மற்றவர்கள் அறியச் செய்வதல்ல. மாறாக, பின்னர் வரக்கூடிய ஃபாட்வா அறிவிப்பை தொலைக்காட்சிகளின் டி.ஆர்.பி. (தொலைக்காட்சி மதிப்பீடு புள்ளி) விகிதத்தை அதிகரிப்பதற்காக அலைவரிசைகளில் ஒளிபரப்புவதும், அல்லது பத்திரிகை விற்பனையை அதிகரிக்கச் செய்வதுமேயாகும். பின்னர் மற்ற ஊடகங்களும் அந்த ஃபாட்வா பிரச்சனையை எடுத்துக்கொண்டு நாட்கணக்கில், வாரக் கணக்கில் ஏன் மாதக் கணக்கில் கூட திரும்பத் திரும்ப அந்த ஃபாட்வா பிரச்சனையை அலசிக்கொண்டிருக்கும். இம்ரானா பற்றிய ஃபாட்வா அறிவிப்பை கேட்டுப் பெற்றது ஒரு பத்திரிகையாளர்தான். இம்ரானாவோ, அவரது கணவரோ அல்லது அவரை வன்புணர்ச்சி செய்த மாமனாரோ ஃபாட்வா கூறவில்லை. அதுமட்டுமல்ல, அந்த ஃபாட்வாவை இவர்கள் யாருமே பின்பற்றவில்லை.

ஒரு ஃபாட்வா அறிவிப்பை இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையில், இஸ்லாமிய அறிஞர்கள் மட்டுமே வெளியிட முடியும். ஃபாட்வாவை அறிவிக்க அதிகாரம் உள்ளவர் ஒரு முஃப்தி நிலையில் இருக்கக்கூடியவராவார். அவர், ஃபாட்வா கோருகிறவருக்கு வழிகாட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அவருக்கு ஆழ்ந்த புரிதலும், நிதானப்போக்கும், அமைதியான குணமும் கொண்டவராக இருக்க வேண்டும். அவருக்கு ஒரு உறுதியான சமயப் பின்னணி இருக்க வேண்டும். ஆழ்ந்த அறிவு இருக்க வேண்டும். அன்றாட வாழ்க்கை குறித்தும் தற்காலப் பிரச்சனைகள் குறித்தும் அறிந்தவராக இருக்க வேண்டும். முஸ்லிம்களின் ஒவ்வொரு தலைமுறையினரும், முக்கியப் பிரச்சனைகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும், தங்களது சொந்தத் தேவைகளுக்கேற்ப சட்டங்களை உருவாக்க வேண்டும் என்று அல்லமா இக்பால் தனது 'இஸ்லாம் மார்க்கத்தில் மதச் சிந்தனைகளை மறுகட்டமைப்பு செய்தல்' என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார். கிராமப்புற மசூதிகளில் மிகக் குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் இமாம்கள் பொதுவாக இந்தத் தகுதிகளோடு இருப்பதில்லை. அவர்களுக்குத் தெளிந்த கண்ணோட்டம் இருப்பதில்லை, குறிப்பிட்ட பிரச்சனையை அவர்கள் புரிந்துகொள்வதில்லை. புத்தகத்திலுள்ள விதிகளை எந்திரத்தனமாகப் பின்பற்றவே அவர்கள் முயல்கிறார்கள்.

ஒரு ஃபாட்வா என்பது ஒரு தனிநபர் செயல்பாடு சம்பந்தமானதாக இருக்கலாம் அல்லது ஒட்டுமொத்த சமூகம் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். நாடு பிளவுபட்டபோது பல்வேறு இஸ்லாம் பிரிவுகளைச் சேர்ந்த உலீமாக்கள் பிறப்பித்த நூறு ஃபாட்வாக்களை மௌலானா உசேன் அஹமது மதானி சேகரித்தார். அவற்றைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டார். புதிய நாட்டிற்கு பாகிஸ்தான் (புனித பூமி) என்று பெயர் சூட்டப்பட்டபோது, ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை "பாக்"அல்லது புனிதமானது என்று கூறுவது பாவம் என்ற வாதத்தை மதானி முன்வைத்தார். அல்லாவின் ஒட்டுமொத்தப் படைப்புகளும் புனிதமானதுதான் என்றார். நபிகள் உருவாக்கிய முதல் அரசு பன்முக இனம் சார்ந்ததாகும். மதீனா நிர்வாகத்தைப் போன்ற அந்த அரசில் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், யூதர்கள் இடம் பெற்றிருந்தனர். மதீனாவை எதிரிகள் தாக்கினால் அதனை ஒன்றுபட்டுப் பாதுகாக்க உறுதியேற்றனர். அதேநேரத்தில் அவர்கள் தத்தமது மத நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கு சுதந்திரம் பெற்றிருந்தார்கள். இந்திய தேசியம் என்பதும்கூட பல்வேறு நம்பிக்கைகள் இணைந்து வாழ்கிற பன்முகத்தன்மை கொண்டதேயாகும். முஸ்லிம்களுக்குத் தங்களது நம்பிக்கைப்படி இயங்குவதற்கான சுதந்திரம் இருக்கிறது. நாடு முழுக்கப் பயணம் மேற்கொண்ட மதானி, பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார். அப்போது அவர், பாகிஸ்தான் உருவாக்கப்படுவதை எதிர்ப்பது முஸ்லிம்களின் மார்க்கம் சார்ந்த கடமை என்று கூறினார்.

இதேபோல, அப்பாவி மக்களைக் குறிவைத்துத் தாக்கும் பயங்கரவாதத்தை எதிர்த்து ஏராளமான ஃபாட்வாக்கள் இயற்றப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள உலீமாவும், இதர இஸ்லாமிய நாடுகளில் உள்ள மற்றவர்களும் அந்த ஃபாட்வாக்களைப் பிறப்பித்துள்ளனர். சவுதி அரேபியா, துருக்கி, இந்தியா, செனகல், குவைத், ஈரான், மொராக்கோ ஆகிய நாடுகளைச் சேர்ந்த 15 முன்னணி அறிஞர்கள் துருக்கி நாட்டில் உள்ள மார்டின் நகரில் நடந்த மாநாட்டில் பங்கேற்றனர். போஸ்னியாவின் தலைமை முஃப்தி முஸ்தஃபா செரீக், மவுரிட்டானியாவின் ஷேக் அப்துல்லா பின் பய்யா, யேமேனியின் ஷேக் ஹபீப் அலி அல் ஜிஃப்ரி ஆகியோர் மாநாட்டில் பங்கேற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். தைமின்யா மௌல்வி பிறப்பித்த ஃபாட்வாவை நிராகரித்தவர் ஷேக் அப்துல்லா. அந்த ஃபாட்வாவைத்தான் ஒசாமா பின்லேடனும், ஆதரவாளர்களும் பின்பற்றினர். மோங்கோல் இனத்தவர்கள், மாம்லுக் பிரிவினர் ஆகியோருடனான போர்களுக்கு எதிரான ஜிஹாத் அனுமதிக்கத்தக்கது மட்டுமல்ல, கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டியதுமாகும் என்று பின்லேடனும் ஆதரவாளர்களும் கருதினார்கள். இமாம் ஹன்பால் உருவாக்கிய பள்ளியின் அங்கத்தினர்

இபின் தைமின்யா. ஒரு அநீதியான ஆட்சியாளருக்கு எதிரான வன்முறையைப் பயன்படுத்துவதை தைமின்யாவின் ஃபாட்வா நியாயப்படுத்தியது. அநீதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், ஆட்சியில் மாற்றம் ஏற்படுத்தவும் அது ஒன்றே வழி என்று தைமின்யா கருதினார். ஆனால், மார்டின் மாநாடு அப்பாவிகளையும், போரில் ஈடுபடாதவர்களையும் தாக்குகிற ஈவிரக்கமற்ற வன்முறைகளை ஏற்க மறுத்தது. பயங்கரவாதத்திற்குக் கண்டனமும் தெரிவித்தது. ஒரு ஜனநாயக அமைப்பில், ஆட்சியை மாற்றுவதற்கு வேறு வழிகள் உள்ளன என்று மாநாடு சுட்டிக்காட்டியது.

இத்தகைய ஃபாட்வாக்களுக்கு ஊடகங்களில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. ஃபாட்வா குறித்த புரிதலின்மை ஒரு காரணம். அடுத்து, இஸ்லாம் ஒரு பிற்போக்குத்தனமான, வன்முறை சார்ந்த, தீவிரமான மதம் என்ற பொதுவான கருத்துக்கு மாறானதாக இந்த ஃபாட்வாக்கள் இருப்பது மற்றொரு காரணம். மேலும் ஊடகங்கள், எதிர்மறையான செய்திகளைத்தான் சார்ந்திருக்கின்றன. நல்லிணக்கத்திற்கும் அமைதிக்கும் ஏற்ற செய்திகளை விட முரண்பாடுகளும் மோதல்களும் குறித்த செய்திகள்தான் ஊடகங்களின் டிஆர்பி விகிதத்தை உயர்த்துகின்றன.

### தக்லித் எதிர் இஜ்திஹாத்

ஒரு அநீதியான ஆட்சியாளருக்கு எதிராக கிளர்ச்சி செய்வதற்கு இமாம் ஹன்பால் தடை விதித்தார். அத்தகைய கிளர்ச்சிகள் அராஜகத்திற்கும் ரத்தம் சிந்துவதற்குமே இட்டுச் செல்லும் என்று அவர் கருதினார். சில சட்டப்பூர்வ முன்னுதாரணங்கள் உள்ளன என்றபோதிலும், பொருத்தமில்லாமல், சமூக மாற்றங்கள் குறித்த உணர்வில்லாமல், குரான் வழியிலும் சன்னா வழியிலும் மனதைச் செலுத்தி சிந்திக்காமல் ஃபாட்வாவிற்கு கண்ணை மூடிக்கொண்டு அதிகாரம் (தக்லித்) அளிப்பது, இஸ்லாமிய சட்டம் குறித்த அறியாமைக்கும் தேக்கநிலைமைக்குமே இட்டுச் செல்லும் என்று இபின் தைமின்யா கூறினார். இஸ்லாம் சட்டமுறை குறித்து பல்வேறு சிந்தனைப் போக்குகள் உள்ளன. கருத்து மாறுபாடுகளுடன் குறிப்பிட்ட காலத்தில் எழக்கூடிய பிரச்சனைகள் குறித்து அந்தப் போக்குகள் விவாதிக்கின்றன. இஸ்லாமியக் கல்வி வழங்குகிற அமைப்புகளில் ஒன்றாகிய மூட்டாஜிலா, தன்னை நீதிக்கும் ஒற்றுமைக்குமான குழுவாக அறிவித்துக்கொள்கிறது. பகுத்தறிவு சிந்தனை அடிப்படையிலான இந்தக் குழு, கி.பி.8 முதல் 10ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் பாஸ்ரா, பாக்தாத் ஆகிய நகரங்களில் தழைத்திருந்தது. திருக்குரான் அல்லாவோடு முடிவின்றித் தொடர்ந்திருக்க முடியாது என்பதால், அது மனிதர்களால் உருவாக்கப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்று அந்தக் குழு அறிவித்தது. அல்லாவின் ஆணைகள் பகுத்தறிவுச் சிந்தனைகளுக்கும் விசாரணைகளுக்கும் காரண காரியங்களுக்கும் (ஜிதிஹாத்) பொருத்தமானவைதான் என்று அவர்கள் வாதிட்டனர். நல்லதையும் கெட்டதையும் தெளிவாகப் பிரித்துக் காட்டுகிற இறுதியான ஏற்பாடு அதுவே என்றும் அவர்கள் நம்பினர். அபாசித் அரசின் ஆட்சியாளரான அல்–மாமுன், குரான் பற்றிய மூட்டாஜிலா கண்ணோட்டம்தான் சரியானது என்று ஏற்றுக்கொண்டார்.

கிரேக்கத் தத்துவத்தையும் ஆழ்ந்து படித்தவரான அல்–மாமுன், ஷரியா சட்டத்தை மாற்றி, ஏற்புத்தன்மையுள்ள, தாராளமான போக்குள்ள கிரேக்க சட்டங்களைப் பின்பற்றலாம் என்று விரும்பினார். கிரேக்கத் தத்துவ நூல்களையும், உலகின் பல்வேறு பகுதிகளையும் சார்ந்த இதர முக்கிய நூல்களையும் அரபு மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டுவர வேண்டும் என்று அவர் விரும்பினார். கிரேக்கத் தத்துவமானது பல இஸ்லாமிய கருத்தாளர்களையும் கவர்ந்துள்ளது. இஸ்லாமிய பழமை வாதத்திற்கு சவால் விடுப்பதாகவும் அமைந்துள்ளது. அபாசித் கலிபாட்டே காலகட்டத்தில் ஜிதிஹாத் ஒரு உச்ச நிலையில் இருந்தது. 9ம் நூற்றாண்டில் ஜிதிஹாத் கதவுகள் மூடப்பட்டன. அதற்கு பதிலாக தக்லித் காலகட்டம் தொடங்கியது. இஸ்லாமிய சட்டக் கல்வியில் முன்உதாரணங்களை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதே தக்லித் அணுகுமுறையாகும். சமூக மாற்றங்களைக் கருத்தில் கொள்ளாமல், தற்காலப் பிரச்சனைகள் குறித்த ஞானம் இல்லாமல் கண்ணை மூடிக்கொண்டு ஃபட்டுவாக்கள் பிறப்பிக்கப்படுவதால் அவை ஒரு பிரச்சனையாகின்றன.

### ஃபாட்வாக்களும் முஸ்லிம் பெண்களும்

இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் தொடங்குகிற வரையில் இஸ்லாமிய சட்டம் என்பது வளர்ந்து வரும் ஒரு கல்வியாக இருந்தது. அக்பர் தனது முற்போக்கான பார்வையுடன் 'தீன் இலாஹி' அமைப்பை ஏற்படுத்தினார். ஷாஜகானின் மகனாகிய இளவரசர் தாரா ஷிகோ, வேதகால உபநிஷத்துகளை பாரசீக மொழியில் மொழிபெயர்க்கச் செய்தார் (இவரை பின்னர் ஔரங்கசீப் கொலை செய்தார்.) இந்தியாவில் இரண்டு மதங்களும் ஒரே மாதிரியான போதனைகளைத்தான் கூறுகின்றன, ஒரே வேறுபாடு மொழி மட்டுமே என்றார் அவர். 1772ம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் கொண்டு வந்த திட்டம் உரிமையியல் நீதிமன்றங்களையும், குற்றவியல்

நீதிமன்றங்களையும் ஏற்படுத்த வழி செய்தது; வாரிசு உரிமை, திருமணம் உள்ளிட்டவற்றில் இந்துக்களும் முஸ்லீம்களும் தங்களது சொந்த தனிநபர் சட்டங்களை பின்பற்றுவதற்கான உரிமைகளுக்கு பாதுகாப்பு அளித்தது; 1791ம் ஆண்டில் ஹேஸ்டிங்ஸ் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரபு மொழியிலிருந்து 'ஹிடாயா' (வழிகாட்டி) நூலை ஆங்கிலத்தில் சார்லஸ் ஹேமில்டன் மொழி பெயர்த்தார். எழுத்துப்பூர்வமான அந்தப் புத்தகத்தை பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் சார்ந்திருந்த நிலையில், ஷரியா சட்டத்தை உருவாக்கும் முயற்சி நின்று போனது. மேற்கத்திய சிந்தனைகளின் தாக்குதல்களிலிருந்து தங்களது நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக மௌலானா முகமது காசிம் நானோத்வி உள்ளிட்டோர் 'தருல் உலும் தியோ' என்ற அமைப்பை ஏற்படுத்தினர்.

அப்போதிருந்து, தருல் உலூம் அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட தருல் இஃப்தா பிறப்பித்து வருகிற ஃபத்வாக்கள் வாஹாபி பழமைவாத இஸ்லாமிய கோட்பாடுகளிலிருந்தும் ஃஹனாபி நீதிமுறைச் சிந்தனையிலிருந்தும் கருத்துகளை எடுத்துக்கொண்டதாக இருந்து வருகின்றன. இதனால் கடுமையான பாதிப்புக்குள்ளாகிறவர்கள் முஸ்லீம் பெண்கள்தான். ஏனெனில், பழமைவாத ஃபாட்வாக்கள் பெண்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் முடக்குவதாக இருக்கின்றன. பெண்களை தங்களது கணவர்களுக்கு பணிவிடை செய்யக் கடமைப்பட்டவர்களாகவும், ஒரு சில உரிமைகள் மட்டுமே கொண்டவர்களாகவும்தான் இந்த பட்டுவாக்கள் நடத்துகின்றன. ஆண்களைப் பொறுத்தவரையில் தங்களது மனைவிமார்களின் உடல்களையும் அவர்களது செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஃபாட்வாக்கள் வழங்குகின்றன. பெண்கள் தங்களது கணவர்களின் பாலியல் தேவைகளை நிறைவேற்றுகிற, குழந்தைகளைப் பெற்றுத்தருகிற, வீட்டு வேலைகளை கவனித்துக்கொள்கிற கருவிகளாக மட்டுமே மாற்றுகின்றன. இது இஸ்லாம் மார்க்கத்தின் உண்மையான போதனையல்ல என்பதை விலக்க வேண்டியதில்லை.

திருக்குரானில் பெண்களுக்கு சமஉரிமைகள் தரப்பட்டிருப்பதாகவும், தங்களது வாழ்வாதாரத்திற்கான வருவாயைத் தேடிக்கொள்வதற்கு முழு சுதந்திரம் அளிப்பதாகவும் ஹஸ்கர் அலி இன்ஜினியர் கூறக்கூடும். தாங்களது வருமானத்தை நிர்வகிப்பதற்கும் எவ்வித கட்டுப்பாடும் இன்றி தங்கள் விருப்பம் போல் அதைச் செலவிடுவதற்கும், கணவர்களிடமிருந்து பராமரிப்புச் செலவு பெறுவதற்கும் உடலின் கவர்ச்சிகரமான அங்கங்களை வெளிப்படுத்தாத அளவிற்கு தாங்கள் விரும்பும் ஆடைகளை அணிவதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்றும் அவர் வாதிடக்கூடும். தங்களது சுய முடிவுப்படி கணவன்மார்களை மணமுறிவு செய்வதற்கும், அறிவை வளர்த்துக்கொள்வதற்கும், மசூதிகளில் தொழுகை நடத்துவதற்கும், பல வகையான தொழுகை முறைகளைக் கொண்டவர்களை அழைத்து வருவதற்கும், காஜிகளாக செயல்படுவதற்கும், காஜிகளாகப் பொறுப்பளிப்பதற்கும், இதர நடவடிக்கைகளுக்கும் உரிமை இருக்கிறது என்ற வாதமும் வைக்கப்படுகிறது. பெண்களின் உரிமைகள் குறித்து குரானில் 'சுரா அல் நிசா' என்ற ஒரு முழு அத்தியாயமே இருக்கிறதேயன்றி (இதுபோல் ஆண்களின் உரிமைகள் குறித்து தனி அத்தியாயம் இல்லை), பெண்களின் கடமைகள் குறித்து சொல்லப்படவில்லை. பெண்களுக்கு கடமைகளை மட்டுமே கொடுத்துவிட்டு ஆண்களுக்கு உரிமைகளை வழங்கியுள்ள சமுதாயத்தை தலைகீழாக மாற்றுவதற்கும் ஒரு சமநிலையை ஏற்படுத்துவதற்கும் வழிகாட்டல்கள்தான் குரானில் உள்ளன.

அண்மையில் பிறப்பிக்கப்பட்ட ஒரு ஃபாட்வாவில், குடும்பத்தை பராமரிப்பதற்கான செலவுக்காகத்தான் என்பதாக அல்லாமல், மற்ற ஆண்களோடு ஏதேனும் நிறுவனங்களில் வேலை செய்து பெண் பொருளீட்டுவது என்பது "ஹராம்" ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு வேளை அந்தப் பெண்களின் சம்பாத்தியம் குடும்பத்தைப் பராமரிப்பதற்காகத்தான் என்றால், வேலைக்குச் செல்லும் பெண் வேலை நேரம் முழுவதும் தலை முதல் பாதம் வரை மூடி இருக்க வேண்டும் என்றும் அந்த ஃபாட்வா கூறுகிறது! காஷ்மீரில் முற்றிலும் பெண் குழந்தைகளே இடம் பெறும் இசைக் குழு ஒன்று அமைக்கப்பட்டபோது அதை தடை செய்யும் வகையில் ஒரு ஃபாட்வா பிறப்பிக்கப்பட்டது. தொலைக்காட்சிப் பார்ப்பது, இசை கேட்பது போன்ற செயல்களும் ஃபாட்வாக்கள் மூலம் தடை செய்யப்பட்டுள்ளன. சுஃபி தர்காக்களுக்குள் பெண்கள் நுழையக்கூடாது என்று தடை விதிக்கும் ஃபாட்வா ஒன்றும் பிறப்பிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியதாகும்.

சுஃபி தர்காக்கள் பெருமளவுக்கு அனைவரையும் உள்ளே அனுமதிப்பவை. அதற்குள்ளேயே பெண்கள் நுழையக்கூடாது என்று அந்த ஃபாட்வா கூறுகிறது. 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தருல் உலூம் பிறப்பித்த ஒரு ஃபாட்வாவில் பெண்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. ஒரு வேளை கண்டிப்பாக வாக்களித்தாக வேண்டுமென்றால்,

முகத்திரை அணிந்துகொண்டு போகலாம் என்று அந்த ஃபாட்வா கூறியது. அதே நேரத்தில் பெண்கள் தேர்தல்களில் கண்டிப்பாக போட்டியிடக்கூடாது என்றும் அந்த ஃபாட்வா கட்டளையிட்டது. நல்ல வேளையாக முஸ்லிம் சமுதாயம் இத்தகைய ஃபாட்வாக்களுக்கு எப்போதுமே கட்டுப்பட்டிருப்பதில்லை.

முஸ்லிம் சமுகத்தின் எழுத்தறிவு நிலை, பின்னடைந்த கல்வி மற்றும் சமூகப் பொருளாதாரம், பாதுகாப்பின்மை, மதச்சார்பற்ற கல்வி நிறுவனங்களை நாடுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பது ஆகிய காரணங்களால், இந்த சமூகத்தில் உள்ள ஏழை மக்கள் முறையான பயிற்சி பெறாத இமாம்கள் (மசூதிகளின் தொழுகைத் தலைவர்கள்) பிறப்பிக்கும் ஃபாட்வாக்களைக்கூட புனிதச் சட்டங்களாக எடுத்துக்கொள்கிறார்கள். சமுக ரீதியாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு ஆறுதலும் ஆதரவும் தரக்கூடிய முக்கியமான பணியை மத அமைப்புகள் செய்ய முடியும்.

ஆணாதிக்க மதிப்பீடுகளின் அடிப்படையிலும், முஸ்லிம் சமுதாயத்தில் நிலவும் பாலின பாகுபாடுகளின் அடிப்படையிலும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறவர்கள் பெண்கள்தான். ஒரு பெண் தனது கணவர் கண்ட கனவைப் பற்றி பக்கத்து வீட்டுக்காரரிடம் கூறியிருக்கிறார். அந்தக் கனவில் கணவர் மூன்று முறை "தலாக்" சொன்னாராம். இதைச் சொல்லி சிரித்துவிட்டு அந்தப் பெண் போய்விட்டார். ஆனால், அந்தப் பக்கத்து வீட்டுக்காரர் மசூதியின் இமாமைப் பார்த்து அந்தக் கனவைப் பற்றி கூறியிருக்கிறார். உடனே அந்த இமாம் கனவில் தலாக் சொன்னாலும் கூட மணமுறிவு உறுதியாகியிருக்கிறது என்றும், அதன் பிறகு கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாழ்வது 'ஹராம்' (தடை செய்யப்பட்டது) என்றும் கூறி, இருவரும் உடனடியாக பிரிந்துவிட வேண்டும் என்றும் கட்டளையிட்டிருக்கிறார்.

ஃபாட்வா பிறப்பிக்கப்படுவதில் ஒரே சீரான தன்மை என்பது இல்லை. பல நேரங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடான ஃபாட்வாக்கள் பிறப்பிக்கப்படுகின்றன. முஃப்திகளும், இமாம்களும் எந்த நீதிமுறைக் கோட்பாட்டைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அந்த ஃபாட்வாக்களின் தன்மை அமைகிறது. ஹனாஃபி, ஹன்பாலி, ஷஃபி, சன்னி பிரிவினரிடையே உள்ள மாலிகி என பல்வேறு கோட்பாட்டுப் பிரிவுகள் உள்ளன. நடுத்தர வர்க்கத்தினரும், படித்தவர்களும் ஃபாட்வா வியாபாரத்தில் கூட ஈடுபடுகிறார்கள். "பொருத்தமான" மஜாப் (கோட்பாட்டுப் பிரிவு) அமைப்பின் இமாமை அணுகி, தங்களது நோக்கத்திற்கேற்ற ஃபாட்வா பிறப்பிக்க வைக்கின்றனர்.

### செய்ய வேண்டியது என்ன ?

குடிமக்கள் அனைவருக்கும் நாட்டின் அரசமைப்பு சாசனம் சார்ந்த, மதச்சார்பற்ற நீதிமன்றங்களை நாடுகிற வாய்ப்பு அமைவது மிகவும் விரும்பத்தக்கது. நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க முறை சார்ந்த மத நிறுவனங்களுக்கும், கடவுளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்ற நம்பிக்கைக்கும், ஏழை எளிய மக்கள், குறிப்பாக சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் எளிதில் இரையாகிறார்கள்.

ஃபாட்வா பிறப்பிப்பது சட்டவிரோதமான செயல் அல்ல, ஆனால், அது யாரையும் கட்டுப்படுத்தாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது வரவேற்கத்தக்கது. குடிமக்களில் எவர் மீதும் எந்த ஒரு ஃபாட்வாவையும் கட்டாயப்படுத்தித் திணிக்க முடியாது. பாதிக்கப் படுகிறவர், ஃபாட்வா செயல்படுத்தப்படுவதை எதிர்த்து, உரிய தீர்வினை நாட முடியும். நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றம் இதற்கு மேல் சொல்லிவிட முடியாது. ஃபாட்வாக்கள் யாரையும் கட்டுப்படுத்துவதல்ல என்பதைப் பற்றிய விழிப்புணர்வு கிராமங்களிலும், ஓரளவு நகரமாக உள்ள பொதுவாக முஸ்லிம் சமுகத்திற்கும், குறிப்பாக பெண்களுக்கும் ஏற்படுத்தப்பட வேண்டும். சாத்தியமுள்ள இடங்களில் உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வரவேற்கப்பட்டு கொண்டாட்டக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

அரசமைப்பு சாசன கட்டமைப்பிற்கு உட்பட்டு நீதிமன்றங்கள் இஸ்லாமிய கட்டமைப்புக்குள் முஸ்லிம் பெண்கள் உரிமைகளுக்காகவும் சட்ட வாய்ப்புகளுக்காகவும் ஏராளமாகச் செய்துள்ளன. மணமுறிவு செய்யப்படும் முஸ்லிம் பெண்களுக்கு உரிய நியாயமான பராமரிப்பு செலவுத் தொகை கிடைக்கச் செய்வது, ஒரே விசாரணையில் மணமுறிவு அளிக்கப்படும் வாய்மொழி அறிவிப்பு சட்டவிரோதமானது என அறிவித்திருப்பது, குழந்தைகளின் பாதுகாப்பு வாரிசுரிமை, குடும்ப வன்முறைக்கு உள்ளாகும் முஸ்லிம் பெண்களுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட பல சாதகமான தீர்ப்புகள் வந்துள்ளன. முஸ்லிம் பெண்கள் இந்த வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்திக்கொண்டு சிறப்பான உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**ஆதாரம்: Economic & Political WEEKLY**
**ஆகஸ்ட் 2, 2014 VOL XLIX No.31**

# மாநிலத்திற்கு உள்ளேயே அப்புறப்படுத்தப்பட்ட மேற்கு உத்தரபிரதேச முஸ்லிம்கள்

– கஸாலா ஜமில்

*மேற்கு உத்தர பிரதேசத்தின் முஸாபர்நகர் வன்முறைகளில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களிடையே அந்த அச்சமும், மிரட்டலுக்கு உள்ளாவதும் இன்னமும் தொடர்கிறது. அவர்கள் அடைக்கலம் புகுந்த முகாம்களின் அவலமான நிலைமைகள் போதாதென்று, அரசாங்கத்தின் தெளிவற்ற வரையறைகளும், வெளிப்படைத் தன்மையற்ற நிவாரண நடவடிக்கைகளும் அவர்களது துயரத்தை அதிகப்படுத்தியுள்ளன. அவர்களது வாழ்க்கையை வேதனைமிக்கதாக மாற்றிய, அதில் அவர்களது வாழ்வாதாரங்களைப் பறித்த பகைப் பிரச்சாரங்கள் மேலோங்கியுள்ள பகுதிகளிலிருந்து இப்போதும் அவர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில், காவல் நிலையங்களில் புகார் பதிவு செய்தவர்கள் அந்தப் புகார்களை திரும்பப் பெற்றுக்கொண்டால்தான் ஊர் திரும்ப முடியும் என்ற நிலையில் இருக்கிறார்கள்.*

2014 மே மாதம் முதல் நான் உத்தர பிரதேச மாநிலத்தின் முஸாபர்நகர், ஷாம்லி மாவட்டங்களுக்கு பல முறை சென்று வந்திருக்கிறேன். மதவெறி வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களோடும், கடந்த ஓராண்டு காலமாக அவர்களுக்காகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற சமூக ஆர்வலர்களோடும் உரையாடியிருக்கிறேன். முஸாபார்நகர், ஷாம்லி மாவட்டத்தின் காந்த்லா ஆகிய நகரங்களில் தங்கி, இப்போதும் அகதி முகாம்களில் இருப்போரோடும், வாடகை வீடுகளிலோ, தங்களுக்குக் கிடைத்த இழப்பீட்டுத் தொகையைக்கொண்டு வாங்கிய மனைகளிலோ, வீடுகளிலோ குடியிருப்போர்களோடும் பேசினேன்.

2013 செப்டம்பரில் மத உணர்வுகளின் அடிப்படையில் ஒரு பகுதி மக்களைத் திரட்டுகிற வேலை தொடங்கியது. அது மேற்கு உத்தர பிரதேசத்தில் குறைந்தது நான்கு மாவட்டங்களில் முஸாபர்நகர், ஷாம்லி, பாக்பத், மீரட் ஆகிய மாவட்டங்களில் – பரவி பாதிப்புகளை ஏற்படுத்தியது. பிரதான ஊடகங்களிலும் பொது விவாதங்களிலும் அது ‘முஸாபர்நகர் கலவரங்கள்’ என்று குறிப்பிடப்பட்டது. இந்தச் சொல்லாடல் இரண்டு அம்சங்களை மறைக்கிறது. முதலாவதாக, திட்டமிட்ட முறையில் ஒரு பகுதி மக்கள் திரட்டப்பட்டார்கள், தேர்தலுக்கு முன் வாக்குகளை ஒரு பக்கமாக குவியச் செய்யும் நோக்கத்துடன் அந்த முயற்சி நடந்தது என்ற அம்சம் மறைக்கப்படுகிறது.

இரண்டாவதாக, நேரடியான வன்முறைத் தாக்குதல்கள் முஸாபர்நகர் மாவட்டத்தில்தான் பெருமளவுக்கு நடந்தன என்ற போதிலும், ஷாம்லி மாவட்டத்தில் தீவிரமான முறையில் அதேபோல மத அடிப்படையில் மக்களை அணிதிரட்டுகிற வேலை நடந்ததால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக அந்த மாவட்டத்திலிருந்து ஏராளமானோர் வெளியேறினார்கள் என்ற அம்சம் மறைக்கப்படுகிறது. இந்த நான்கு மாவட்டங்கள் மட்டுமின்றி ஷஹாரன்பூர், முராதாபாத் உள்ளிட்ட மேற்கு உ.பி. வட்டாரங்கள் முழுவதுமே இப்படி மதவெறி அடிப்படையில் ஒரு பகுதி மக்கள் திரட்டப்படுவதும் ஒரு பகுதி மக்கள் வலுக்கட்டாயமாக புலம்பெயர்வதும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. விசாரணைக்கு உள்ளாக்கப்பட வேண்டிய சில பிரச்சனைகளை முன்னுக்குக் கொண்டுவருவதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம். சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்காகவும் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகவும் நடந்த சம்பவங்கள் குறித்த தகவல்களைத் திரட்ட வேண்டிய அவசியமும் உள்ளது.

ஷாம்லி, முசாபர்நகர் மாவட்டங்களின் ஆட்சியர்களை, பாதிக்கப்பட்டவர்களுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சமூகப் பணியாளர்களோடு சென்று நான் சந்தித்தேன். நிலவரம் குறித்தும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கப்படுவது எந்த அளவில் இருக்கிறது என்பது குறித்தும், இடம்பெயர்ந்த குடும்பங்கள் குறித்தும், மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் இந்த வன்முறைகள் தொடர்பான குற்றவியல் வழக்குகளை எவ்வாறு கையாளுகின்றன என்பது குறித்தும், புலம்பெயர்ந்தவர்களுக்கு அரசாங்கத்தாலும் என்.ஜி.ஓ. அமைப்புகளாலும் செய்யப்படும் மறுகுடியமர்வு முயற்சிகள் குறித்தும் பல விவரங்களைத் தெரிந்துகொள்ள அந்தச் சந்திப்புகள் உதவின.

## அரைகுறை நிவாரணங்கள்

எனக்கு ஏற்பட்ட முதல் எண்ணமே, ஒரு சில பகுதிகளில் மட்டும் மற்ற பகுதிகளைவிட அதிகமான நிவாரணப் பணிகள் நடந்துள்ளன என்பதுதான். 2014 மே மாதம் நான் சென்றிருந்தபோது, பெரும்பாலான அமைப்புகள் மேற்கொண்டிருந்த நிவாரண நடவடிக்கைகள் முடிவுக்கு வந்திருந்தன, அல்லது முடியும் நிலையில் இருந்தன. திறந்தவெளியில் வசிப்பது பெரிய பிரச்சனையாக இருக்கிறது என்று பலர் கூறினார்கள். ஆயினும், பொதுவாக அவர்கள் பல்வேறு அமைப்புகளும் தனிமனிதர்களும் வழங்கிய உதவிகள் குறித்து தங்களது மனநிறைவைத் தெரிவித்தனர். அந்த உதவிகளால்தான் தாங்கள் பசியால் வாடாமல் இருக்க முடிந்தது என்று கூறினார்கள். இங்கே முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய தகவல் என்னவென்றால், பெரும்பாலான நிவாரணப் பணிகளை தனிப்பட்ட முஸ்லிம்களும், முஸ்லிம் அமைப்புகளுமே மேற்கொண்டன என்பதுதான் (அவர்கள் அந்த வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, வேறுபகுதிகளிலிருந்தும் வந்தவர்களாவர்.) ஆக்ஸ்பாம் போன்ற சில பெரிய தொண்டு அமைப்புகள் அக்கறையோடும், கூர்மதியோடும் பயனுள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டன. அது பாராட்டுப் பெற்றது. மற்றபடி, பொதுவாக நாட்டில் இத்தகைய பேரிடர் நிலைமைகள் ஏற்படுகிறபோதெல்லாம் முன்னுக்கு வருகிற பெரும்பாலான என்.ஜி.ஓ. அமைப்புகள் இந்தப் பகுதிகளுக்கு ஏனோ வரவில்லை. அப்படி வந்த அமைப்புகளும் கூட, சில அடையாளப்பூர்வ பணிகளுக்குப் பிறகு திரும்பிச் சென்றுவிட்டன.

முஸ்லிம் சமயத்தைச் சேர்ந்த அமைப்புகளின் பணிகள் போதுமானவையாக இல்லை. அதற்கு முக்கியமான காரணம் இத்தகைய நிலைமைகளைக் கையாள்வது குறித்த அனுபவமும், அதற்காகப் பயற்சி பெற்றவர்களும் அந்த அமைப்புகளிடம் இல்லாமல் போனதுதான். அந்த அமைப்புகளும் தனி மனிதர்களும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டது என்பது மத உணர்வின் அடிப்படையிலும் தங்களது சமூகம் சார்ந்த ஒருமைப்பாட்டு உணர்வின் அடிப்படையிலும்தான். ஆகவே, பயனுள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில் அவர்களது சேவைகளில் பற்றாக்குறை இருந்தது. கார்ப்பரேட் நிறுவனங்கள் போல் செயல்படும் என்.ஜி.ஓ. அமைப்புகள் இந்த முஸ்லிம் அமைப்புகளோடு இணைந்து செயல்பட தயாராக இல்லை. இந்த அம்சங்கள் அனைத்துமாகச் சேர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கான நீண்டகால, விரிவான கண்ணோட்டங்களை உருவாக்க இயலாமல் போனது.

## இழப்பீடு: தெளிவற்ற வரையறைகள்

புலம்பெயர்ந்த சில குடும்பங்கள் இழப்பீடாக ரூ.5 லட்சம் நிதி பெற்றுள்ளன (மதவெறி வன்முறைக்கு உள்ளானதற்காகவும், தங்களது உரிமைகள் பறிக்கப்பட்டதற்காகவும் மாநில அரசால் வழங்கப்பட்ட மிகப்பெரிய தொகை இதுதான்). குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் மரணத்திற்கும் ஏற்பட்ட காயங்களுக்குமான இழப்பீடுகள் தனித்தனியாக வரையறுக்கப்பட்டுள்ளது. வன்முறைகளில் கொல்லப்பட்டதாக சாட்சிகளால் குறிப்பிடப்பட்டவர்களின் உடல்களை கண்டுபிடிக்க இயலவில்லை. அவர்கள் இறந்து போய்விட்டார்கள் என்பதற்கான ஆதாரங்களையும் புலனாய்வு அமைப்புகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால், அந்த குடும்பங்களுக்கு இழப்பீடுகள் கிடைக்கவில்லை.

வீடுகளுக்கும் வீட்டில் இருந்த பொருள்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்காக என தனியாக இழப்பீடுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், ஏற்பட்ட சேதங்களை நிரூபிப்பதற்கான நடைமுறைகள் கடுமையானதாக அவர்களது இழப்பீட்டுக் கோரிக்கைகளை எளிதில் தள்ளுபடி செய்யத்தக்கதாக இருக்கின்றன. வன்முறை நடந்த நேரத்தில் குறிப்பிட்ட கிராமத்தில் குடியிருந்ததற்கான ஆதாரத்தை சம்பந்தப்பட்ட குடும்பம் தர வேண்டும் என்பது ஒரு விதி. பொருள்களுக்கான இழப்பீட்டைப் பொறுத்தவரையில் அதிகபட்சத் தொகையாக ரூ.25,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல குடும்பங்கள் தங்களது கிராமங்களில் வன்முறைகள் வெடிக்கும் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டதைத் தொடர்ந்து தங்களது உடைமைகளை அப்படியே போட்டுவிட்டு வீடுகளைவிட்டு வெளியேறிவிட்டனர். அவ்வாறு முன்கூட்டியே வெளியேறியதால் கொலை வெறித் தாக்குதல்களிலிருந்து அவர்கள் தப்பித்தனர். ஆனால், அவருடைய உடைமைகள் சூறையாடப்பட்டன, கொள்ளையடிக்கப்பட்டன தீக்கிரையாக்கப்பட்டன. இன்றளவும் இது நடந்துகொண்டிருக்கிறது.

குடும்பம் என்பதை வரையறுப்பதும் ஒரு பெரும் பிரச்சனையாக உள்ளது. திருமணமான ஒரு தம்பதி அவர்களது இளம் குழந்தைகள் ஆகியோர் ஒரு தனி குடும்பமாக கருதப்படுகிறார்கள். திருமணமான மகன்கள் (அல்லது சகோதரர்கள்) கூட்டுக் குடும்ப உறுப்பினர்களாக சேர்க்கப்படக் கூடாது என்று விதி உள்ளது. ஆகவே, அவர்கள் தனி இழப்பீடுகளைத்தான் பெற வேண்டும். தனி குடும்பம் என்பதை வரையறுப்பதற்கான திட்டவட்டமான விதிகளையோ, வெளிப்படையான நடைமுறைகளையோ

மாவட்ட நிர்வாகங்கள் உருவாக்கவில்லை. இரண்டு மாவட்டங்களிலும் இரண்டு மாறுபட்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இழப்பீடுகளுக்கான இத்தகைய தெளிவற்ற நடைமுறைகள் காரணமாக சட்டப்பூர்வமான, மறுவாழ்வு சம்பந்தமான பிரச்சனைகள் எழுவது மட்டுமல்லாமல், குடும்பங்களுக்கு உள்ளேயும் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான போட்டிகள் காரணமாக இந்த சமூகத்திற்கு உள்ளேயும் போதுமான இணக்கமோ, ஒருமைப்பாடோ இல்லாமல் போகிறது.

வன்முறைகளாலும் கட்டாய வெளியேற்றத்தாலும் பாதிக்கப்பட்டு இந்த முகாம்களில் தங்கியிருந்தவர்களில் ஓரளவு வசதி உள்ளவர்கள் முகாம்களைவிட்டு வெளியேறிவிட்டார்கள். ஆனால், வழியற்ற ஏழைகள் இன்னமும் முகாம்களிலேயே தங்கியிருக்கிறார்கள். கிராமங்களில் சமூக ஆதாரம் என்பது மக்களின் வாழ்க்கைக்கும், வாழ்வாதாரத்திற்கும் மிக முக்கியமானதாகும். இவர்களது பிரச்சனையில் அத்தகைய சமூக ஆதாரம் இல்லாமல் போவதை வரம்புக்குட்பட்ட சட்டப்பூர்வ, நிர்வாக ரீதியான வரையறுப்புகளால் ஈடுசெய்துவிட முடியாது. வன்முறை நடந்து ஓராண்டுக்குப் பிறகும் முகாம்களிலேயே அவலமான நிலைமைகளோடு வாழ்ந்துகொண்டிருக்கிற தங்கியிருக்கிற மக்களின் மறுவாழ்வுக்கான நடைமுறைகளில் பல மடங்கு ஆக்கத்திறன் வாய்ந்த அணுகுமுறைகள் தேவை. கிராமங்களிலிருந்து எந்த அளவிற்கு முஸ்லிம்கள் வெளியேறியிருக்கிறார்கள் என்பது குறித்தும் அவர்களது உடைமைகளுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் எந்த அளவிற்கு இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்பது குறித்தும் மதிப்பிட வேண்டிய அவசியமும் உள்ளது.

முசாபர்நகர் மாவட்டத்தின் பாசிகலான் முகாமிற்கும், ஷாம்லி மாவட்டத்தின் நூர்பூர், பஞ்ஜீத், தாபேரி குர்த், சுன்ஹேத்தி, மாலக்பூர் முகாம்களுக்கும் நான் பலமுறை சென்று வந்திருக்கிறேன். இந்த இரண்டு மாவட்டங்களிலும் 22 முகாம்கள் உள்ளன. ஷாம்லி மாவட்டத்தின் ஹைரானா தோட்டத்தில் சுமார் 250 குடும்பங்கள் மாலக்பூர், தாபேரி குர்த், நூர்பூர் குர்கான், சுன்ஹேத்தி, பர்னாவி ஆகிய கிராமங்களில் உள்ள வனத்துறை நிலங்களில் அவலமான நிலையில் வசிக்கின்றன. அந்தக் குடும்பங்களில் பெரும்பாலானவை முஜாபர் நகர் மாவட்டத்தின் சோராம் கிராமத்திலிருந்து வந்தவை. மேலும் பல குடும்பங்கள் மீரட் மாவட்டத்தின் பூரா மஹாதேவி, முசாபர்நகர் மாவட்டத்தின் சக்ரோலி, பராவுத் குத்பா, குத்பி, போரா, ஷாம்லி மாவட்டத்தின் பாஜூ, பித்வாடா, பாக்பத் பகுதியைச் சேர்ந்த சூப் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள்.

தற்போதைய குளிர்காலத்திலேயே இந்த மக்களின் மறுவாழ்வுக்கான புதிய, அவசர முயற்சிகள் குறித்து வலியுறுத்தப்பட வேண்டும். எந்த அளவிற்கு பிரச்சனைகள் உள்ளன, அவற்றுக்கு தீர்வு காண்பதில் மாநில அரசும் மாவட்ட நிர்வாகங்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதை வரையறுப்பதற்காக இந்த முகாம்களின் நிலைமைகள் குறித்து விரிவாக மதிப்பிடப்பட வேண்டும்.

### தொடரும் வெளியேற்றங்கள்

காந்த்லா நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஏற்கெனவே 70 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். அங்கு மற்ற பகுதிகளிலிருந்து ஏராளமான முஸ்லிம்கள் புலம்பெயர்ந்து வந்து சேர்ந்துள்ளனர். இழப்பீடு தொகை பெறமுடிந்த பலர் இந்தப் பகுதிகளிலேயே வாடகை வீடுகளிலோ, இழப்பீட்டுத் தொகையைக் கொண்டு விலைக்கு வாங்கிய வீடுகளிலோ நிரந்தரமாகக் குடியேறிவிட்டார்கள். நேரடியாக வன்முறைகள் நடக்காத கிராமங்களிலிருந்தும் ஒட்டுமொத்தமாக முஸ்லிம் குடும்பங்கள் அச்சத்தின் காரணமாக வெளியேறியுள்ளன. பாதுகாப்பு தேடி இப்போதும் பல குடும்பங்கள் காந்த்லா பகுதிக்கு வந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறு மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்கிற பிரச்சனையையும் மத அடிப்படையில் மக்கள் புரிந்து வாழும் நிலைமையையும் என்.ஜி.ஓ. திட்டங்களால் மட்டும் சமாளித்துவிட முடியாது. இத்தகைய மக்களை "கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள்" என்று அரசு எந்திரம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், மக்கள் இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் தங்கள் பகுதிகளைவிட்டு வேறு பகுதிகளுக்கு இடம் மாறிக்கொண்டிருக்கிறபோது, அரசு வன்முறைகளால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கும் கிராமங்களுக்கும் மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் என தனது கொள்கையை சுருக்கிக்கொண்டுவிட முடியாது. சாவிலிருந்தும் வன்முறைகளிலிருந்தும் தப்பிப்பதற்காக ஓடிய மக்களை அதற்காகத் தண்டித்துவிட முடியாது. எந்த அளவிற்கு வன்முறைகள் வெடிக்கக்கூடும் என்ற அச்சுறுத்தல்கள் உள்ளன என்பதை மதிப்பிடுவதற்கான முயற்சிகளும், இடம் பெயர்ந்த மக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வன்முறைகள் நடந்த கிராமங்களிலிருந்து வெளியேறியவர்களும் சரி, வன்முறைகள் நடக்காத கிராமங்களிலிருந்து வெளியேறியவர்களும் சரி தங்கள் ஊர்களுக்கு திரும்பிச் செல்லத் தயாராக இல்லை. அவர்களது பாதுகாப்பற்ற நிலைமை வேறு பல அம்சங்களோடும் பிரிக்க முடியாதபடி சம்பந்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளில் பரவலாக பகைமைப் பிரச்சாரங்கள் நடந்துள்ளன. தங்களுடைய மரியாதைகள் சிதைக்கப்பட்டுவிட்டன என்றும் கிராம சமுதாயத்தில் தங்களுக்கு இருந்த மதிப்பான இடங்கள் சீர்குலைக்கப்பட்டுவிட்டன என்றும் முஸ்லிம்கள் கூறுகிறார்கள். தங்கள் கிராமங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இந்து மக்கள் தாங்கள் திரும்பி வருவதை விரும்பவில்லை என்றும் முஸ்லிம்கள் கூறுகிறார்கள். முஸ்லிம்கள், குறிப்பாக ஏழை முஸ்லிம்கள் பல அவமதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள், பொது வெளிகளில் அவர்களுக்கு பாதகமான சூழல்கள் உருவாகியுள்ளன. பேருந்துகள் உள்ளிட்ட பொது வசதிகளை பயன்படுத்துகிற "முஸ்லிம்கள் போன்ற" தோற்றம் உள்ளவர்கள் கூட துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற தகவல்களும் உள்ளன.

குறிப்பிட்ட பிரிவு மக்கள் மத அடிப்படையில் திரட்டப்படுவதற்கு முன்பாகவே கூட மேற்கு உ.பி. வட்டாரங்களில் சாதிய வன்மம் நிறைந்த சாதிய பிரச்சனைகள் பெருமளவுக்கு முன்னுக்கு வந்துள்ளன. ஆணாதிக்க வன்மத்தோடும் சம்பந்தப்பட்டதாக அந்தப் பிரச்சனைகள் உள்ளன. சட்டத்தின் ஆட்சி என்பதற்கு மரியாதை இருந்ததில்லை. ஜாட், குஜ்ஜார், ராஜ்புத் போன்ற சாதிகளைச் சேர்ந்தவர்கள் குற்றமுறு நோக்கத்துடன் பல்வேறு அத்துமீறல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். அது இப்போது மத அடிப்படையில் ஒரு பகுதி மக்கள் திரட்டப்படுவதாகவும், வன்முறையாகவும் மாறியுள்ளது. வெளிப்படையான வெறுப்பும், தொடர்ச்சியான அச்சுறுத்தல்களும் மேலோங்கியுள்ளன. இந்த சாதிகளைச் சேர்ந்தோர் தங்கள் கிராமங்களில் உள்ள தலித் மக்களைச் சந்தித்து, வன்முறைகளிலும் கொலைவெறித் தாக்குதல்களிலும் ஈடுபடத் தூண்டியதோடு அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்திருக்கிறார்கள். இது அவர்களுக்கு வன்முறைகளில் இறங்குவதற்கான ஆட்கள் கிடைக்கச் செய்ததோடு, கிராமப்புற மக்களிடையே மதவாத சித்தாந்தங்களின் அடிப்படையில் பிளவுகள் ஏற்படுவதற்கும் இட்டுச் சென்றுள்ளது. கிராமப்புற சமூகங்களிடையே ஏற்கெனவே இருந்த சாதிய அடிப்படையிலான எல்லைக்கோடுகள் இப்போது "இந்து வாக்குகள்" என அணிதிரட்டுவதன் பெயரால் மீண்டும் வரையப்படுகின்றன. கொள்ளையடிப்பதிலும் சூறையாடுவதிலும், ஏன் கொலைகளிலும் கூட ஈடுபட்டவர்கள் எந்த நம்பிக்கையில் அதையெல்லாம் செய்தார்கள்? சாதிய அமைப்பு தகர்ந்துவிடும் என்ற வாக்குறுதியை நம்பி அப்படிச் செய்தார்களா? அல்லது இதனால் ஆதாயங்கள் கிடைக்கும், தண்டனைகளிலிருந்து பாதுகாப்பும் கிடைக்கும் என்ற வாக்குறுதியை நம்பி அப்படிச் செய்தார்களா?

உச்சநீதிமன்றம் நிர்ப்பந்தத்தால்தான் குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மிகத் தாமதமாகவே குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். எதிர்பார்த்தது போலவே, கைது செய்யப்பட்டோரில் கணிசமானோர் தலித்துகள். கிராம சமூகங்களிடையேயான சாதிய எல்லைக்கோடுகள் அப்படியே தொடர்கின்றன என்பதையும், சாதிய படிநிலைகளை ஒழிப்பதற்கான எந்த முயற்சியும் நடைபெறவில்லை என்பதையுமே இது காட்டுகிறது.

**சமாதான சமரசங்கள்**

கிராம மக்களின் சமூகப் பின்னலமைப்பில் இவ்வாறாக கிழிசல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் முஸ்லிம் மக்கள் கிராமங்களுக்குத் திரும்பி வருகிற வாய்ப்பு தடுக்கப்பட்டுள்ளது. கடந்த மே மாதம், கிராமங்களைவிட்டு வெளியேறிய பல குடும்பங்கள் என்னிடம், தங்களுடைய ஊரைச் சேர்ந்தவர்கள் அவர்களது "தவறுகளுக்காக" வருத்தம் தெரிவிக்க வேண்டும், தங்களை ஊர் திரும்ப அனுமதிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாகக் கூறினர். லிசார் கிராமத்தில், வன்முறையில் மூன்று பேரை இழந்த (மூன்று பேர் சடலங்களும் கிடைக்கவில்லை) ஒரு குடும்பத்துடன் பேசிக்கொண்டிருந்தபோது, கிராம மக்களை அவர்கள் மன்னிக்கத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "ஆம். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரையும் உண்மையிலேயே கொலை செய்தது யார் என்பது எங்களுக்குத் தெரியாது. எனவே, ஒட்டுமொத்த கிராமத்தையும் குற்றவாளியாக்க நாங்கள் விரும்பவில்லை. ஊர் பெரியவர்கள் முன் வந்து வருத்தம் தெரிவித்திருந்தால் நாங்கள் ஊர் திரும்பியிருப்போம்," என்று பதிலளித்தனர்.

யாரும் அப்படி வருத்தம் தெரிவிக்கவில்லை. ஆனால், காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கைகள் பதிவாகி, கைதுப் படலம் தொடங்கிய பிறகு "சமாதான" முயற்சிகள் ஆரம்பமாகின. குற்றம்சாட்டப்பட்டோர் குடும்பங்களாலும், ஜாமீன் மறுக்கப்பட்டோர்

குடும்பங்களாலும் அல்லது தலைமறைவாக இருப்போர் குடும்பங்களாலும் வழக்குப் பதிவு செய்தவர்களைச் சந்தித்து, அவர்கள் தாராளமாக ஊர் திரும்பலாம் என்றும், அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் தங்களது வழக்குகளை விலக்கிக்கொள்வது அல்லது பலவீனப்படுத்துவதுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த "சமாதான" (இதை சமரசம் என்றும் சொல்லலாம்) இந்த சமாதான ஏற்பாட்டிற்கு இன்னொரு அர்த்தமும் இருக்கிறது – அதாவது, ஊரைவிட்டு வெளியேறிய, ஆனால், வழக்கு எதுவும் பதிவு செய்யாதவர்கள் கிராமத்தினரால் தொடர்ந்து கைவிடப்பட்டிருப்பார்கள் என்பதுதான்அந்த அர்த்தம். அவர்கள் திரும்பி வருவதால் "கிராமத்திற்கு எந்த ஆதாயமும் இல்லை" என்று அவர்களிடம் கூறப்பட்டிருக்கிறது. துயரமான நிலையில் வந்த விலைக்கு உடைமைகளை விற்பது என்பது பரவலாக நடக்கிறது. ஓரளவு வசதி உள்ளவர்கள் தங்களது உடைமைகளை தக்க வைத்துக்கொள்ள முடிகிறது. ஆனால், ஏழைகள் தரைமட்ட விலைக்கு தங்களுடைய பொருள்களை விற்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

இன்றைய நவீன நீதிமுறை அமைப்பில் குற்றங்களுக்கு பொறுப்பேற்பதைவிடவும், கௌரவமும் மரியாதையுமே மிக உயர்வானவை என்று கருதப்படும் கலாச்சாரத்தில் இத்தகைய அணுகுமுறைகள் நீதி குறித்த காலாவதியாகிப் போன சிந்தனைகள் தொடர்வதையே காட்டுகின்றன. பன்முக பல்வேறு சமூகங்களும் சேர்ந்து வாழும் அமைப்பில் முஸ்லிம்கள் தொடர்ந்து இருப்பதற்கான உரிமை மறுக்கப்படுகிற, குடிமக்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு உள்ள உரிமைகள் மறுக்கப்படுகிற பிற்போக்குத்தனத்தைத்தான் இத்தகைய கண்ணோட்டங்கள் தூண்டிவிடுகின்றன. அனைவரையும் சமமாகப் பார்க்கிற கண்ணோட்டம் இல்லாததால், குறிப்பாக அந்தக் கண்ணோட்டம் காவல் அமைப்புகளிடமும் நீதி அமைப்புகளிடமும் இல்லாமல் போவதால், ஏற்கெனவே உள்ள பாதுகாப்பற்ற நிலைமை மேலும் மோசமடைகிறது.

பல சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தல்கள், மக்கள் இவ்வாறு மதவாத அடிப்படையில் பிரிக்கப்படுவது தங்குதடையின்றித் தொடர்கிறது என்பதை எடுத்துக்காட்டின. பாதுகாப்பின்மை, மதப் பகைமை, திட்டமிட்ட வெறுப்புப் பிரச்சாரம், ஆணாதிக்க கருத்தாக்கங்கள் ஆகியவை ஆபத்தான முறையில் ஒன்றோடு ஒன்று கலந்திருக்கின்றன. இது இந்தப் பகுதிகளின் அன்றாட வாழ்க்கையில், ஒரு கலவரச் சூழலை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே, இட்டுக்கட்டப்பட்டு கிளப்பிவிடப்பட்டுள்ள 'லவ் ஜிஹாத்' விவகாரங்களோடு, இப்போது சாதாரண சாலை விபத்துகள், திருட்டுகள் போன்றவற்றிக்கும் கூட மதச்சாயம் பூசப்படுகிறது. அது புதிய மோதல்களுக்கு இட்டுச் செல்கிறது.

இழப்பீடுப் பிரச்சனை பொருளாதார நிலை சார்ந்த மரபுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கலவரத்திற்கு முன் வசதியாக வாழ்ந்த பல குடும்பங்கள் இப்போது, தங்களைவிட தாழ்வானவர்கள் என்று நினைத்திருந்த குடும்பங்களின் பொருளாதார நிலைமைக்கு இறங்கிவிட்டன. இழப்பீடுப் பிரச்சனை சமூக உறவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்பு சிறப்பான நிலையில் இருந்த குடும்பங்கள் கூட இன்று தங்கள் வாழ்க்கையை புதிதாக அமைத்துக்கொள்ள போராடிக்கொண்டிருக்கின்றன.

பொதுவாக மேற்கு ஒப்பீட்டளவில் வளமான பகுதிதான். இந்தப் பகுதிகளில் வழங்கப்படும் கூலிகள் அப்படி ஒன்றும் குறைவானவையல்ல. இப்பகுதியில் உள்ள தொழிலாளிவர்க்கத்தினர் அவ்வப்போது குறுகிய காலத்திற்கு, அதுவும் அருகில் உள்ள நகரங்களுக்கு அல்லது கிராமங்களுக்குக் கூட புலம்பெயர்வது உண்டு. ஏழைகளால் தங்களது இழப்புகளை சமாளித்து நிற்க முடியவில்லை. இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான அவர்களுக்கு இல்லை. அவர்களில் பலர் தங்களது புதல்விகளின் திருமணத்திற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தை பறிகொடுத்திருக்கிறார்கள். வீடுகளில் பணம் இருக்கிறது என்ற தகவல் பரவியதைத் தொடர்ந்து பல வீடுகளில் தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் மக்கள் தங்களது சேமிப்பை வங்கிகளில் போட்டு வைக்க விரும்பவில்லை என்பதையும் இது காட்டுகிறது.

## தொடர் இழப்புகள்

குடும்பங்கள் இவ்வாறு இடம்பெயர்வதால் குழந்தைகளும் இளைஞர்களும் பாதியிலேயே படிப்பை நிறுத்த வேண்டியதாகிறது. ஒரு கல்வியாண்டை (சிலரது விஷயத்தில் இரண்டு கல்வியாண்டுகளை) இழக்க வேண்டியதாகிறது. பல இளம் பெண்கள்/பெண்கள் அண்டை அயலில் உள்ளவர்களுக்காக ஆடைகள் தைத்து கொடுப்பதன் மூலம் தங்களது வருவாய்க்கு வழி ஏற்படுத்தியிருந்தனர். இப்போது தங்களது வாடிக்கையாளர்களை மட்டுமல்ல, தையல் எந்திரங்களையும் அவர்கள் இழந்துவிட்டார்கள். இந்தத் துயரம் போதாது என்று, தங்களது நேரத்தைப் பயன்படுத்தி பயனுள்ள முறையில் எதையும் செய்ய முடியாமல் போவது,

அவர்களால் கையாள முடியாத நிலைமையாக உருவாகியுள்ளது. தற்போதைய நிலைமையை சமாளிப்பது என்பது பலருக்கு அவர்களது சக்திக்கு அப்பாற்பட்டதாகியிருக்கிறது. தங்களுடைய இன்றைய தேவைகள் பற்றி மட்டுமே கவனம் செலுத்துவதாகவும் புதிய வாழ்க்கையைத் தொடங்குவது தொடர்பான பெரிய கேள்விகளைத் தவிர்ப்பதாகவும் என்னிடம் கூறினர்.

குழந்தைகளுக்கு மேற்கூறிய இழப்புகள் மட்டுமல்லாமல் நட்பு உள்ளிட்ட முக்கிய அம்சங்களையும் அவர்கள் இழக்க நேரிட்டுள்ளது. நடந்த வன்முறைகள், துரோகங்கள் பற்றிய கதைகளைக் கேட்கக் கேட்க, அவர்களுடைய மனமெல்லாம் அவர்களும் எதிர்காலம் பற்றிய பீதியும் ஊர் திரும்புவதில் நாட்டமின்மையுமே நிரம்பியிருக்கின்றன. வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்ட நிலையில், பல குடும்பங்களுக்குள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே பாலினப் பாகுபாட்டு விவகாரங்கள் தீவிரமாகியுள்ளன. அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட பல திருமண முயற்சிகள் வெற்றிபெறவில்லை. ஏனென்றால், அந்த ஏற்பாடுகள் பெரும்பாலும், மத அமைப்புகளிடமிருந்து வரக்கூடிய நிதி உதவிகளை எதிர்பார்த்தே செய்யப்பட்டன. ஆனால், அப்படிப்பட்ட உதவிகள் வரவில்லை. பல திருமண ஏற்பாடுகள், பாலியல் வன்முறை அச்சுறுத்தலின் பின்னணியில் பெற்றோர்கள் அவர்களது மகள்கள் தொடர்பான தங்களது பொறுப்பை எப்படியாவது நிறைவேற்றிவிட முயன்றதால் அவசரமாகச் செய்யப்பட்டன. கடுமையான வரதட்சணை நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் பல திருமணங்கள் நடைபெறவில்லை என்றும் நான் கேள்விப்பட்டேன். ஆணாதிக்க சமுதாய அமைப்பில், பெண்ணையும் குடும்பத்தையும் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளைவிட "வேறு முக்கியமான" விஷயங்களுக்குத்தான் மதிப்பளிக்கப்படுகிறது என்பதுதான் இதற்குக் காரணமாக இருக்க முடியும்.

அதே வேளையில் குடிமக்கள் உரிமை என்பது ஒரு முக்கிய பிரச்சனையாக உருவெடுத்து வருகிறது என்பதும், குடியுரிமைச் சமத்துவம் என்பதை மக்கள் தெளிவாக வலியுறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதும் நம்பிக்கை அளிக்கும் அம்சமாகும். அரசு நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்பது மட்டுமல்லாமல், நியாயமாக நடந்துகொள்வது போல் காட்டிக்கொள்ளவும் முயலவில்லை என்பதே மக்களுடைய குற்றச்சாட்டு. மாநில புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி.) பற்றி ஏராளமான புகார்கள் கூறப்படுகின்றன. தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடமும், சிறுபான்மையினர் ஆணையத்திடமும் அத்தகைய புகார்கள் நிறைய பதிவாகியுள்ளன. கடந்த அக்டோபரில் அன்று, கலவரத்தின்போது பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்கள் தங்களது புகார்களைப் பதிவு செய்வதில் கூட இன்னும் வெற்றி பெறவில்லை என்றும், ஆயினும் அவர்கள் அதில் உறுதியாக இருக்கிறார்கள் என்றும் நான் கேள்விப்பட்டேன். காலப் போக்கில் நாட்டின் பிற பகுதி மக்கள் இதையெல்லாம் மறந்துவிடக்கூடும். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில், தங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அயராமல் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

**தொடர்கதையாகும் அச்சுறுத்தலும் அச்சமும்**

இந்தக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கிறபோது, ஷியாமலி மாவட்டத்தின் கைரானா மாவட்ட ஆட்சியர், சில வனத்துறை அதிகாரிகளுடன் டிசம்பர் 6 அன்று மாலக்பூர் பகுதிக்குச் சென்று, அங்கு அடைக்கலம் புகுந்திருந்தவர்களை அடுத்த 72 மணி நேரத்திற்குள் வெளியேறியாக வேண்டும் என்று வற்புறுத்தியத் தகவல் எனக்கு வந்து சேர்ந்தது. இவ்வாறு கெடு நிர்ணயித்தது, முகாம்களில் தங்கியிருப்போரிடையே பதற்ற நிலையை அதிகரிக்கச் செய்தது. சமூக ஆர்வலர்களை அவர்கள் தொடர்புகொண்டு இதில் தங்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டார்கள். சமூக ஆர்வலர்கள் மற்றவர்களோடு தொடர்புகொண்டு, முகாம்களில் இருப்போர் தொடர்ந்து அங்கேயே இருப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் அல்லது பொருத்தமான வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்றும், அந்த இடம் அவர்கள் அச்சமின்றி தங்களது வாழ்க்கையை தொடர்வதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சிய நிர்வாகத்தை வற்புறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த மக்கள் தொடர்ந்து இழப்பீடு பெற வேண்டும் என்ற பேராசையுடன்தான் முகாம்களில் இன்னும் தங்கியிருக்கிறார்கள் என்று நிர்வாகம் கருதுவதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். மேலும், இந்த மக்கள் "கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள்" அல்ல என்பதால் அவர்களை இழப்பீடு பெறத் தகுதியுள்ளோர் பட்டியலில் சேர்க்க இயலாது என்று அரசு நிர்வாகம் கருதுகிறது என்றும் சமூக ஆர்வலர்கள் கூறுகிறார்கள்.

**(கட்டுரையாளர் புதுதில்லியில் உள்ள சமூக மேம்பாட்டு மன்றத்தில் ஆய்வாளராக உள்ளார்.)**

ஆதாரம்: ***Economic & Political WEEKLY, December 20, 2014 VOL XLIX NO. 51***

# இராமநாதபுர மாவட்டம் சுந்தரபாண்டிய பட்டிணம் காவல்நிலையத்தில் 14.10.2014 அன்று சையது முகமது என்ற 22 வயது வாலிபர் சுட்டுக் கொல்லப்பட்டது சம்பந்தமாக நடத்தப்பட்ட கள ஆய்வு அறிக்கை

**சம்பவத்தின் சுருக்கம்:**

14.10.2014 அன்று சையது முகமது (வயது 22) த/பெ. அல்லா பிச்சை (அ) காட்டு பாவா S.P.பட்டிணம் காவல் நிலையத்தை சேர்ந்த 3 காவலர்களால் மெக்கானிக்கைக் கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக மதியம் சுமார் 2:30 மணி அளவில் காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். சுமார் 5 மணி அளவில் காவல்நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்கள் காவல் நிலையத்திலிருந்து 3 முறை துப்பாக்கியால் சுடும் சத்தத்தைக் கேட்டனர். பின்னர் காவல்துறையினர் விசாரணையின்போது, உதவி ஆய்வாளர் காளிதாஸை சையது முகமது கத்தியால் குத்தியதாகவும் தற்காப்பிற்காக உதவி ஆய்வாளர் காளிதாஸ் தன்னுடைய அரசாங்கத் துப்பாக்கியால் 3 முறை சுட்டதாகவும் அதனால் சையது முகமது இறந்து போனதாகவும் செய்தி வெளியிட்டனர். காவல் நீதி மற்றும் சித்ரவதை ஒழிப்பு பிரச்சாரத்தின் சார்பாக V. இந்திரா, மூத்த ஒருங்கிணைப்பாளர்– மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, J. காஜா மொய்தீன், வழக்கறிஞர், திருச்சி, K.A. மேத்யூஸ், மாநில குழு உறுப்பினர் – காவல்நீதி மற்றும் சித்ரவதை ஒழிப்பு பிரச்சாரம் (CCJAT), R. பாபு, ஒருங்கிணைப்பாளர் –SASY மற்றும் S. விஜயசங்கர், வழக்கறிஞர் ஆகியோர் அடங்கிய ஒரு கள ஆய்வுக் குழுவை மேற்படி சம்பவத்தைப் பற்றி விசாரிக்க அனுப்பினர். இந்தக் குழு 17 மற்றும் 18.10.2014 தேதிகளில் கள ஆய்வை மேற்கொண்டனர்.

**கள ஆய்வுக்காக சந்தித்த நபர்கள்:**

1. திருமிகு. ரமேஷ் – த/பெ.காளிமுத்து, மருந்துக்கடை உரிமையாளர், எஸ்பிபட்டிணம்
2. திருமிகு. ஆஸாத் – ஆம்புலன்ஸ் ஓட்டுநர், எஸ்பிபட்டிணம்
3. திருமிகு. சரவணன் – த/பெ. கணேசன், முடிதிருத்தும் கடை உரிமையாளர், எஸ்பிபட்டிணம்
4. திருமிகு. ஜாஹிர் – த/பெ. சிக்கந்தர், எஸ்பிபட்டிணம்
5. சையது முகமதுவின் குடும்பத்தினர்
6. திருமிகு. மயில்வாகனன் – காவல்துறை கண்காணிப்பாளர்
7. டாக்டர். ஜவாஹிருல்லாஹ் – சட்டமன்ற உறுப்பினர், இராமநாதபுரம் தொகுதி

**சம்பவத்தின் பின்னணி:**

1. மெக்கானிக் அருள்தாஸின் கடை எஸ்பிபட்டிணம் D3 காவல்நிலையத்திற்கு எதிரில் உள்ளது.
2. 14.10.2014 அன்று மதியம் சுமார் 2.30 மணியளவில் சையது முகமது அருள்தாஸின் கடைக்குச் சென்று தன்னுடைய நண்பர் சாலிபுவின் ஹீரோ ஹோண்டா ஸ்ப்ளெண்டர் வாகனத்தைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர், அது சிறு கைகலப்பாக மாறியது.
3. மெக்கானிக் அருள்தாஸ் சையது முகமதுவிடமிருந்து ஒரு கத்தியைக் கைப்பற்றியதாகவும் அதனை எடுத்துச் சென்று எஸ்பிபட்டிணம் காவல்நிலையத்தில் வாய்மொழியாகவும் சையது முகமது தன்னை கொல்ல வந்ததாக ஒரு புகார் தெரிவித்திருக்கிறார்.
4. பின்னர் சுமார் 3 மணி அளவில் சையது முகமது மீண்டும் வந்து தனது நண்பரின் வாகனத்தைக் கேட்டுள்ளார்.
5. அப்போது காவலர் துரைகண்ணன் உள்பட 3 பேர் காவல்நிலையத்திலிருந்து வந்து சையது முகமதுவை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.
6. சுமார் 4 மணியளவில் உதவி ஆய்வாளர் காளிதாஸ் காவல்நிலையத்திற்கு வந்த பிறகு காவல்நிலையத்திற்கு அருகில் கடை வைத்திருப்போர் சையது முகமதுவின் வலி தாளாமல் கதறிய சத்தத்தை சுமார் 5 மணி வரை கேட்டுள்ளனர்.
7. சுமார் 5 மணியளவில் சையது முகமதுவின் அலறல் சத்தம் நின்றுவிட்டது. சிறிது நேரத்தில் காவல்நிலையத்தில் இருந்து 3 முறை துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. அந்த சத்தத்திற்கு பிறகு காவல்நிலையத்தின் சுற்றுச் சுவரைத் தாண்டி பொதுமக்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

8. காவல்நிலையத்திலிருந்து TMTJ ஆம்புலன்ஸ் டிரைவர் ஆஸாத்தை அவரது கைப்பேசியில் அழைத்து அவரை 5 நிமிடத்திற்குள் காவல்நிலையத்திற்கு ஆம்புலன்ஸ் வாகனத்தோடு வரச் சொன்னார்கள். ஆஸாத் ஆம்புலன்ஸ் வாகனத்தோடு அவசரமாக வந்தபோது அவரை உள்ளே விடாமல் வாகனத்தை காவல்நிலையத்தின் சுற்றுச்சுவர் வாயிலிலேயே காவலர்கள் நிறுத்துவிட்டனர்.

9. அதேநேரம் உள்ளூரில் மருந்துக்கடை வைத்திருப்பவரான திரு. ரமேஷ் என்பவரை உடனே காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி காவல்நிலையத்திலிருந்து கைபேசியில் தகவல் தெரிவிக்கப்பட்டது. ரமேஷ் ஒருவர் மட்டும்தான் இந்த சம்பவத்தின்போது காவல்நிலையத்தினுள் அனுமதிக்கப்பட்டவராவார்.

10. ரமேஷ் காவல்நிலையத்தினுள் சென்ற உடன் உதவி ஆய்வாளர் திரு. காளிதாஸ் ரமேஷை தனது அறையின் வாயிலிலேயே சந்தித்து தனது கையில் இருந்த வெட்டுக்காயத்தைக் காட்டி தனது நரம்புகள் வெட்டுப்பட்டுள்ளனவா எனக் கேட்டுள்ளார். ரமேஷ் காயத்தை ஆராய்ந்துவிட்டு நரம்புகள் நன்றாக இருப்பதாகக் கூறியவுடன் காளிதாஸ் தனது காயத்திற்கு மருந்திட்டு கட்டு கட்டுமாறுக் கேட்டுள்ளார். அதற்கு ரமேஷ், தான் ஒரு தேர்ச்சி பெற்ற மருத்துவர் அல்ல என்று கூறி கட்டு கட்ட மறுத்துவிட்டார்.

11. உதவி ஆய்வாளர் காளிதாஸுடன் பேசிக்கொண்டிருக்கும்போது ரமேஷ், சையது முகமது உதவி ஆய்வாளர் காளிதாஸின் அறையில் படுத்துக் கிடப்பதைப் பார்த்தார். அப்போது சையது முகமதுவின் உடலிலோ அல்லது அந்த அறையிலோ ரத்தக்கறை எதுவும் இல்லை. மேலும் சையது முகமது அணிந்திருந்த வெள்ளை கலர் கைலியில் கூட எந்த இரத்தக்கறையும் இல்லை.

12. சுமார் 5.30 மணியளவில், அதாவது ஆம்புலன்ஸ் வந்து ஒரு மணி நேரம் கழித்தே அது காவல் நிலையத்தின் சுற்றுச்சுவரைத் தாண்டி உள்ளே அனுமதிக்கப்பட்டுள்ளது. சையது முகமதுவின் உடல் இரண்டு காவலர்களால் தூக்கி வரப்பட்டு ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றப்பட்டுள்ளது.

13. உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சேகர் அவர்கள் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ஆஸாத்திடம் வண்டியை எங்கும் வழியில் நிறுத்தக் கூடாது என்று கண்டிப்புடன் கூறியுள்ளார். மேலும் தான் ஒரு உதவி ஆய்வாளரை ஆம்புலன்ஸ் வண்டியில் அனுப்புவதாகவும் ஆஸாத் அவர் சொல்படியே கேட்டு நடக்க வேண்டும் என்றும், ஆஸாத் தன்னுடைய கைப்பேசியை தான் அனுப்பும் உதவி ஆய்வாளரிடம் கொடுத்துவிட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

14. இராமநாதபுரம் போகும் வழியில் உதவி ஆய்வாளரின் கைபேசிக்கு வந்த அழைப்பிற்கு பின் அவரது சொல்படி ஆம்புலன்ஸ் திருப்பாலைக்குடி காவல்நிலையத்திற்கு செலுத்தப்பட்டது.

15. அங்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மயில்வாகனன் மற்றும் காவல்துறை IG ஆகியோர் இருந்துள்ளனர். அவர்கள் ஆம்புலன்ஸ் வண்டிக்கு வந்து சையது முகமதுவின் உடலை பார்த்து சில புகைப்படங்கள் எடுத்துக்கொண்டனர். அதன் பின்னர் வண்டி இராமநாதபுரம் அரசினர் பொது மருத்துவமனைக்கு புறப்பட்டுச் சென்றது.

**திரு. ரமேஷ், மருந்துக்கடை உரிமையாளர்:**

சம்பவத்தன்று என்னை உடனடியாக காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி எனது கைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. உடனே நான் காவல் நிலையத்திற்குச் சென்றேன். அங்கு உதவி ஆய்வாளர் திரு. காளிதாஸ் அவர்கள் அவரது அறை வாயிலிலேயே காத்திருந்தார். அவர் என்னை தனது அறைக்கு அழைக்காமலேயே தனது கையை என்னிடம் காண்பித்து தனது கையில் இருந்த வெட்டு காயத்திற்கு கட்டு போடும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். ஆனால், அந்தக் காயமானது ஆழமற்றதாக மேலோட்டமாக மட்டுமே இருந்தது. உடனே நான், இந்த காயத்திற்கு மருந்திட்டு கட்டுவதற்கு நான் ஒன்றும் பட்டம் பெற்ற மருத்துவன் அல்ல என்று கூறி கட்டுப்போட மறுத்து விட்டேன். மேலும், உதவி ஆய்வாளரின் கையில் இருந்த காயமானது மேலோட்டமாக மட்டுமே இருந்ததால்அதற்கு கட்டுப்போடத் தேவையும் இல்லை. அப்போது இறந்துபோன சையது முகமது உதவி ஆய்வாளரின் அறையினுள் படுத்துக் கிடப்பதைப் பார்த்தேன். அவன் போதையில் மயங்கிக் கிடப்பதாக நினைத்தேன். அப்போது நான் சையதுவின் உடலிலோ, அவனது உடையிலோ அல்லது உதவி ஆய்வாளரின் அறையிலோ இரத்தக் கறை எதையும் பார்க்கவில்லை. அத்துடன் நான் எனது கடைக்குத் திரும்பி வந்துவிட்டேன். சிறிது நேரம் கழித்தே சையது முகமது காவல்நிலையத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாக எனக்குத் தெரிந்தது.

**ஆசாத், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்:**

சம்பவத்தன்று எனது கைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. அழைத்தவர், தான் எஸ்பிபட்டிணம் காவல்நிலையத்தில் இருந்து பேசுவதாகவும் அடிபட்ட ஒருவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருப்பதால் என்னை மிக அவசரமாக எஸ்பிபட்டிணம் காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில்

வரச்சொன்னார். நானும் மிக வேகமாக எஸ்பிபட்டிணம் காவல் நிலையத்திற்கு வந்தேன். ஆனால், அங்கிருந்த காவலர்கள் என்னைக் காவல் நிலைய சுற்றுச்சுவர் கதவின் அருகிலேயே நிறுத்தி விட்டனர். சுமார் ஒன்றரை மணி நேரம் காத்திருந்த பின்னரே நான் சுற்றுச்சுவரைத் தாண்டி அனுமதிக்கப்பட்டேன். அப்போதும்கூட காவலர்கள் என்னை ஆம்புலன்ஸ் வண்டியில் இருந்து இறங்க அனுமதிக்கவில்லை. அப்போது துணை கண்காணிப்பாளரும் அங்குதான் இருந்தார். இரு காவலர்கள் ஸ்ட்ரெச்சரில் வைத்து ஒருவரைத் தூக்கி வந்து ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றினர். ஆனால் அவரது உடல் அசைவற்று இருந்தது. இராமநாதபுரம் செல்லும் முன் துணை கண்காணிப்பாளர் அவர்கள் ஒரு உதவி ஆய்வாளரை என்னுடன் அனுப்பி, நான் அந்த ஆய்வாளரின் சொல்படியே நடக்கவேண்டும் என்றும், எனது கைபேசியை அவரிடம் கொடுத்துவிட வேண்டும் என்றும் கூறினார். நான் யாருக்கும் இது பற்றி எந்தவிதத்திலும் தகவல் கொடுக்கக்கூடாது என்றும் எச்சரித்தார். பின்னர் ஒரு உதவி காவல் ஆய்வாளர் ஆம்புலன்ஸ் வண்டியில் ஏறிய பின் நான் இராமநாதபுரம் நோக்கிப் புறப்பட்டேன். அப்போது என்னோடு வந்த உதவி ஆய்வாளரின் கைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. பேசி முடித்தபின் அந்த உதவி ஆய்வாளர் என்னிடம் வண்டியை திருப்பாலைக்குடி காவல் நிலையத்திற்கு செலுத்துமாறு கூறினார். அவர் சொல்படி நான் திருப்பாலைக்குடி காவல்நிலையத்திற்கு சென்றபோது அங்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மயில்வாகனன் மற்றும் ஐ.ஜி. ஆகியோர் அங்கு இருந்தனர். அவர்கள் இருவரும் ஆம்புலன்ஸ் வண்டிக்கு வந்து சையது முகமதுவின் உடலைப் பார்வையிட்டு சில புகைப்படங்கள் எடுத்த பின்னர் நான் இராமநாதபுரம் பொது மருத்துவமனைக்கு சையது முகமதுவின் உடலை எடுத்துச் சென்றேன்.

**சரவணன், முடி திருத்தும் கடை உரிமையாளர்:**

எனது கடைக்கு அருகில் உள்ள கடையில்தான் தாஸ் என்பவர் ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப் வைத்துள்ளார். சம்பவத்தன்று காலை இறந்துபோன சையது முகமது, தாஸின் கடைக்கு வந்து அவரது நண்பர் பழுது நீக்குவதற்காக கொடுத்திருந்த வண்டியைக் கொடுக்குமாறு வற்புறுத்தினார். அப்போது சையது முகமது போதையில் இருந்தார். அதனால் தாஸ் அந்த வண்டியை சையதிடம் கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டது. அப்போது சையது ஒரு கத்தியைக் காட்டி தாஸைக் கொன்றுவிடுவதாக மிரட்டினார். உடனே அருகில் இருந்த நாங்கள் அனைகூரும் சையதிடம் இருந்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டு அவர்கள் இருவரையும் விலக்கிவிட்டோம். சையது அந்த இடத்தை விட்டுச் சென்ற பின்னர் தாஸூம், தாஸின் அப்பாவும் காவல்நிலையத்திற்குச் சென்று கத்தியை ஒப்படைத்துவிட்டு வாய்மொழியாக சையது பற்றி ஒரு புகார் செய்துவிட்டு வந்துவிட்டனர். சிறிது நேரம் கழித்து சையது திரும்பி வந்து மறுபடியும் தாஸிடம் வண்டியைத் தருமாறு கேட்டுத் தகராறு செய்ய ஆரம்பித்தார். அப்போது காவல்நிலையத்தில் இருந்து துரைக்கண்ணன் மற்றும் 2 காவலர்கள் வந்து சையது முகமதுவை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அதன் பின்னர் காவல்நிலையத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. மாலை 5 மணிக்குமேல் மற்றவர்கள் சொல்லித்தான் எனக்கு சையது இறந்த விபரம் தெரிந்தது.

**ஜாஹிர் (காவல்நிலையத்திற்கு எதிரில் கடை வைத்திருப்பவர்):**

சம்பவத்தன்று மதிய வேளையில் எஸ்பிபட்டிணம் காவலர்கள் துரைக்கண்ணன் மற்றும் இருவர் சையதுவை அழைத்துச் செல்வதைப் பார்த்தேன். பின்னர் சிறிது நேரம் கழித்து சுமார் 4 மணி அளவில் உதவி ஆய்வாளர் காளிதாஸ் காவல் நிலையம் வந்தபிறகு சையது முகமதுவின் கதறல் சத்தம் கேட்க ஆரம்பித்தது. சுமார் ஒரு மணி நேரம் கழித்து சையதுவின் சத்தம் அடங்கிவிட்டது. சிறிது நேரத்திலேயே காவல்நிலையத்தில் 3 முறை துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. அதன் பின்னர், காவல் நிலையத்தில் உள்ள கிணற்றில் தூர் வாரிக்கொண்டிருந்த நபரையும் அங்கிருந்து காவலர்கள் உடனடியாக வெளியே செல்லுமாறு கூறி அனுப்பிவிட்டனர். துப்பாக்கிச் சத்தம் கேட்டதால் உடனே காவல்நிலையத்தின் அருகில் இருந்த நான் உட்பட சிலபேர் உள்ளே சென்று என்ன நடந்தது என்று பார்க்கச் சென்றோம். ஆனால், காவலர்கள் எங்களை காவல்நிலைய சுற்றுச்சுவரின் கதவை மூடிக்கொண்டு எங்களை உள்ளே அனுமதிக்கவே இல்லை. பின்னர் சிறிது நேரம் கழித்து உதவி ஆய்வாளர் காளிதாஸ் காவலர் துரைக்கண்ணனின் காரில் ஏறி செல்வதைப் பார்த்தோம். உள்ளே என்ன நடந்தது என்று எங்களுக்கு சரியாகத் தெரியவில்லை. சையது முகமது காலில் சுடப்பட்டதாகவே மக்கள் பேசிக்கொண்டனர். பின்னர் சுமார் 6 மணி அளவில் தொலைக்காட்சி செய்திகளின் வாயிலாகவே சையது முகமது சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி எங்களுக்குத் தெரிய வந்தது. அப்போதுகூட சையது முகமதுவை ஏதோ ஒரு தீவிரவாதியைப்போல சித்தரித்திருந்தனர்.

**சையது முகமதுவின் குடும்பத்தினர் (சஹூபர் அலி, சையதலி ஃபாத்திமா, நூர் முகமது):**

சையது முகமது சென்னையில் வேலை செய்துகொண்டு இருந்துவிட்டு கடந்த ஒரு வருடத்திற்கு முன்புதான் ஊருக்கு வந்து சேர்ந்தான். இங்கு அவன் ஒரு இறால் பண்ணையில் வேலை செய்து வந்தான். அவன் மெலிந்த தேகம் உடையவன். யாரோடும் வம்புக்கு செல்ல மாட்டான்.

அவன்மீது எந்த வழக்கும் இதுவரை எந்த காவல்நிலையத்திலும் இல்லை. ஆனால், தற்போது காவல்துறையினர் சையது முகமதுவை ஏதோ ஒரு தீவிரவாதியைப் போல சித்தரிக்கின்றனர். இது உண்மையில்லை. சம்பவத்தன்று, சையது முகமது கைது செய்யப்பட்ட தகவல் எங்களுக்குத் தெரிவிக்கப்படவேயில்லை. ஊர் மக்கள் எங்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்தன் மூலமாகவே சையது முகமது கைது செய்யப்பட்டதும் சுடப்பட்டு இறந்ததும் எங்களுக்குத் தெரியவந்தது. சையது முகமது தாஸ் என்கிற மெக்கானிக்கை கொலை செய்ய முயற்சித்ததாகத்தான் கைது செய்யப்பட்டார். ஆனால் அதற்காக சையதுவை சுட்டுக் கொன்றது எந்தவிதத்தில் நியாயம்? சையதுவை சுட்டுக் கொன்ற உதவி ஆய்வாளர் காளிதாஸைக் கைது செய்து அவர் மீது கொலை வழக்குப் பதிவு செய்து தண்டிக்கப்பட வேண்டும். மீண்டும் இதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறாமல் இருக்கும் வகையில் காளிதாஸுக்குக் கொடுக்கப்படும் தண்டனை பாடமாக அமைய வேண்டும்.



**மயில்வாகனன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்:**

என்னால் உங்களுக்கு இந்த வழக்கைப்பற்றிய தகவல் எதையும் சொல்ல முடியாது. இந்த வழக்கு நீதித்துறை நடுவரால் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கு சிபிசிஐடி பிரிவுக்கு மாற்றப்பட்டு உள்ளது. உதவி ஆய்வாளர் காளிதாஸ் பயன்படுத்திய துப்பாக்கி அவருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகும். உதவி ஆய்வாளர் காளிதாஸ் பயன்படுத்திய துப்பாக்கி தற்போது தடய அறிவியல் நிபுணர்களின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நீதித்துறை மற்றும் சிபிசிஐடி விசாரணை முடிவுற்ற பிறகே உதவி ஆய்வாளர் காளிதாஸ் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர். ஜவாஹிருல்லாஹ், சட்டமன்ற உறுப்பினர், இராமநாதபுரம்:**

சையது முகமது காவல்துறை ஆய்வாளர் காளிதாஸால் அடித்துக் கொல்லப்பட்டதை மறைப்பதற்காகவே சையது முகமது காளிதாஸைக் கத்தியால் கொல்ல முற்பட்டதாகவும், அதனால் தற்காப்புக்காகவே துப்பாக்கியால் சுட்டுள்ளார். இறந்து போன சையது முகமது மீது இதுவரை எந்த குற்ற வழக்கும் எந்தக் காவல்நிலையத்திலும் இல்லை. உதவி ஆய்வாளர் காளிதாஸ்மீது கொலைவழக்குப் பதிவு செய்து அவரைக் கைது செய்து விசாரணை செய்ய வேண்டும். மேலும், இதுவே காவல்துறையினரால் நடத்தப்பட்ட கடைசி போலி என்கவுன்டராக இருக்க வேண்டும். தமிழக அரசு சையது முகமதுவின் குடும்பத்தினருக்கு ஐந்து லட்ச ரூபாயை இழப்பீட்டுத் தொகையாக அறிவித்துள்ளது. அது மட்டும் போதாது. சையது முகமதுவின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசாங்க வேலை வழங்கப்பட வேண்டும். சில இந்து அமைப்புகள் தெரிவித்ததுபோல் இஸ்லாமிய மக்கள் கலவரத்தில் ஈடுபடாமல் மிகவும் அமைதியான முறையில் காவல்துறையினருக்கு மிகுந்த ஒத்துழைப்பு அளித்து வருகின்றனர்.

**கண்டறிந்தவைகள்:**

மெக்கானிக் அருள்தாஸ் சையது முகமது தன்னை கத்தியால் தாக்க வந்ததாக D3 எஸ்பிபட்டிணம் காவல்நிலையத்தில் புகார் அளித்ததன்பேரிலேயே சையது முகமது காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டிருக்கிறார். மெக்கானிக் அருள்தாஸின் தந்தையிடம் பின்னர்தான் எழுத்துபூர்வமான புகாரை காவல்துறையினர் பெற்றுள்ளனர். 3 காவலர்கள் 14.10.2014 அன்று சையது முகமதுவை மதியம் சுமார் 2.30 மணியளவில் காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். உதவி ஆய்வாளர் காளிதாஸ் காவல்நிலையத்திற்கு வந்த பிறகே காவல்நிலையத்திற்கு அருகில் இருந்த கடைக்காரர்கள் சையது முகமதுவின் அலறல் சத்தத்தைக் கேட்டுள்ளனர்.

- மாலை சுமார் 5 மணியளவில் சையது முகமதுவின் அலறல் சத்தம் நின்றுவிட்டதாகவும் சிறிது நேரத்திலேயே 3 முறை துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டதாகவும் காவல்நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

- துப்பாக்கியால் சுடும் சத்தம் பற்றி அறிந்துகொள்வதற்காக பொதுமக்களில் சிலர் காவல்நிலையத்திற்கு சென்றபோது அவர்கள் அனைவரும் காவல்நிலைய சுற்றுச் சுவரின் வாயிலிலேயே நிறுத்தப்பட்டனர். அடுத்த 10 நிமிடங்களில் உதவி காவல் கண்காணிப்பாளர் திரு. சேகர் அவர்கள் தன்னுடைய திருவாடனை அலுவலகத்திலிருந்து எஸ்பிபட்டிணம் காவல்நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். அடுத்த 5 நிமிடங்களில் TN 65 S7220 எண்ணுடைய ஆம்புலன்ஸ் வாகனம் எஸ்பிபட்டிணம் காவல்நிலையத்திற்கு வந்து சேர்ந்தது. ஆனால், அந்த வாகனத்தை காவல்நிலையத்திற்குள் அனுமதிக்காமல் காவல்துறையினர் சுமார் ஒரு மணி நேரம் காக்க வைத்துள்ளனர்.



• ராமநாதபுரம் அரசு பொது மருத்துவமனைக்குப் போகும் வழியில் ஆம்புலன்சில் வந்த உதவி ஆய்வாளருக்கு கைபேசியில் ஒரு அழைப்பு வந்ததன் பேரில் அவர் ஆம்புலன்சை திருப்பாலைக்குடி காவல் நிலையத்திற்கு செலுத்துமாறு உத்தரவிட்டார். திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் காவல் கண்காணிப்பாளர் திரு. மயில்வாகனன் மற்றும் ஐ.ஜி. ஆகியோர் இருந்தனர். அவர்கள் ஆம்புலன்சுக்கு வந்து சையது முகமதுவின் உடலைப் பார்வையிட்டு சிலப் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். திருப்பாலைக்குடி காவல் நிலையத்திலிருந்து இரண்டு காவலர்கள் ஆம்புலன்சில் ஏறிக்கொண்டபின் ஆம்புலன்ஸ் ராமநாதபுரம் அரசினர் பொது மருத்துவமனைக்குச் சென்றது.

- எஸ்பிபட்டிணத்தில் மருந்துக்கடை வைத்திருக்கும் ரமேஷ் என்பவருக்கு எஸ்பிபட்டிணம் காவல்நிலையத்திற்கு வரும்படி அழைப்பு வந்ததன்பேரில் அவர் அங்கு சென்றார். உதவி ஆய்வாளர் காளிதாஸ் ரமேஷை தனது அறையின் வாயிலிலேயே சந்தித்து தனது கையில் இருந்த வெட்டுக்காயத்தைக் காட்டி அதற்கு மருந்திட்டுக் கட்டும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், அந்த வெட்டுக்காயம் கட்டுப்போடும் அளவிற்கு ஆழமானதாக இல்லை.

- ரமேஷ் உதவி ஆய்வாளர் காளிதாஸிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அறையினுள் சையது முகமது படுத்துக்கிடப்பதைப் பார்த்தார். அப்போது சையது முகமது உடலிலோ, உடையிலோ அல்லது அந்த அறையிலோ துளி ரத்தம் கூட இல்லை. சையது முகமதுவின் உடல் அசைவற்று இருந்தது. ரமேஷ், சையது முகமது போதையில் படுத்துகிடப்பதாக நினைத்துக்கொண்டு அங்கிருந்து வந்துள்ளார்.

- ஒரு மனிதன் உயிரோடு இருக்கும்போது சுடப்பட்டால் அவரது உடலிலிருந்து ரத்தப்பெருக்கு ஏற்படும். ஆனால், இந்த வழக்கில் சையது முகமது மூன்று முறை சுடப்பட்டிருந்தாலும் ஒரு துளி ரத்தம் கூட அவரது உடலிலோ, அவர் அணிந்திருந்த வெள்ளை நிற வேஷ்டியிலோ அந்த அறையின் எந்தப் பகுதியிலும் இல்லை. ஆம்புலன்ஸ் வந்து சுமார் ஒரு மணி நேரம் கழித்தே அது காவல் நிலைய சுற்றுச்சுவரைத் தாண்டி உள்ளே அனுமதிக்கப்பட்டது. ஆனால், அதன் ஓட்டுநர் ஆசாத்தை காவலர்கள் வண்டியைவிட்டு இறங்க அனுமதிக்கவில்லை. இரண்டு காவலர்கள் சையது முகமதுவின் உடலை கொண்டு வந்து ஆம்புலன்சில் ஏற்றினர். அப்போது அங்கிருந்த துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு. சேகர் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ஆசாத்திடம் தான் ஒரு உதவி ஆய்வாளரை அவரோடு ஆம்புலன்சில் அனுப்புவதாகவும் ஆசாத் அவர் சொல்படியே நடக்க வேண்டும் என்றும் எச்சரித்து அனுப்பினார்.

**பரிந்துரைகள்:**

- பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள உதவி ஆய்வாளர் காளிதாசை உடனடியாக கைது செய்து கொலை குற்றத்திற்காக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். எஸ்பிபட்டிணம் காவல் நிலையத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட மற்ற 6 காவலர்களும் கைது செய்யப்பட்டு அவர்கள் மீதும் கொலைக் குற்றம் சுமத்தப்பட வேண்டும்.

- துணைக் கண்காணிப்பாளர் திரு. சேகர் சம்பவம் நடந்த சில நிமிடங்களிலேயே எஸ்பிபட்டிணம் காவல் நிலையத்திற்கு வந்து உதவி ஆய்வாளர் காளிதாசால் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்ட சையது முகமதுவின் மரணத்தை ஏதோ தனது தற்காப்பிற்காக காளிதாஸ் சுட்டுக்கொன்றதாக நாடகத்தை அரங்கேற்றுவதற்கு உதவியுள்ளார். ஆகவே, அவர் மீதும் கொலைக்கு உடந்தையாக இருந்ததற்காகவும் அதனை மறைப்பதற்கு துணைப் புரிந்ததற்காகவும் வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும். அரசாங்கமானது இந்த மாதிரியான காவல்துறை சித்ரவதைகளையும் மரணங்களையும் தடுப்பதற்காக அனைத்து காவல் நிலையங்களிலும் சி.சி.டி.வி. கேமராக்களைப் பொருத்த வேண்டும்.

- டி.கே.பாசு வழக்கின் வழிகாட்டுதலின்படி சையது முகமதுவின் குடும்பத்தாருக்கு கைது மெமோ கொடுக்காத காரணத்தால் எஸ்பிபட்டிணம் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர்கள், துணைக் கண்காணிப்பாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள 5 லட்சம் ரூபாய் இழப்பீடானது 10 லட்சம் ரூபாயாக உயர்த்தித் தரப்பட வேண்டும். அவர் குடும்பத்தில் ஒரு ஒருவருக்கு அரசாங்க வேலை அளிக்கப்பட வேண்டும்.

# வெறுப்பு என்னும் நெருப்பு

–அஜய் ஆஷிர்வாத் மஹாபிரஷாஸ்தா

*தில்லியில் திரிலோக்புரி பகுதியில் சமீபத்தில் நடந்த மதவெறி வன்முறை அங்கு சில நாட்களாக கனன்றுகொண்டிருந்த பதற்றத்தை கொழுந்துவிட்டு எரிய வைத்துள்ளது.*



இந்தத் தீபாவளியின்போது, அடித்தட்டு மக்கள் அதிகம் வாழ்கிற, தேசத் தலைநகரின் இதயமாகத் திகழும் திரிலோக்புரி பகுதியில் மத நல்லிணக்கம் தீக்கிரையானது. அக்டோபர் 23ல் தொடங்கி தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவர் மீது ஒருவர் கற்களை வீசி தாக்கிக்கொண்டதில், அங்கு நெருங்கி வாழும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த உழைப்பாளி மக்களிடையே இருந்து வந்த ஒருமைப்பாட்டுப் பாரம்பரியம் அழிக்கப்பட்டுவிட்டது.

1984ல் சீக்கியர்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலைக்குப் பிறகு இந்த பெருநகரத்தைச் சேர்ந்த முற்போக்கு அறிஞர்கள் மதவெறிப் பதற்றங்கள் நடக்காவண்ணம் தடுப்பதற்காக பெருமளவுக்கு வெற்றிகரமான முயற்சிகளை மேற்கொண்டனர். கடந்த இரண்டு வருடங்களாக வட இந்தியாவின் மற்ற பகுதிகளைப் போல் தில்லியும் சின்னச் சின்ன மதவெறிப் பதற்றத்தை சந்தித்து வந்திருக்கிறது. இது பெரிய அளவுக்கு வெளியே தெரிய வரவல்லை. தூண்டிவிடுவதற்கு நடந்த ஆரம்ப கட்ட முயற்சிகளுக்குப் பிறகு, எல்லா சமூகங்களையும் சேர்ந்த மதச்சார்பற்ற எண்ணம் கொண்டோரின் தலையீடுகள் காரணமாக அந்தப் பதற்ற நிலைமைகள் படிப்படியாக மங்கி மறைந்துவிட்டது.

தீபாவளி நாளில் திரிலோக்புரி கொழுந்துவிட்டு எரிந்தபோது அது பலருக்கு வியப்பளிக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு பாரதிய ஜனதா கட்சி தன்னுடைய பிரதம மந்திரி வேட்பாளராக நரேந்திர மோடியை முன்னிறுத்தியதிலிருந்தே சங் பரிவாரத்தினர் இந்து மக்களுக்கிடையே மத உணர்வுகளைக் கிளறிவிட்டு இஸ்லாமியர்களுக்கு எதிராக அந்த உணர்வுகளைத் திருப்புவதாக பல புகார்கள் தொடர்ச்சியாக வந்துகொண்டுதான் இருந்தன. பா.ஜ.க. ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு அடிக்கடி மதவெறி வன்முறைகள் நடக்கக்கூடும் என்பது, மோடி ஒரு தீவிர இந்துத்துவா தலைவர் அல்ல என்று நினைத்துக்கொண்டிருந்த பலரும் திகைத்துப்

போனார்கள். திரிலோக்புரி என்பது பல்வேறு வட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ள ஒரு பெரிய குடியிருப்புப் பகுதியாகும். 1947 பிரிவினையின்போது அகதிகளானவர்கள் அங்கு வசித்து வந்தனர். பின்னர் அவசர நிலை ஆட்சியின்போது, அன்றைய காங்கிரஸ் அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 22 சதுர அடி நிலம் வழங்கியது.



அதனால் திரிலோக்புரி ஒரு மிகப்பெரிய மறு குடியமர்வுப் பகுதியாக உருவெடுத்தது. 1984ன் சீக்கிய மக்களுக்கு எதிரான படுகொலைத் தாக்குதல்களின்போது மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில், மக்கள் நெருக்கமாக வாழும் திரிலோக்புரியும் ஒன்று. இதையடுத்து நிறைய சீக்கியர்கள் இந்தப் பகுதியை விட்டு வெளியேறினர். தற்போது இந்தப் பகுதி அந்த 22 சதுர அடி வீடுகளையும் பெரிய சேரிப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இங்கு குடியிருப்போர் பெரும்பாலும் வால்மீகி சமூகத்தையும் இஸ்லாமிய சமயத்தையும் சேர்ந்தவர்கள். மற்றவர்களில் பெரும்பாலானோர் கிழக்கு உத்தரபிரதேசத்திலிருந்தும், பீகாரிலிருந்தும் புலம்பெயர்ந்து வந்தவர்கள்.

இங்குள்ள பெரும்பாலான வால்மீகி சமூகத்தவர்கள் அரசாங்க துப்புரவுத் தொழிலாளர்கள். ஆகவே, இவர்கள் பெருமளவுக்குப் பொருளாதார ரீதியாகப் பாதுகாப்பாக இருப்பவர்கள். இந்தப் பகுதியில் இஸ்லாமியர்கள் சிறு கடை உரிமையாளர்களாகவும், வியாபாரிகளாகவும் உள்ளனர். புலம்பெயர்ந்தோர் தலைநகர் முழுவதும் சிறு சிறு வேலைகளைச் செய்பவர்களாக உள்ளனர். கடந்த காலங்களில் இப்பகுதியின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த இளைஞர்களிடையே நீடித்து வருகிற வேலையின்மைப் பிரச்சனை திருட்டு, சங்கிலி பறிப்பு, கள்ளச்சாராயம் உள்ளிட்ட சிறு குற்றங்கள் பெருகுவதற்குக் காரணமாகியுள்ளது. குற்றங்களில் ஈடுபடும் சிறு சிறு கும்பல்கள் இங்கு செயல்படுகின்றன. அந்தக் கும்பல்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் நடப்பதுண்டு. அதனால், இங்கு அடிக்கடி சண்டைகள் வெடிக்கின்றன. குடிபோதையின் காரணமாக ஏற்படும் இத்தகைய சண்டைகளுக்கு இதற்கு முன் மதச்சாயம் பூசப்பட்டது இல்லை என்று இப்பகுதி மக்கள் இந்தக் கட்டுரையாளரிடம் தெரிவித்தார்கள்.

அக்டோபர் 23 அன்று மாதா கி சௌக்கி என்ற சிறு தற்காலிக கோயிலின் முன்பாக வால்மீகி சமூகத்தையும் இஸ்லாம் சமயத்தையும் சேர்ந்த சிலருக்கும் இடையே ஏற்பட்ட சண்டை முழு அளவிலான மதக் கலவரமாக மாறியது. இரண்டு கும்பல்களும் கற்களை வீசித் தாக்கிக் கொண்டிருந்தபோது பொதுமக்கள் மும்முரமாக தீபாவளியை கொண்டாடிக் கொண்டிருந்தனர். மறுநாள் வால்மீகிகள் சிலர் திரண்டு சென்று இஸ்லாமியர்கள் வாழும் பகுதிகள் மீது கல்வீசித் தாக்கினர். இது முன்னாள் பாஜக சட்டமன்ற உறுப்பினர் சுனில் வைத்யா ஆதரவோடு நடந்ததாகக் கூறப்படுகிறது. இஸ்லாமியர்கள் திருப்பித் தாக்கினர். அக்டோபர் 25ம் தேதி அன்று மேலும் அதிகமான வன்முறைகள் நடந்தன, அதைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

***துக்கத்தை வெளிப்படுத்துவதற்காகத் தன்னைத்தானே சாட்டையால் அடித்து தண்டித்துக்கொள்வதை அடிப்படையாகக்கொண்ட அந்த டாஜியா ஊர்வலம் உண்மையில் முஸ்லிம்கள் தங்களுடைய பலத்தைக் காட்டிக்கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது என்று கூறும் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரகங்களும் வெளியிடப்பட்டன.***

போலீசார் வன்முறையாளர்களுக்கு துணை போனதாகவும், வன்முறைகள் நடந்த மூன்று நாட்களும் தாக்குதல் நடத்துவதற்கு வால்மீகிகளை போலீசார் ஊக்கப்படுத்தியதாகவும் பெரும்பான்மையான இஸ்லாமியர்கள் நம்புகின்றனர். “ஏன் முதல் நாளே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை? இந்தப் பகுதியே கொதித்துப் போயிருந்த நிலையிலும் போலீசார்

எங்களின் புகார்களுக்கு செவி சாய்க்கவில்லை'' என திரிலோக்புரி 27ம் பிளாக்கைச் சேர்ந்த டேனிஷ் கூறுகிறார்.

**முஸ்லிம்கள் "அந்நியர்கள்" என்றும், ஆனால் அவர்களுக்கு தில்லியின் மையமான மாவட்டங்களில் நிலம் இருக்கிறது என்றும் அந்தப் பிரச்சாரங்களில் கூறப்பட்டது.**

கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதியைப் பார்வையிட்ட சமூக சேவகர்களும் போலீசார் இந்த குற்றச்செயலுக்கு துணை போனதாக தெரிவிக்கின்றனர். பாஜக தலைவர் வைத்யா, திரிலோக்புரி காவல் நிலைய அதிகாரி ஆகியோர் மீது புகார் கொடுக்கப்பட்டும், அவர்களது பங்கு குறித்து விசாரிக்கப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்களில் 80 சதவீதம் பேர் முஸ்லிம்கள். ஆகவே, முஸ்லிம்கள் தாங்கள் வஞ்சிக்கப்படுவதாக நினைக்கின்றனர்.

**மூல காரணம்**

திடீர் உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஏற்பட்ட வன்முறையாகத்தான் தெரிகிறது என்றாலும் கூட, அந்த வன்முறை வெடிப்பதற்காக காத்திருந்தது. மாதா கி சௌக்கி ஆலயக் கூடாரம் வால்மீகிகளால் இந்த வருட நவராத்திரி கொண்டாட்டத்தையொட்டி இந்தப் பகுதியின் மசூதி முன்பாக அமைக்கப்பட்டது. அந்த தற்காலிகக் கோயில் தசரா கொண்டாடப்பட்ட 9 நாட்களுக்கு மட்டுமே அங்கு இருந்திருக்க வேண்டும். ஆனால், அந்தத் தற்காலிக கூடாரம் தீபாவளி வரை, அதாவது அப்புறப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய கால அளவைத்தாண்டி மேலும் ஒரு மாதத்திற்கு அங்கேயே இருந்தது. அந்தக் கோயிலின் தொண்டர்கள் நாள் முழுவதும் ஒலிபெருக்கியில் பஜனைப் பாடல்களை ஒலிக்க வைத்துக்கொண்டிருந்தனர். அது சாலையின் மறுபக்கம் நமாஸ் செய்பவர்களுக்குத் தொந்தரவாக இருந்தது. வன்முறை வெடிப்பதற்கு முன்பே இந்தப் பகுதியில் ஒரு பதற்றம் ஏற்பட்டிருந்தது.

20ம் பிளாக்கில் குடியிருக்கும் சைபுதீன் இவ்வாறு கூறுகிறார்: "மசூதி சீரமைக்கப்பட்டுக் கொண்டிருந்ததால் ரமலான் காலத்தில் ஒரு தற்காலிகக் கூடாரம் அமைக்க நிர்வாகத்திடம் அனுமதி கேட்டோம். அதிகாரிகள் அனுமதி மறுத்துவிட்டனர். ஆனால், மாதா கி சௌக்கி ஒரு மாதத்திற்கும் மேல் நீடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இவற்றிற்கெல்லாம் மேலாக எங்கள் பிள்ளைகள் கைது செய்யப்படுகின்றனர். இதைப்பற்றி நாங்கள் என்ன நினைப்பது ?''

வால்மீகிகள் 20ம் பிளாக்கில் இஸ்லாமியர்களையும் தங்களையும் பிரிக்கும் ஒரு சிறிய மைதானத்தில்தான் தற்காலிகக் கோயிலை அமைத்துள்ளனர். அதற்கு தங்களுக்கு உரிமை இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். கால ஓட்டத்தில், இந்த மைதானம் மாலை வேளைகளில் மக்கள் சந்தித்துப் பேசும் இடமாகவும், குழந்தைகள் விளையாடும் இடமாகவும் மாறியுள்ளது. மைதானத்தின் மூலையில் குப்பைகள் கொட்டும் இடத்தில்தான் இந்த சௌக்கி அமைக்கப்பட்டது. வால்மீகிக்கள், தாங்கள் சௌக்கியை எழுப்புவதற்காக அந்த இடத்தை சுத்தம் செய்ததாகவும், தங்களது மத உணர்வு சார்ந்த அந்த இடத்திற்கு முஸ்லிம்கள் மதிப்பளிக்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்றனர். கோயிலை முன்னிட்டு தொடர்ச்சியாக இரைச்சல் எழுப்பப்பட்டது தங்களுக்கு தொல்லையாக இருந்ததாகவும் ஆனாலும் இந்துக்களின் மதச் சம்பிரதாயங்களில் தாங்கள் ஒருபோதும் குறுக்கிடவில்லை என்றும் முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

இந்தத் தருணத்தில் இரு தரப்பினரிடமும் வெறுப்புணர்வு அதிகரித்திருக்கிறது. "வால்மீகிகள் குடித்துவிட்டு இந்தப் பகுதியில் பிரச்சனை செய்வதற்கு விரும்புகின்றனர். அவர்களுக்கு வன்முறையில் விருப்பமுண்டு'' என்கிறார் இங்கு குடியிருக்கும் ஒரு முஸ்லிம். "முஸ்லிம்கள் மாட்டு இறைச்சியை சாப்பிட்டுவிட்டு மிச்சம்மீதிகளை எங்கள் காலனிக்குள் வீசுகின்றனர். அவர்கள் அனைவரும் கிரிமினல்கள்,'' என்று ஒரு வால்மீகி குடியிருப்புவாசி கூறுகிறார்.

இந்த மாதா கி சௌக்கி விவகாரம் ஏற்கெனவே கனன்றுகொண்டிருந்த நிலைமையை கொழுந்துவிட்டு எரியும் தீயாக மாற்றிவிட்டது. உழைப்பாளி மக்கள் வாழும் பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பசுவதைக்கு எதிரான பிரச்சாரத்தை சங் பரிவார அமைப்பினர் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டனர். மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்த அதே நேரத்தில், தலைநகரம் முழுக்க காளான்களைப் போல பரவிய, அதுவரையில் யாருக்கும் தெரியாத அமைப்புகள் பசுவதை எதிர்ப்புப் பிரச்சாரங்களைத் தொடங்கின.

அதே நேரத்தில், முஸ்லிம்களிடமிருந்து நிலத்தைக் கைப்பற்றும் பிரச்சாரமும் தலைதூக்கியது. சங் பரிவாரம் நிலமற்ற இந்துக்களை, குறிப்பாக தலித்துகளையும் புலம்பெயர்ந்து வந்தவரையும் தில்லி வாழ் முஸ்லிம்களுக்கு எதிராகத் திரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டது. முஸ்லிம்கள்

"அந்நியர்கள்" என்றும், ஆனால் அவர்களுக்கு தில்லியின் மையமான மாவட்டங்களில் நிலம் இருக்கிறது என்றும் அந்தப் பிரச்சாரங்களில் கூறப்பட்டது.

கலவரத்திற்கு பின் அமைக்கப்பட்ட சமாதான குழுவின் உறுப்பினரும், உச்சநீதிமன்ற வழக்கறிஞருமான ஆதிகேசவன் இவ்வாறு கூறுகிறார்: "திரிலோக்புரியில் சமீபகாலமாக சங் பரிவார் முனைப்புடன் செயல்பட தொடங்கியுள்ளது. அது கலவரங்களுக்கு ஏற்ற பகுதி என்று சங் பரிவாரம் அடையாளம் கண்டுள்ளது. கடந்த ஜூலையில் விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங்தள், அதோடு சம்பந்தப்பட்ட ஹிந்து மஞ்ச் ஆகிய அமைப்புகள் இந்தப் பகுதியில் திடீரென சுறுசுறுப்புடன் செயல்பட ஆரம்பித்தன. குறிப்பாக அவர்கள் வால்மீகி சமூகத்தினரை திரட்டத் தொடங்கினர். விஸ்வ ஹிந்து பரிஷத்தின் 50வது தொடக்க நாளான ஆகஸ்ட் 17 அன்று கல்யாண்புரியில் இருந்து திரிலோக்புரியின் 33வது பிளாக்கில் உள்ள மதினா சௌக் வரையில், வி.எச்.பி. அமைப்பின் திரிலோக்புரி கிளை கத்தி, கட்டைகள், ஹாக்கி மட்டைகள், பேஸ்பால் மட்டைகளுடன் ஒரு ஊர்வலம் நடத்தியது. அவர்கள் முஸ்லிம்களுக்கும், பாகிஸ்தானுக்கும் எதிரான முழக்கங்களை எழுப்பியபடி, முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதி வழியாக ஊர்வலம் சென்றனர். இதற்கெல்லாம் நான் புகைப்பட ஆதாரங்கள் வைத்திருக்கிறேன்".

தில்லியின் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக 15ம் பிளாக்கைச் சேர்ந்த 169 முஸ்லிம் குடும்பங்கள் வேறு இடத்தில் குடியமர்த்தப்படலாம் என்ற தகவல் வந்ததைத் தொடர்ந்து, இந்துத்வா அமைப்புகளைச் சேர்ந்தோர் இந்த பகுதியில் கூடுதல் முனைப்புடன் செயல்படத் தொடங்கினர். முஸ்லிம்களைக் குடியேற்றுவதற்காக, வால்மீகி காலனிக்குப் பக்கத்தில் உள்ள ஒரு இடத்தை அரசாங்கம் தேர்ந்தெடுத்தது. "பாஜக எம்.பி. மகேஷ்கிரி உள்ளிட்ட சங் பரிவாரத்தினர் வால்மீகி மக்களிடையே, அவர்களுக்குப் பக்கத்தில் "கிரிமினல் பேர்வழிகள்" குடியமர்த்தப்பட இருப்பதாக பிரச்சாரம் செய்தனர்," என்கிறார் ஆதிகேசவன்.

"இந்தக் கலவரங்கள் சங் பரிவாரத்தினரின் தூண்டுதலில் அவர்களது ஆதரவோடு நடந்தன. தீபாவளி நள்ளிரவில், இங்குள்ள ஒரு தொடக்கப் பள்ளியில், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி விவாதிப்பதற்காக அவசரக் கூட்டம் ஒன்றை வி.எச்.பி. நடத்தியது. சுனில் வைத்யா ஒரு கும்பலைத் திரட்டி பல்வேறு இடங்களில் முஸ்லிம்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. அக்டோபர் 31ல் மாதா கி சௌக்கியில் வால்மீகி மக்கள் பஜனை நடத்த தில்லி மாநகர் நிர்வாகம் அனுமதித்தது. அதன்மூலம் இங்குள்ள சூழல் மேலும் அபாயகரமானதாக மாறியது. அந்தப் பஜனை அந்தப் பகுதி பாஜக தலைவர்கள் முன்னிலையிலேயே நடந்தது. போலீசார் முதலில் சுனில் வைத்யா, மகேஷ்கிரி உள்ளிட்ட கலவரத்தைத் தூண்டிய பாஜக தலைவர்களை, சமூக அமைதியைக் குலைத்ததற்காகக் கைது செய்ய வேண்டும். ஆனால், போலீசார் கலவரங்களில் எந்தவிதத்திலும் சம்பந்தப்படாத முஸ்லிம் இளைஞர்களைத்தான் கைது செய்துள்ளனர்," என்கிறார் ஆதிகேசவன்.

மத உணர்வுகளைக் கிளறிவிடுவதற்கான சங் பரிவார முயற்சிகள் இதற்கு முன் எப்போதும் இவ்வளவு தீவிர முனைப்போடு இருந்ததில்லை. தில்லியைச் சுற்றியுள்ள பவானா, பட்லி, நந்தனாகிரி, சீமாபுரி, முண்ட்கா மற்றும் பேங்க்நர் ஆகிய சிறுநகரங்களிலும் கிராமங்களிலும் இதே போன்ற சம்பவங்கள் நடந்தன. இந்தப் பகுதிகள் அனைத்திலும் நடைமுறையில் உள்ள சமூகப் பழக்கவழக்கங்களும், மதம் சார்ந்த பழக்கவழக்கங்களும் முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்களைத் தூண்டிவிடும் வகையில் மதவெறிமயமாக்கப்பட்டன.

### போலீஸ் உடந்தை:

மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு காவல்துறையினர் இந்தக் குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருப்பது குறித்து அரசியல்வாதிகள் பேசி வருகின்றனர். இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட் – விடுதலை) கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் கவிதா கிருஷ்ணன் கூறியதாவது: "பவானாவில் போலீசாரின் செயல்பாடு மிகுந்த கேள்விக்கு உரியதாக இருக்கிறது. ஈத் பண்டிகையின்போது 'பசுவதை' செய்யப்பட இருப்பதாக வதந்திகள் பரப்பப்பட்டன. அதைத்தொடர்ந்து இங்கு குடிசைப் பகுதிகளில் உள்ள முஸ்லிம்களின் வீடுகளில் போலீசார் சோதனை நடத்தினர். அந்தப் பண்டிகைக்கு எதிரான வெறுப்புணர்வுகளைப் பரப்புகிற சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் இந்துத்வா அமைப்புகளைச் சேர்ந்தோர் பகிரங்கமான முறையில் விநியோகித்தனர். அதைத் தொடர்ந்து முஸ்லிம்களின் அந்தப் பண்டிகை அவர்களுக்கு ஒரு அச்சம் சூழ்ந்த நாளாக மாறியது. போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

"மறுபடியும் மொஹரம் பண்டிகையையொட்டி, முதல்நாள் நடக்கவிருந்த "டாஜியா" ஊர்வலத்தைப் பற்றிய நச்சுக் கருத்துகள் பரப்பப்பட்டன. துக்கத்தை வெளிப்படுத்துவதற்காகத் தன்னைத்தானே சாட்டையால் அடித்து தண்டித்துக்கொள்வதை அடிப்படையாகக் கொண்ட அந்த டாஜியா ஊர்வலம் உண்மையில்

முஸ்லிம்கள் தங்களுடைய பலத்தைக் காட்டிக்கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது என்று கூறும் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரகங்களும் வெளியிடப்பட்டன. மோடி அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள தில்லி காவல்துறையானது, சிறுபான்மை மக்கள் தங்களுடைய ஊர்வலத்தை வன்முறை மிரட்டலின்றி பாதுகாப்பாக நடத்தலாம் என உறுதியளிக்கத் தவறியது.

மாறாக, போலீசாரோ சிறுபான்மையினர் பாதுகாப்பாக இருக்க விரும்பினால் தங்களுடைய டாஜியா ஊர்வலப் பாதையை சுருக்கிக்கொள்ள வேண்டும் என கூறினர். சிறுபான்மையினர் அதற்கு உடன்பட்டனர். ஆனாலும், பாஜக எம்எல்ஏ முன்னிலையில், ஆதிக்க சாதியான ஜாட் சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் திரட்டப்பட்ட "மகாபஞ்சாயத்து" நடத்துவதற்கு போலீசார் அனுமதி அளித்தனர். மகா பஞ்சாயத்தின் வெளிப்படையான நோக்கம் டாஜியா ஊர்வலத்தை தடுப்பதுதான்.

கடந்த சில மாதங்களாக நாட்டின் தலைநகரில் நடக்கும் மதவெறி வன்முறைகள் மேற்கு உத்தரபிரதேசத்தில் நடந்த மதவெறி வன்முறைகளின் தொடர்ச்சியே என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். "லவ் ஜிஹாத்" என்ற பெயரில் ஜாட் மக்களின் மத உணர்வுகளை பாஜக தூண்டியது. வன்முறைச் செயல்களில் ஈடுபட வால்மீகி மக்களைத் திரட்டியது. தில்லியிலும் சங் பரிவார தொண்டர்கள் இதே போன்ற முயற்சிகளில் ஈடுபட்டனர். கலவரங்களைப் பயன்படுத்தி மக்களிடையே ஏற்படுத்தப்பட்ட மதவுணர்வு சார்ந்த பாகுபாடுகள், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுக்கு பெரிய அறுவடையைக் கொடுத்தன. தில்லி சட்டமன்ற தேர்தலையொட்டி பாஜக இதே உத்தியைக் கையாண்டதாகத் தெரிகிறது.

"தில்லியைச் சேர்ந்த ஒரு மூத்த பத்திரிகையாளர் இவ்வாறு கூறுகிறார்: "எதிர்க்கட்சிகளின் வாக்கு வங்கியை உடைப்பதே அவர்களது நோக்கம். கடந்த தேர்தலில் தலித் மக்களும் இதர விளிம்புநிலை மக்களும் ஆம் ஆத்மி கட்சிக்கு மொத்தமாக வாக்களித்தனர். வால்மீகிகளையும் மற்ற சில சமுதாயத்தினரையும் இந்த தளத்திலிருந்து வெளியே கொண்டுவந்துவிட்டால், தில்லி சட்டசபையில் பாஜக பெரும்பான்மை பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. அது இந்து–முஸ்லிம் கலவரமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இரண்டு தலித் சமூகங்களை ஒன்றுக்கொன்று மோதவிட்டாலே கூட போதும், அது பாஜகவுக்கு சாதகமாகிவிடும். உதாரணமாக, கடந்த தேர்தலில் ஆம்ஆத்மி கட்சிக்கு ஆதரவாக வாக்களித்த வால்மீகி, சான்சி ஆகிய இரண்டு சமூகங்களைச் சேர்ந்தவர்களும், தீபாவளி விழாவின்போது மஞ்சு–கா–தில்லா பண்டிகையின்போது ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டனர். பாஜகவுக்கு சார்பான வாக்குகளை ஒருங்கிணைக்க முடியும். (2004ம் ஆண்டுத் தேர்தலில்) இந்தத் தொகுதியில் பாஜக 3,383 வாக்கு வித்தியாசத்திலேயே ஆம் ஆத்மி கட்சியிடம் தோல்வியடைந்தது. தில்லியில் பாஜக கட்சியின் அடித்தளம் வலுவற்றதாக இருப்பதாலும், தன்னை முன்னிறுத்தவதற்கு ஏற்ற ஒரு வசீகரமான தலைவர் இல்லாததாலும் எந்த வகையிலாவது வாக்குகளைப் பிரிப்பது பாஜகவுக்கு அவசியமாகிறது."

**போலீசார் வன்முறையாளர்களுக்கு துணை போனதாகவும், வன்முறைகள் நடந்த மூன்று நாட்களும் தாக்குதல் நடத்துவதற்கு வால்மீகிகளை போலீசார் ஊக்கப்படுத்தியதாகவும் பெரும்பான்மையான இஸ்லாமியர்கள் நம்புகின்றனர்.**

திரிலோக்புரி வன்முறையின் பின்னணியில் உள்ளவர் என்று கூறப்படும் சுனில் வைத்யா 2014 தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வேட்பாளரிடம் (ராஜு திங்கன்) சுமார் 18,000 வாக்குகள் வித்யாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். தில்லியின் புறநகர் பகுதிகளிலும் ஆம் ஆத்மி கட்சி குறிப்பிடத்தக்க அளவில் வலுவான அமைப்பைக் கட்டியுள்ளது.

அமைப்பு சார்ந்த தலைமை சார்ந்த தோல்விகளை சமாளிப்பதற்கு மதத்தின் பெயரால் அல்லது சாதியின் பெயரால் வாக்குகளைத் திரட்டுவது என்ற, நிரூபிக்கப்பட்ட செய்முறை கையாளப்படுகிறது. வால்மீகி மக்களின் வாக்குகளை தனக்கு ஆதரவாகத் திரட்டுவது திரிலோக்புரியில் மட்டுமல்லாமல் தில்லி முழுவதுமே தனக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்று பாஜக கணக்குப் போட்டது. ஆயினும், தேர்தல் ஆதாயத்திற்காக இத்தகைய பிரிவினை உத்திகளைக் கையாள்வது இந்தியாவின் பன்முகப் பண்பாட்டு சமுதாயக் கட்டமைப்பில் ஒரு நிரந்தரமான காயத்தை ஏற்படுத்திவிடும்.

**ஆதாரம்: 'ஃபிரண்ட் லைன்' நவம்பர் 28, 2014**

# முஸ்லிம்களும் போலீசும்

– ஏ.ஜி. நூரணி

*சட்டத்தை செயல்படுத்தும் துறையில் எந்த அளவிற்கு மதவாத பகை உணர்வுகள் ஊறிப்போயிருக்கின்றன என்ற அதிர்ச்சி தரும் தகவல்களை பல்வேறு விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன. இருந்தபோதிலும், அதுகுறித்து கொஞ்சமும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.*

"ஒவ்வொரு மரமாகக் கடக்கக் கடக்க ஆழமான அச்சம் ஒரு காடாக முளைக்கிறது.'' பிரிட்டனைச் சேர்ந்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி சர் வில்லியம் மேக்பெர்சன் கூறிய சொற்கள் இவை. போலீஸ் அடக்குமுறைகளை அவர் எவ்வளவு கச்சிதமாக சித்தரித்திருக்கிறார் என்ற வியப்பு எவருக்கும் ஏற்படும்.

பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் (தடா) கீழ் குற்றவாளிகளாக தண்டனை அளிக்கப்பட்டிருந்த 11 முஸ்லிம்களை நீதிபதிகள் எச்.எல். டாட்டு, சி.கே. டாட்டு இருவரும் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வுக் குழு 2012 செப்டம்பர் 26 அன்று விடுதலை செய்தது. சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்தியதற்காக ஐ.ஜி., எஸ்.பி. இருவரையும் உச்சநீதிமன்றம் கடுமையாக எச்சரித்தது. குற்றமற்ற எந்த ஒரு தனி மனிதருக்கும், "நான் பயங்கரவாதி அல்ல, ஆனால் என்னுடைய பெயர் கான் என்று இருப்பதால் இந்தத் தொல்லைகளை அனுபவிக்க வேண்டுமா'' என்ற உணர்வு ஏற்படாமல் இருப்பதை போலீசார் உறுதிப்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது (தி ஹிண்டு, செப்டம்பர் 27, 2012).

2014 மே 16 அன்று நீதிபதிகள் ஏ.கே.பட்நாயக், வி. கோபால கவுடா ஆகியோர் கொண்ட மற்றொரு அமர்வுக் குழு, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (தடா சட்டத்திற்கு பதிலாக கொண்டுவரப்பட்ட பொடா சட்டம்) கீழ் 6 முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு சிறப்பு நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் தண்டனையையும் தள்ளுபடி செய்தது. 2002 செப்டம்பர் 24 அன்று குஜராத்தின் காந்தி நகரில் உள்ள அக்ஷர்தாம் கோவிலில் நடந்த ஒரு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பில் இந்தக் குழு தள்ளுபடி செய்தது. நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் இவ்வாறு கூறியிருந்தனர்: "பொடா சிறப்பு நீதிமன்றத்தால் 1.7.2006 அன்று பொடா வழக்கு எண்.16/2003ல் அளிக்கப்பட்ட தீர்ப்பும், குஜராத் மாநில அரசு எதிர் ஆதம்பாய் சுலேமாபாய் அஜ்மேரி வழக்கில் அகமதாபாத் உயர்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பும் தள்ளுபடி செய்யத் தக்கவை என்று நாங்கள் கருதுகிறோம். இதைத் தொடர்ந்து, ஏ–2, ஏ–4, ஏ–6 ஆகியோருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையும் ஏ–3க்கு அளிக்கப்பட்ட ஆயுள் சிறைத் தண்டனையும், ஏ–5க்கு அளிக்கப்பட்ட பத்தாண்டு கடுங்காவல் தண்டனையும் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

***2014 ஜூலை 31ல் ஒரு வழக்கில் தீர்ப்பளித்த பம்பாய் உயர்நீதிமன்றம், மகாராஷ்டிராவில் நடந்துள்ள காவல் நிலைய சாவுகளில் உயிரிழந்தோர் சிறுபான்மை மதத்தினரும் (அதாவது முஸ்லிம்களும்) தலித்துகளும்தான் என தெரிய வருகிறது என்று கூறியது.***

எங்கள் முன் மேல்முறையீடு செய்துள்ள அனைவரையும் மேற்கூறிய காரணங்களால் நாங்கள் விடுவிக்கிறோம் என்பதாலும், ஏற்கெனவே நாங்கள் தள்ளுபடி செய்த அதே காரணங்களின் கீழ் ஏ–1க்கு தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும், அவர் மேல்முறையீடு செய்யவில்லை என்றாலும் அவரையும் நாங்கள் அவருக்கு பின்வரும் நீதிமன்றங்களால் அளிக்கப்பட்ட ஐந்தாண்டுக் கடுங்காவல் சிறைத் தண்டனையிலிருந்து, இந்த நீதிமன்றத்திற்கு அரசமைப்பு சாசனத்தின் சட்டஉரை 142ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விடுதலை செய்கிறோம். அவர் ஏற்கெனவே தனது தண்டனைக் காலத்தை சிறையில் கழித்துவிட்டார் என்பதை நாங்கள் அறிவோம். எனினும், பயங்கரவாத குற்றச் செயலில் ஈடுபட்டதாக தவறாக தீர்ப்பு அளிக்கப்பட்டதால் ஏற்பட்ட அவப்பேரிலிருந்து அவரை விடுவிக்க நாங்கள் விரும்புகிறோம். இதன் மூலம் அவர் எவ்வித சந்தேகத்திற்கும் இடமற்றவராக தனது குடும்பத்திற்குத் திரும்பிச் செல்ல முடியும்.''

"தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்பாக நாங்கள் விசாரணை அமைப்புகள் நாட்டின் ஒருமைப்பாடும் பாதுகாப்பும் சம்பந்தப்பட்ட இத்தகைய கடுமையான தன்மையுள்ள

| ரூ ஜ் ) பிரதேசங்களும் | று , உள்ளோரின் மொத்த எண்ணிக்கை | று , முஸ்லிம்களின் எண்ணிக்கை | று , முஸ்லிம்களின் சதவீதம் |
|---|---|---|---|
| ய று | | | |
| னீ று | | | |
| | | | |
| ட | | | |
| | | | |
| ஊ | | | |
| ! 4 | | | |
| ணு று | | | |
| லு காஷ்மீர் | ,180 | ,045 | |
| | ,322 | ,557 | |
| | ,375 | ,270 | |
| று | ,673 | ,720 | |
| ! று | ,8,543 | ,633 | |
| ஸ்ரீ | ,032 | | |
| | ,271 | | |
| ¬ | ,182 | | |
| று | ,754 | | |
| பூ | ,995 | ,029 | |
| ஃ | ,310 | | |
| | ,167 | ,221 | |
| | ,732 | | |
| ¬ ஸ | ,021 | ,024 | |
| 4 | ,161 | | |
| | ,3,875 | ,072 | |
| ஊ | ,137 | ,442 | |
| ரூ ம | ,852 | | |
| | ,086 | | |
| 5ꜝ b ஹவேலி | | | |
| | | | |
| : | ,798 | ,160 | |
| ம | | | |
| று 4 | ,866 | | |

**ஆதாரம்:** "Law and Order: Readings and Cases" published by Lal Bahadur Shastri National Academy of Administration, Mussorie. The figures are of 1998.

வழக்கில் செயல்திறனின்றி இந்த விசாரணையை நடத்தியது குறித்து எங்களை வேதனையைத் தெரிவிக்க விரும்புகிறோம். விலை மதிப்பற்ற பல உயிர்களைப் பறித்த உண்மையான குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு மாறாக, அப்பாவி மக்களை போலீசார் பிடித்துள்ளனர், அவர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர், அதனால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது," என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறினர் (ஆதம்பாய் சுலேமாபாய் அஜ்மேரி எதிர் குஜராத் மாநில அரசு (2014) எஸ்.சி.சி. 714, பக்கம் 831–2).

## பாதிக்கப்பட்டிருப்போர் முஸ்லிம்களும் தலித்துகளும்

2014 ஜூலை 31ல் ஒரு வழக்கில் தீர்ப்பளித்த பம்பாய் உயர்நீதிமன்றம், மகாராஷ்டிராவில் நடந்துள்ள காவல் நிலைய சாவுகளில் உயிரிழந்தோர் சிறுபான்மை மதத்தினரும் (அதாவது முஸ்லிம்களும்) தலித்துகளும்தான் என தெரிய வருகிறது என்று கூறியது. நீதிமன்ற உதவியராக (அமிகஸ் கியூரே) யுக் சௌத்ரி நியமிக்கப்பட்ட பிறகு, நீதிபதிகள் வி.எம்.கானடே, பி.டி. கோடே இருவரும் இவ்வாறு கூறினர். யுக் சௌத்ரி, "நான் எனது ஆய்வை முடித்திருக்கிறேன். வழக்குகள் பெரும்பாலும் முஸ்லிம்கள், தலித்துகள் சம்பந்தப்பட்டதாகவே உள்ளன என்பதை எனது ஆய்வு காட்டுகிறது. ஏன் இத்தகைய சம்பவங்கள் மகாராஷ்டிராவில் நடக்கின்றன என்று நீதிமன்றம் கேட்டது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அது காவல் நிலைய சாவு அல்ல என்றும் இயற்கையாக நடந்த மரணம் என்றும் கூறப்பட்டது. ஆகவே, உண்மையிலேயே எத்தனை காவல் நிலைய மரணங்கள் நடந்துள்ளன என்பது தெரியாமலே போகக்கூடும்," என்று கூறினார். (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஆகஸ்ட் 1, 2014).

குஜராத்தின் இஷ்ரத் ஜஹான் வழக்கு, மாலேகாவுன் குண்டு வெடிப்பு வழக்கு ஆகிய பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இரண்டு வழக்குகள் குறித்து 2013 ஆகஸ்ட்

10ல் புனே நகரில் கருத்துக் கூறிய தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார், தனது வேதனையை வெளிப்படுத்தினார். இஷ்ரத் ஜஹான் மீது போலியான புகார் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும், மாலேகாவுன் குண்டு வெடிப்புத் தொடர்பாக போலீசார் கூறுவது உண்மையல்ல என்றும் அவர் உறுதிபடக் கூறினார். "கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு குற்றமற்ற இளம் பெண் (இஷ்ரத் ஜஹான்) பயங்கரவாதியாக மாறிவிட்டாரா? இன்று அந்த என்கவுன்டரில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் சிறைக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த வழக்கை நீதிமன்றமே கண்காணித்தது என்பதால்தான் உண்மை வெளிவந்திருக்கிறது. ஆனால், அந்தப் பெண்ணின் குடும்ப நிலைமை என்ன ஆகும்? தங்களது வீட்டில் ஒரு பிள்ளைக்கு இவ்வாறு அநீதி நடக்கிறது என்றால் அந்தக் குடும்பமே பாதிக்கப்படுகிறது. இன்னொரு குடும்பத்தில் ஒருவர் இதனால் ஆத்திரமடைகிறார் என்றால் அவர் குற்றவாளி என்று உங்களால் சொல்லிவிட முடியாது," என்றார் அவர்.

**"தடா சட்டம் சிறுபான்மையினருக்கு எதிரான ஆயுதமாக பல முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் பெண்களும் குழந்தைகளும் கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது சிறுபான்மை மக்களின் மனங்களில் ஆழ்ந்த சந்தேகத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தியிருக்கிறது,"**

மாலேகாவுன் குண்டுவெடிப்பு வழக்கு தொடர்பாக தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் விளைவாகத்தான் அபிநவ் பாரத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று அவர் கூறினார். "மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன் நான் நிகழ்த்திய ஒரு உரையில், பி.ஆர். பட்டீலுக்கு (மகாராஷ்டிரா மாநில உள்துறை அமைச்சர்) பகிரங்கமாக ஒரு கருத்தை தெரிவித்தேன். வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்கள் ஒரு மசூதியில் குண்டு வைப்பார்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை என்றும் போலீசாரின் விசாரணைக் கண்ணோட்டம் தவறானது என்றும் நான் கூறினேன். அதன் பிறகு, பட்டீல் என்னைப் பார்ப்பதற்கு ஹேமந்த் கார்கரேயை (காவல்துறை அதிகாரி) அனுப்பி வைத்தார்.

கார்கரேயிடம் நான் எனது சந்தேகத்தை கூறினேன்," என்று சரத் பவார் கூறினார். அந்த வழக்கில், குற்றமற்ற 9 முஸ்லிம்கள் மூன்று ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கிறார்கள். "அவர்களால் எப்படி இந்த நாட்டை தங்களுடைய நாடு என்று நினைக்க முடியும்? இவ்வாறு நடத்தப்படுவதன் காரணமாக ஒருவர் தவறு செய்கிறார் என்றால், ஒட்டுமொத்த சமூகமே தேச விரோதமானது என்று நாம் முத்திரையிட முடியுமா?..." என்று சரத் பவார் கேட்டார் (ஆசியன் ஏஜ், ஆகஸ்ட் 11, 2013).

இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் (சிமி) உறுப்பினர்கள் எப்படி திட்டமிட்டு இலக்கு வைக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு எதிரான அபத்தமான ஆதாரங்கள் எப்படி திட்டமிட்ட முறையில் தாக்கல் செய்யப்படுகின்றன என்பதை அடுத்தடுத்த மூன்று ஆவணங்கள் மூலம் வெளிப்படுத்தினார் முஜாமில் ஜலீல் (தி இந்தியன் எக்ஸ்பிரஸ், செப்டம்பர் 25, 26, 28, 2012) எதை வேண்டுமானாலும் ஆதாரமாக தாக்கல் செய்தார்கள். அது குழந்தைகளுக்கான பத்திரிகைகளாக இருக்கலாம், உருதுக் கவிதையாக இருக்கலாம், ஒரு நாளேடாக இருக்கலாம்... எதுவாக இருந்தாலும் அதை போலீசார் ஆதாரமாக்குவார்கள், சம்பந்தப்பட்டவர் சிறைக்குச் செல்ல வேண்டியிருக்கும். பேராசிரியர் இஃப்திகார் கிலானி, வெளிப்படையாக ஒரு இலக்கிய புத்தகத்தை வைத்திருந்ததால் சிறையில் அடைக்கப்பட்டு சித்தரவதை செய்யப்பட்டார்.

காவல்துறைக்கு உள்ளேயே முஸ்லிம்களின் விகிதாச்சாரம் மிகக் குறைவாகவே இருக்கிற நிலைமையானது, அது ஒரு நிறுவன அமைப்பாகவே பாகுபாட்டுடன் செயல்படுவதை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. 2006ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட சச்சார் குழு அறிக்கை, காவல்துறையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதை எடுத்துக்காட்டியது. இன்று வரையில் அந்த நிலைமையில் முன்னேற்றம் இல்லை. சொல்லப் போனால், ஜீஷர் ஷேக் தகவலின்படி (இந்தியன் எக்ஸ்பிரஸ், ஆகஸ்ட் 6, 2013) இந்த நிலை மேலும் மோசமாகியிருக்கிறது. 2007 முதல் 2012 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் அனைத்து மாநிலங்களிலும் மொத்தம் 3,26,000 பேர் காவல்துறையில்

இணைக்கப்பட்டனர். அவர்களில் 7,132 பேர் மட்டுமே அல்லது 2.18 சதவீதத்தினர் மட்டுமே முஸ்லிம்கள்.

தன் மீது முஸ்லிம்களுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது என்பதை காவல்துறை ஒப்புக்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. போலீசார் ''மதவாதம் சார்ந்தவர்களாக, பாகுபாட்டு உணர்வு கொண்டவர்களாக, பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்... தவறான புரிதல் உள்ளவர்களாகவும், ஊழல்மிக்கவர்களாகவும், தொழில்சார்ந்த திறமைகளை வளர்த்துக்கொள்ளாதவர்களாகவும் இருக்கிறார்கள்,'' என்று முஸ்லிம்கள் கருதுகிறார்கள் என்றும் காவல்துறை ஒப்புக்கொள்கிறது. மகாராஷ்டிரா மாநில டி.ஜி.பி. சஞ்ஜீவ் தயால், உத்திரபிரதேச மாநில டி.ஜி.பி. தியோராஜ்நாகர், தமிழக டி.ஜி.பி. கே.ராமானுஜம் ஆகிய மூன்று காவல்துறை தலைமை இயக்குநர்கள் ''சிறுபான்மையினர் குறித்து காவல்துறையினரை கூடுதல் புரிதல் உள்ளவர்களாக மாற்றுவதற்கான அணுகுமுறை,'' என்ற அறிக்கையை தயாரித்துள்ளனர். அது இவ்வாறு முடிவடைகிறது: ''காவல்துறை படைகளில் சிறுபான்மையினர் மிகக் குறைவாக இருப்பது இந்த அவநம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் இட்டுச் சென்றுள்ளது.'' (ஸ்மிதா நாயர், தி இந்தியன் எக்ஸ்பிரஸ், ஜுலை 17, 2014).

**முதல் தர பாகுபாடு!**

இத்தகைய தவறுகளை சரிபடுத்துவதற்காக நீதித்துறை மீண்டும் மீண்டும் தலையிட்டுள்ளது. ஆனால், எத்தனை முறைதான் நீதிமன்றத்தால் தலையிட முடியும்? எத்தனை பிரச்சனைகள் நீதிமன்றத்தை அடைகின்றன? குடிமக்கள் சந்திப்பது காவல்துறையைத்தான். காவல்துறையின் அணுகுமுறையும், அதன் செயல்பாடுகளும் நேரடியான, உடனடியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாக உள்ளன. வெறுப்புணர்வுடன் கூடிய அரசின் ''முதல் தரமான பாகுபாடு'' குறித்து அமெரிக்க உச்சநீதிமன்றம் 1886ல் அளித்த தீர்ப்பு கவனத்திற்குரியது (யிக் வோ எதிர் ஹாப் கின்ஸ் 118, யு.எஸ்.356).

சீனாவிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவரான யிக் வோ, சான்பிரான்சிஸ்கோ நகரில் ஒரு சலவை நிலையம் நடத்தி வந்தார். மரத்தால் கட்டப்பட்ட கட்டடத்திற்குள் இயங்கக்கூடிய சலவை நிலையங்களுக்கு உரிமையாளர்கள் உரிமம் பெற வேண்டும் என்று சான்ஸ்பிரான்சிஸ்கோவில் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்த நகரில் இருந்த 320 சலவை நிலையங்களில், 240 நிலையங்கள் சீனர்களால் நடத்தப்பட்டவை. 310 சலவை நிலைய கட்டடங்கள் மரத்தால் கட்டப்பட்டவைதான். சொல்லப்போனால் அன்று அந்த நகரின் 90 சதவீத வீடுகள் மரத்தால் கட்டப்பட்டவைதான். ஆயினும், சீனாவிலிருந்து வந்தவர்களின் உரிம விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மற்றவர்களில் ஒருவரது மனுவைத் தவிர இதர விண்ணப்பங்கள் அனைத்தும் ஏற்கப்பட்டன. அவசரச் சட்டத்தை மீறிவிட்டதாக சுமார் 150 சீன சலவையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

***“புத்தகத்தில் பொதுவாக மதவாத அமைப்புகள், அவரது செயல்பாடுகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவை முஸ்லிம் அமைப்புகள் மட்டும்தான். அந்தப் புத்தகத்தில் ஜனசங்கம் பற்றியோ, ஆர்.எஸ்.எஸ். பற்றியோ, சிவசேனா பற்றியோ எதுவும் கூறப்படாதது ஏன் என்ற கேள்விக்கு உள்துறை செயலர் ராஜ்வாதேயால் பதில் கூற முடியவில்லை”***

யிக் வோ தாக்கல் செய்த ஆள்கொணர்வு மனுவை கலிபோர்னியா உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் யிக் வோ தாக்கல் செய்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர் தனது வழக்கை அமெரிக்க உச்சநீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றார். அது ஒரு சட்டத்துறை வரலாறாகப் பதிவானது.

உச்சநீதிமன்றம் கூறிய கருத்து வருமாறு: ''நிர்வாகத்தால் பிறப்பிக்கப்பட்டு, அதற்கான அதிகாரிகளால் செயல்படுத்தப்படுகிற அவசரச் சட்டத்தின் நோக்கம் வெகுவாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு எதிராக தனித்துவத்தோடு மேற்கொள்ளப்படும் நிர்வாக நடவடிக்கையானது, இவ்வாறாக அரசு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது என்ற நிலையில், சமத்துவமற்ற, ஒடுக்குமுறை மனநிலையோடு, மனுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் அமெரிக்க அரசமைப்பு சாசனத்தின் 14வது சட்டத்திருத்தத்தின் விரிவான, பெருந்தன்மைமிக்க சட்டப்பூர்வ பாதுகாப்பை அரசாங்கம் மறுப்பதாக இருக்கிறது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியுள்ளது.''

அதைத் தொடர்ந்து உச்சநீதிமன்றம் பின்வரும், எங்கும் ஒலிக்க வேண்டிய கருத்தையும் கூறியது: ''சட்டத்தின் முகம் நியாயமானதாக இருந்தாலும், அதன் தோற்றம் பாரபட்சமற்றதாக இருந்தாலும், அது ஒரு தீய கண்ணும் சமத்துவமற்ற கையும் கொண்ட ஒரு அதிகாரியால் செயல்படுத்தப்படுமானால், ஒரே மாதிரியான சூழலில் மனிதர்களிடையே, அவர்களது உரிமைகள் தொடர்பான விஷயத்தில், நியாயமற்ற, சட்டவிரோதமான பாகுபாடுகளை நடைமுறையில் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது.'' உச்சநீதிமன்றம் ''ஒரு தீய கண்ணும் சமத்துவமற்ற கையும்'' என்று கூறியிருப்பதுதான் அரசின் அணுகுமுறைக்கான சோதனை.

***2007 முதல் 2012 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் அனைத்து மாநிலங்களிலும் மொத்தம் 3,26,000 பேர் காவல்துறையில் இணைக்கப்பட்டனர். அவர்களில் 7,132 பேர் மட்டுமே அல்லது 2.18 சதவீதத்தினர் மட்டுமே முஸ்லிம்கள்.***

### தடா அத்துமீறல்கள்

''சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் சில மாநிலங்களுக்கு சென்று வந்ததைத் தொடர்ந்து'', 1994 ஜூன் 6ல் ஆணையம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ''தடா சட்டம் பெருமளவுக்கு தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, அத்துமீறல்கள் நடந்துள்ளன என்ற பொதுவான கருத்தில் பெருமளவுக்கு உண்மை இருக்கிறது'' என்று அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. ''தடா சட்டம் சிறுபான்மையினருக்கு எதிரான ஆயுதமாக பல முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் பெண்களும் குழந்தைகளும் கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது சிறுபான்மை மக்களின் மனங்களில் ஆழ்ந்த சந்தேகத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தியிருக்கிறது,'' என்றும் அந்தத் தீர்மானம் கூறுகிறது.

பாரதிய ஜனதா கட்சியின் 17 மாத ஆட்சியின்போது, உத்தரபிரதேச மாநிலத்தில் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 1200 பேரில் மிகப் பெரும்பாலோர் முஸ்லிம்களும் சீக்கியர்களும்தான் என்று உத்தரபிரதேச மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அகமத் ஹாசன் கூறியுள்ளார்.

1994 ஆகஸ்ட் 21 அன்று மும்பை நகரில் பேசிய அன்றைய மத்திய உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை இணையமைச்சர் ராஜேஷ் பைலட், தடா சட்டம் முஸ்லிம்களுக்கு எதிராக வெகுவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அவர் இப்படிச் சொன்னது, மாலேகாவுன் குண்டுவெடிப்பு நடப்பதற்கு பத்தாண்டுகளுக்கு முன்பு. பிவாந்தி வன்முறை தொடர்பாக நீதிபதி மதோன் அளித்துள்ள அறிக்கை முழுமையானதாகவும், நியாயமானதாகவும், துணிவானதாகவும் தட்டிக்கேட்க இயலாத அளவிற்கு அமைந்துள்ளது.

### விசாரணைக் குழு அறிக்கைகள்

மதக் கலவரங்கள் நடக்கிறபோது காவல்துறையினரில் பெரும்பாலோர் எந்த அளவிற்கு முஸ்லிம்களுக்கு எதிரான மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் என்பது அப்பட்டமாக வெளிப்படுகிறது. விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் எப்போதுமே நியாயமானதாக இருந்துவிடுவதில்லை. ஆயினும், சில நீதிபதிகள் என்ன சொல்ல நினைத்தார்கள் என்பதையும்விட அதிகமான தகவல்களை அந்த அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. இந்த சுருக்கமான தகவல் குறிப்பு, கைது நடவடிக்கைகளுக்கும் மரணங்களுக்கும் இடையேயான விகிதம் எப்படி பாரபட்சமானதாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இந்தத் தகவல் குறிப்பின்படி அதிகமான முஸ்லிம்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் கொல்லப்படுகிறார்கள், காயப்படுத்தப்படுகிறார்கள்.

1. ராஞ்சி – ஹாட்யா மதக் கலவரம் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவரும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதியுமான ரகுபார் தயாள், பின்வரும் கருத்தைக் கூறுவதன் மூலம் தனது சொந்தக் கண்ணோட்டத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்: ''எந்த ஒரு சிறு சம்பவமும் கடுமையான பிரச்சனையாக மாறுவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது 1947ல் நாடு பிளவுபட்டதிலிருந்து இரண்டு சமுதாயங்களைச் சேர்ந்த மக்களிடையே நீடித்து வருகிற நம்பிக்கையின்மைதான். இந்த நம்பிக்கையின்மையை மாற்றுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க

வேண்டியது அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும்தான். பாகிஸ்தான், இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான உறவில் உண்மையான முன்னேற்றம் ஏற்படுவது இந்த நம்பிக்கையின்மையிலிருந்து உருவாகும் சந்தேகங்களைப் போக்குவதிலும் அந்த நம்பிக்கையின்மையை அகற்றுவதிலும் பெரும்பங்கு வகிக்கும்.'' (ஆகஸ்ட் 22–29, 1967, 101).

''ஆகஸ்ட் 22 முதல் 27 வரையிலான நாட்களில் ஊரடங்கு ஆணைகளை மீறியதாக (ஒரு சிறு எண்ணிக்கையிலான) இந்துக்களும், 594 முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டனர்.'' ஆகஸ்ட் 22 அன்று 4 இந்துக்களும் 61 முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டனர். 7 இந்துக்களின் வீடுகளும் 19 முஸ்லிம் வீடுகளும் சோதனையிடப்பட்டன. கலவரங்களில் கொல்லப்பட்டவர்கள் 184 பேர். அதில் இந்துக்கள் 19 பேர், முஸ்லிம்கள் 164 பேர். ஒருவர் யார் என உறுதிப்படுத்தப்படவில்லை. விசாரணையின்போது 49 இந்துக்களும் 102 முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டனர். குறுக்கு விசாரணை எதுவும் அனுமதிக்கப்படவில்லை. மூடிய அறைகளுக்குள்தான் விசாரணை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2. 1969 செப்டம்பர் 18 அன்றும் அதற்குப் பிறகும் அகமதாபாத் நகரிலும் குஜராத்தின் இதர பகுதிகளிலும் நடந்த மதக் கலவரங்கள் தொடர்பான மிகப்பெரிய விசாரணைக் குழு அறிக்கை உண்மையிலேயே தனித்துவம் வாய்ந்ததாகும். அந்த விசாரணைக் குழுவை அமைத்தது மாநில அரசு அல்ல மத்திய அரசுதான். அதன் தலைவர் நீதிபதி பி.ஜகன்மோகன் ரெட்டி, உச்சநீதிமன்றத்தின் முதல் நீதிபதிகளில் ஒருவர் அதன் உறுப்பினர்களாக செயல்பட்டவர்கள் குஜராத் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாகப் பணியாற்றியவர்களான நூசேர்வாஞ்சி கே.வக்கீல், அக்பர் எஸ். சரேளா.

சில ஆதாரங்களை மறைக்க மாநில அரசும் காவல்துறையும் செய்த முயற்சிகள் பற்றி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (பக்கங்கள் 216–218). குறிப்பாக இன்றைய பா.ஜ.க.வின் முன்னோடியான ஜனசங்கம், ஆர்.எஸ்.எஸ். ஆகியவற்றின் சில தலைவர்கள் அந்தக் கலவரத்தில் தீவிரமாகப் பங்கேற்றதை மறைப்பதற்கு முயற்சி நடந்துள்ளது. அதிகாரப்பூர்வ தகவல்களின்படி கலவரங்களில் சேதமடைந்த இந்துக்களின் உடைமைகள் மதிப்பு ரூ. 75,85,845 முஸ்லிம்களின் உடைமைகள் மதிப்பு ரூ. 3,47,38,224. காயமடைந்த இந்துக்கள் 232 பேர். முஸ்லிம்கள் 329 பேர். கொல்லப்பட்டவர்களில் இந்துக்கள் 24 பேர், முஸ்லிம்கள் 430 பேர், மற்றவர்கள் 58 பேர்.

**''நான் பயங்கரவாதி அல்ல, ஆனால் என்னுடைய பெயர் கான் என்று இருப்பதால் இந்தத் தொல்லைகளை அனுபவிக்க வேண்டுமா'' என்ற உணர்வு ஏற்படாமல் இருப்பதை போலீசார் உறுதிப்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது**

3. 1971ல் நடந்த தெளிச்சேரி கலவரம் தொடர்பான விசாரணைக் குழு அறிக்கையும் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது. திருவாங்கூர் – கொச்சின் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜோசப் விதாயத்தில் உள்ளிட்டோர் அந்த விசாரணைக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அந்தக் கலவரத்தின்போது 569 வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. 89 சம்பவங்களில் இந்துக்கள் பலியானார்கள். முஸ்லிம்கள் பலியான சம்பவங்கள் 480. இந்துக்களுக்கு சொந்தமான 72 கடைகளும் 4 வீடுகளும் சூறையாடப்பட்டன, 3 வழிப்பாட்டுத் தளங்கள் சேதப்படுத்தப்பட்டன. சூறையாடப்பட்ட முஸ்லிம்களின் வீடுகள் 247. சேதப்படுத்தப்பட்ட அவர்களது கடைகள் 147. சேதப்படுத்தப்பட்ட மசூதிகளும் மதரசாக்களும் 63 (பக்கம் 66).

''காவல்துறையின் அனைத்து நிலைகளிலும் இருந்தவர்கள் அரசியல் பதற்றத்தால் பாதிக்கப்பட்டிருந்தார்கள்,'' என்று நீதிபதி கூறியுள்ளார். கலவரங்கள் நடந்து கொண்டிருந்தபோது போலீசார் வெறுமனே நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் மதவெறி என்ற வைரஸ் கிருமியால் பாதிக்கப்பட்டிருந்தார்கள்,'' என்று நீதிபதி கூறியுள்ளார்.

4. 1970 மே மாதம் பிவாந்தி, ஜல்காவூன், மஹாத் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற மதக் கலவரங்கள் பற்றிய விசாரணை குழு அறிக்கை 7 பாகங்களாக உள்ளது. விசாரணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர்

பம்பாய் நீதிமன்றத்தின் நீதிபதியும், பின்னர் உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவருமான டி.பி. மதோன். அவரைப் போல் கடுமையாக உழைத்த நீதிபதிகள் மிக அரிது. பல உண்மைகளை நீதிபதி மதோன் வெளிப்படுத்தியுள்ளார்.

முதலில் சோகமான விவரங்கள்: பிவாந்தி கலவரங்களில் உயிரிழந்தவர்களில் இந்துக்களில் 17, முஸ்லிம்கள் 59 பேர். ஆனால், தண்டனைக்குரிய குற்றப் பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் இந்துக்கள் 21 பேர் முஸ்லிம்கள் 901 பேர்.

***"சட்டத்தின் முகம் நியாயமானதாக இருந்தாலும், அதன் தோற்றம் பாரபட்சமற்றதாக இருந்தாலும், அது ஒரு தீய கண்ணும் சமத்துவமற்ற கையும் கொண்ட ஒரு அதிகாரியால் செயல்படுத்தப்படுமானால், ஒரே மாதிரியான சூழலில் மனிதர்களிடையே, அவர்களது உரிமைகள் தொடர்பான விஷயத்தில், நியாயமற்ற, சட்டவிரோதமான பாகுபாடுகளை நடைமுறையில் ஏற்படுத்தக்கூடியதாக."***

ஊரடங்கு ஆணையை மீறியதாக கைது செய்யப்பட்டவர்களில் இந்துக்கள் 323 பேர், முஸ்லிம்கள் 1,282 பேர். சிறையில் அடைக்கப்பட்ட முஸ்லிம்களில் சிலர் அடித்து உதைக்கப்பட்டார்கள். கைதிகளுக்கு உணவு, குடிநீர் வழங்குவதிலும் குழாய்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று தண்ணீர் பருக அனுமதிப்பதிலும் பாரபட்சம் காட்டப்பட்டது என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

விவாந்தியில் நடந்த கலவரத்தை தூண்டிவிட்டது ஒரு குறிப்பிட்ட அமைப்புதான். அதன் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனசங்கம், சிவசேனா கட்சிகளில் இருந்தவர்கள் என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

**ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் குற்றச்சாட்டு**

தற்போது, திகைப்பூட்டும் இரண்டு விவரங்களைப் பார்ப்போம். அறிக்கையின் பாகம் 1 'மதக் கலவரங்களை கையாள்வதற்கான வழிகாட்டல்கள்' என்ற தலைப்பில் அச்சிடப்பட்ட புத்தகம் குறித்து அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநில அரசின் உள்துறை 1969 ஆகஸ்ட்–ல் வெளியிட்ட எக்ஸிபிட் ஜி–39 என்ற, "ரகசியம் – அதிகாரப்பூர்வ பயன்பாட்டிற்கு மட்டும்" என்று குறிப்பிடப்பட்ட ஆதாரம் அது. அந்த ஆதாரம் பற்றி அறிக்கையில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதைப் பார்ப்போம்: "இந்தப் புத்தகம் அனைத்து மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள் காவல்துறை ஆணையர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், துணை ஆணையர்கள் ஆகியோருக்கு விநியோகிக்கப்பட்டது. புத்தகத்தின் கூடுதல் படிகள் டி.ஐ.ஜி., ஏ.ஐ.ஜி.பி. –க்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

அந்தப் புத்தகம் வழங்கப்பட்ட அதிகாரி இடமாறுதல் செய்யப்படுவாரானால், அப்போது அவர் தனக்கு அடுத்தபடியாக வருபவரிடம், இதர ரகசிய ஆவணங்களோடு சேர்த்து அந்தப் புத்தகத்தை ஒப்படைக்க வேண்டும். புத்தகம் வழங்கப்பட்ட அதிகாரி தனக்கு அடுத்து வருபவரல்லாமல் வேறு யாருக்கும் அதனைத் தரக்கூடாது. பொது மக்கள் அந்தப் புத்தகத்தைப் பார்வையிட அனுமதியில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் இப்படியொரு புத்தகம் இருந்தது என்பதை ஆணையத்திற்கு முதலில் தெரிவித்தவர், ஜனசங்கத்தின் சார்பில் வாதாடிய பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி.

உள்துறைச் செயலரை அவர் குறுக்கு விசாரணை செய்தபோது இந்தப் புத்தகம் ஒரு ஆதாரமாகத் தாக்கல் செய்யப்பட்டது. அரசாங்கத்தால் "ரகசியம்" என்று குறிப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தின் நிலை இதுதான்! புத்தகத்தின் "வழிகாட்டல்களில்" மற்றவற்றோடு சேர்த்து, நாட்டில் மதவாத நிலைமையின் பின்னணி பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. குறிப்பாக மகாராஷ்டிரா மாநில நிலைமைப் பற்றி கூறப்பட்டிருந்தது.

"புத்தகத்தில் பொதுவாக மதவாத அமைப்புகள், அவரது செயல்பாடுகள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவை முஸ்லிம் அமைப்புகள் மட்டும்தான். அந்தப் புத்தகத்தில் ஜனசங்கம் பற்றியோ, ஆர்.எஸ்.எஸ். பற்றியோ, சிவசேனா பற்றியோ எதுவும் கூறப்படாதது ஏன் என்ற கேள்விக்கு உள்துறை செயலர் ராஜ்வாதேயால் பதில் கூற முடியவில்லை" என்றும் விசாரணைக் குழு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அறிக்கையின் மூன்றாம் பாகத்தில் உள்ள 50வது அத்தியாயத்தில் ("சதித்திட்டம்") உள்ள தகவல்கள் இதற்கு மேலும் அதிர்ச்சியளிக்கின்றன. மகராஷ்டிரா மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட சிறப்பு விசாரணைக் குழு, பிவாந்தி சதி வழக்கை 10 வழக்குகளாகத் தொகுத்துப் பதிவு செய்திருந்தது. திட்டமிட்ட முறையில் பொய்யாகப் பதிவு செய்யப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் தேசத்தின் கவனத்திற்கும் கவலைக்கும் உரியவை. அது ஒரு தேசிய மோசடி. இன்றும் நினைவு கூறத்தக்கது.

காவல்துறையினர் தங்களது குற்றப்பத்திரிகையில் "உள்ளூர் முஸ்லிம்கள் 1970 ஏப்ரல் மாதத்திலிருந்தே, பிவாந்தி நகரம் முழுக்க மிகச் சரியாக மாலை 5.30 மணிக்கு ஒரே நேரத்தில் மதக் கலவரங்களை நடத்த சதித் திட்டம் தீட்டியிருந்தனர் என்ற விவரம் இந்த குற்றச்சாட்டு குறித்த தொடர்ச்சியான புலனாய்வில் தெரியவந்தது. சிவஜெயந்தி ஊர்வலத்தில் தாக்குதல் நடத்துவதும், இந்து சமூகத்தில் ஒரு பீதியை ஏற்படுத்துவது மட்டுமே அந்த சதியின் நோக்கமல்ல.

மாறாக நகரம் முழுக்க மதக் கலவரத்தை தொடங்குவது என்பதும் இந்து சமூகத்தையும் நகரில் உள்ள அவர்களது உடைமைகளையும் மொத்தமாக அழிப்பது என்பதும்தான் அவர்களது நோக்கம். இந்த நோக்கத்துடன் 37 முஸ்லிம் தலைவர்களும் பிவாந்தி அமைதிக்குழு உறுப்பினர்களும் 1970 ஏப்ரல் 18 அன்று அமைதிக் குழு தலைவரிடம் ஒரு மனுவை அளித்தனர். சிவஜெயந்தி ஊர்வலம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக அதிகாரிகளோடும் இந்துக்களோடும் அவர்கள் ஒரு உடன்பாட்டிற்கு வர மறுத்த நிலையில் அந்த மனுவை அளித்தனர்.

சதித் திட்டத்தின் அடிப்படையின் வேரும் இதுதான். அதன்பிறகு முஸ்லிம்கள் அந்த சதியை 1970 மே 7 அன்று செயல்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ச்சியாக எடுத்து வந்தனர். சதியை நிறைவேற்றுவதற்கான சரியான தருணம் சிவஜெயந்தி என்று அவர்கள் நினைத்தனர். கையெழுத்துப் போட்டுள்ள 37 பேரும் அந்த சதித் திட்டத்தின் தலைவர்களாவர். பிவாந்தி நகரின் முஸ்லிம் சமூகத்தினர் அனைவரும், மதக் கலவரங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற அவர்களது – வெளிப்படையான மற்றும் ரகசியமான – வேண்டுகோளை ஏற்றனர்." என்று காவல்துறை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ உரிமையியல் வழக்குகள் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், பிரதிநிதித்துவ குற்றவியல் வழக்குகள் பற்றி கேள்விப்பட்டிருக்க வாய்ப்பில்லை. "நகரத்தின் இந்துக்கள் அனைவருக்கும்" எதிராக "பிவாந்தியின் முஸ்லிம் சமூகம் ஒட்டுமொத்தமாக சதி செய்தது" என்று காவல்துறையால் குற்றம்சாட்டப்பட்டது. ஆணையத்தின் முன்பாக ஒரு வழக்கறிஞராக இந்தக் கட்டுரையாளர் கலந்துகொண்டார். ஒரு நாள் மதியம் நடந்த திகைப்பூட்டும் நிகழ்வை இப்போதும் கட்டுரையாளர் நினைவுகூர்கிறார். ஆணைய விசாரணைகளோடு இணைந்ததாக குற்றவியல் வழக்கு விசாரணையும் நடந்துகொண்டிருந்தது. 1971 ஜூலை 6 பிற்பகலில், காவல்துறையின் ஒரு உயர் அதிகாரி குற்றச்சாட்டு பற்றிக் கூறினார். உடனே குறுக்கிட்ட நீதிபதி மதோன், கலவரங்களுக்கே காரணம் அந்த சதித்திட்டம்தான் என்பதால், அந்த சதிக்கான ஆதாரம் எதையும் அரசு ஏன் தாக்கல் செய்யவில்லை என்று கேட்டார். ஆதாரத்தை தன் முன் தாக்கல் செய்யுமாறு நீதிபதி கூறினார். அந்த வழக்கில் 223 முஸ்லிம்கள் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

***நீதித்துறை நினைத்தால் எளிதில் குணப்படுத்த முடியும் என்கிற ஒரு நீண்டகால நோய் தொடர்பாக அதற்குள்ள அக்கறையற்ற போக்கு கவலை தருகிறது. இங்கேயும் காவல்துறையினர் "ஒரு தீய கண்ணோடும், சமத்துவமற்ற கையோடும்" சட்டத்தை செயல்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது.***

அவர்களில் 16 பேர் சதித் திட்டம் தீட்டியவர்கள் என்று கூறப்பட்டிருந்தது. நம்ப முடியாத விஷயம் என்னவென்றால், அந்த 16 பேரில் ஒருவரான இப்ராஹிம் மட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உள்ளூர் கிளையின் தலைவர் வழக்கைத் தொடுத்திருப்பது மாநில அரசுதான் என்பதால் ஆதாரத்தை தாக்கல் செய்ய அவகாசம் அளிக்கும் வகையில் ஆணையம் விசாரணையை இரண்டு வாரங்களுக்குத் தள்ளி வைத்தது. அரசுத் தரப்பு வழக்கறிஞர் ரஜனி பட்டேல் சாட்சிகளை முன்னிறுத்தினார். 12 நாட்களில் 7 சாட்சிகளின் வாக்குமூலங்கள் பதிவான பிறகு,

''நிலைமையை பரிசீலிப்பதற்காக'' விசாரணையைத் தள்ளி வைக்க வேண்டும் என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். குறுக்கு விசாரணையின்போது எல்லா சாட்சிகளும் பின்வாங்கினார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் ஆணையத்திடம் குற்றவியல் வழக்கு விலக்கிக்கொள்ளப்படுவதாகக் கூறினார். இந்த குற்றவியல் வழக்கில் ஆணையம் இவ்வாறு தலையிடாமல் விட்டிருந்தால், குற்றமற்ற 223 பேர் புனையப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டிருப்பார்கள் (பக்கங்கள் 127–288).

## வெறுப்புக் கலாச்சாரமும் நிலைகுலைந்த நீதிமன்றமும்

பொறியாளரும், மனித உரிமைச் செயல்பாட்டாளருமான திலிப் டி'சோசா இதே போன்ற நிலைமை குறித்து தனது ''வெறுப்புப் பேச்சும் குற்றமும் தண்டனையும்'' என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். புதுதில்லியைச் சேர்ந்த நோக்கம் சார்ந்த ஆய்வு நிறுவனத்தின் இக்பால் ஏ அன்சாரி தொகுத்துள்ள 'மதக்கலவரங்கள்: இந்திய அரசும் சட்டமும்' என்ற புத்தகத்தில் உள்ள அந்தக் கட்டுரையில் இந்த நிலைமை குறித்து பதிவு செய்துள்ளார். 1994 செப்டம்பர் பிற்பகுதியில், பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.எல்.தூதாத், ஜி.ஆர்.மஜிதியா ஆகியோர் அமர்வுக் குழு ஒரு பொது நல மனு மீது விசாரணை நடத்தியது. அந்த மனு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்றத்தில் காத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சிவசேனா தலைவர் பால்தாக்ரே அவரது 'சாம்னா' பத்திரிகையில், கலவரங்களின்போது எழுதிய தலையங்கங்களுக்காக அவர்மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் 153A, 153B பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடுக்குமாறு அரசாங்கத்திற்கு நீதிமன்றம் ஆணையிட வேண்டும் என்று அந்த பொதுநல மனு கோரியது. நீதிபதிகள் அந்த மனுவைத் தள்ளுபடி செய்தனர். அந்த தலையங்கங்கள் இந்திய குற்றவியல் சட்டத்தின் 153A, 153B பிரிவுகளை மீறவில்லை என்று நீதிபதிகள் கூறினர்.

இதுபற்றி திலிப் டி'சோசா எழுதியிருப்பது வருமாறு: ''மேற்கொண்டு நாம் இதுபற்றிப் பார்ப்பதற்கு முன் அந்த தலையங்கங்களில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கு இங்கே ஒரு சிறிய எடுத்துக்காட்டுத் தரப்படுகிறது: டிசம்பர், 1992: 'யார் இந்த சிறுபான்மையினர்? இந்த முஸ்லிம் துரோகிகள்தான் நமது நாட்டைப் பிரித்தார்கள், அப்போதிருந்து நம்மை சுவாசிக்கவிடாதவர்கள்.' 8, டிசம்பர், 1992: 'பாபர் மசூதி இடிக்கப்பட்டதிலிருந்து முஸ்லிம்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் பாபர் மசூதிக்கு என்ன கதி ஏற்பட்டதோ அதுவேதான் அவர்களுக்கும் ஏற்படும். மசூதி இடிக்கப்பட்டதை குறை சொல்கிற முஸ்லிம்கள் மதம் இல்லாதவர்கள், நாடு இல்லாதவர்கள்.' 9, டிசம்பர், 1992: 'பாகிஸ்தான் எல்லையைத் தாண்டி இந்தியாவைத் தாக்கக்கூடாது. இந்தியாவின் 25 கோடி முஸ்லிம்கள் ஆயுதம் தாங்கிய ஒரு உள்நாட்டுக் கலகத்தைச் செய்வார்கள். அவர்கள் பாகிஸ்தானின் 7 அணுகுண்டுகளில் ஒன்றைப் போன்றவர்கள்.' 9, ஜனவரி, 1993: 'நாம் குட்டி பாகிஸ்தான் என்று குறிப்பிடுகிற பேந்தி பஜார், நுல் பஜார், டோங்கிரி, பைதோனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் கண்ட இடத்தில் சுடப்பட வேண்டும்...' என்று அந்தத் தலையங்கங்கள் கூறுகின்றன.

மனுதாரர் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இதற்கான சிறப்பு விசாரணை மனுவை நீதிபதிகள் எம்.எம்.பூஞ்சி, ஜெய்சந்திர ரெட்டி ஆகியோர் கொண்ட குழு, 1995 ஜனவரி 6ல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. உடனடியாக அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. உயர்நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி செய்திருப்பதால் அதனை உச்சநீதிமன்றம் எடுத்துக்கொள்வது அறிவுடைமையாகாது, பொது நலனுக்கும் ஏற்றதாகாது என்று நீதிபதிகள் கூறினர். பம்பாய் உயர்நீதிமன்ற விசாரணையின்போது போலீசார், பால்தாக்ரேயின் வேறு சில எழுத்துகளுக்காக அவர் மீது ஏற்கெனவே வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்று வாதிட்டுள்ளனர் என்பதைக் குறிப்பிட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், ஆகவே, தண்டனைக்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று விளக்கமளித்தனர்.

ஆகவே, உச்சநீதிமன்றம் தலையிடத் தேவையில்லை என்றனர். ''ஓராண்டுக்குப் பிறகு இப்போது, காவல்துறையினரின் அந்த வழக்குகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை சொல்ல வேண்டுமா என்ன,'' என்று டி'சோசா கேட்டுள்ளார். புகழ்பெற்ற வழக்குரைஞர்கள், உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும், உச்சநீதிமன்றம் மேல்முறையீட்டை ஏற்க மறுத்ததையும் கடுமையாக விமர்சித்துள்ளனர், தங்களது அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

நீதித்துறை நினைத்தால் எளிதில் குணப்படுத்த முடியும் என்கிற ஒரு நீண்டகால நோய் தொடர்பாக அதற்குள்ள அக்கறையற்ற போக்கு கவலை தருகிறது. இங்கேயும் காவல்துறையினர் ''ஒரு தீய கண்ணோடும், சமத்துவமற்ற

கையோடும்'' சட்டத்தை செயல்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது எப்போதும் உடனடியாக வழக்குகள் தொடுக்கப்படுகின்றன. தேர்தல் காலத்தில் கூட அவர்கள் நகரங்களுக்குள் நுழைவதற்கும் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கும் அனுமதிக்கப்படுவதில்லை.

நிச்சயமாக இது ''நிறுவனமயமாக்கப்பட்ட ஒரு பாரபட்சம்'' என்றுதான் சொல்ல வேண்டும். இந்த பாரபட்சம் ஒழிவது ஒருபுறம் இருக்க, அது குறைவதற்கான அறிகுறி கூட இன்னும் தென்படவில்லை. அரசியல் அமைப்பின் உயர்பீடங்களில் இந்தப் பாரபட்சம் குடியேறியிருக்கிறது; சில பிரதமர்களிடம், அமைச்சர்களிடம், அதிகார வர்க்கத்தினரிடம், போலீஸ்காரர்களிடம் இந்தப் பாரபட்சம் இருக்கிறது. ஏன், உச்சநீதிமன்றத்தின் சில நீதிபதிகள் கூட தங்களது மதப்பாகுபாட்டு உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர்.

முஸ்லிம்கள் பற்றி கடுமையாகப் பேசிய மொரார்ஜி தெசாய், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பிரதமரானார். பிரதமர்கள் உலகத்தில் ஒரு அறிய நிகழ்வாக, அடல்பிகாரி வாஜ்பாய், தனது சொந்த மக்களில் ஒருபகுதியினரையே பகிரங்கமாக சந்தோஷமாகத் தாழ்த்திப் பேசினார்.

**நம்பிக்கை அளிக்கும் முரண்பாடு**

இதில் ஒரு முரண்பாடான காட்சி நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. ஒரு காலத்தில் மதக் கலவரங்களால் குலுங்கிய மாநிலம் மேற்கு வங்கம். 1977ல் அதன் முதலமைச்சராக ஜோதி பாசு பொறுப்பேற்ற பிறகு அந்த நிலைமை அடியோடு மாறியது. ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அரசியல்வாதிகளிடமிருந்தே காவல்துறையினர் தங்களது அணுகுமுறைகளை வகுத்துக்கொள்கின்றனர்.

குஜராத் படுகொலை தொடர்பான, பெஸ்ட் பேக்கரி வழக்கில் துணிச்சலும் நேர்மையும் கொண்டவராக, உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி வி.என்.காரே அளித்த தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

2004 ஏப்ரல் 12ல் அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டது (ஜஹிரா ஹபிபுல்லா எச் ஷேக் எதிர் குஜராத் மாநில அரசு மற்றும் இதரர்கள் - *2004, 4 SCC 158*). உச்சநீதிமன்றம் கூறிய கருத்துகள் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. ஆகவே அதனால்தான் குஜராத் மாநில அரசு அந்தக் கருத்துகளை நீக்க வேண்டும் என்று கோரி மனுதாக்கல் செய்து, தோல்வியடைந்தது. உச்சநீதிமன்றம் கூறிய கருத்துகள் வருமாறு: ''இதில் மாநில அரசின் பங்கு பெருமளவுக்கு ஆராயப்பட வேண்டும். அமர்வு நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக மாநில அரசின் அணுகுமுறையில் உண்மையான ஆழ்ந்த அக்கறை எதுவும் இல்லை என்ற எண்ணம்தான் எவருக்கும் ஏற்படும்...''

''மக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்கப் பொறுப்பேற்றவர்கள், விசாரணைகள் நேர்மையாகவும் முறையாகவும் நடைபெறுவதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் உண்மையான அக்கறையும் எதையும் காட்டவில்லை என்று தெரிகிறது. ஏராளமான மக்கள் உயிரை இழந்துவிட்டனர்... பெஸ்ட் பேக்கரி கட்டடமும் அப்பாவிக் குழந்தைகளும் கதியற்றப் பெண்களும் தீயில் எரிந்துகொண்டிருந்தபோது நவீன கால 'நீரோக்கள்' வேறு எதிலோ கவனம் செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

அநேகமாக அவர்கள் குற்றங்களில் ஈடுபட்டவர்களை எப்படிக் காப்பாற்றுவது அல்லது எப்படிப் பாதுகாப்பது என்பதில் கவனம் செலுத்திக்கொண்டிருந்திருக்கக் கூடும். நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களது கைகளில் நாட்டின் சட்டமும் நீதியும் வெறும் ஈக்களாக சிக்கிக்கொள்கின்றன. வேலியே பயிரை மேயத் தொடங்குகிறபோது சட்டமும் ஒழுங்கும் அல்லது உண்மையும் நீதியும் தாக்குப்பிடித்து நிற்க முடியும் என்ற நம்பிக்கை இல்லாமல் போகிறது.''

அந்த நீரோ யார் என்பதை சரியாக ஊகிப்பவர்களுக்கு பரிசு எதுவும் தேவையில்லை. நீதிமன்றத்தின் கருத்துகளை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று கோரிய மனுவே, அந்த நீரோ என்ற பட்டம் யாருக்குப் பொருந்தும் என்பதைக் காட்டிவிடுகிறது. விசாரணையின்போது தலைமை நீதிபதி வி.என்.காரே, ''குஜராத் அரசின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை'' என்று கூறினார்.

பின்னுரையாக: கடைசியில் நீதி என்பது குற்றவாளிகளுக்கு சாதகமாகவே முடிகிறது என்பதைச் சொல்லியாக வேண்டும். மேற்படி குற்றம் நடந்த இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்டீபன் லாரன்ஸ் கொலை செய்யப்பட்டதற்காக, இரண்டு பேர் மட்டுமே குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டார்கள், அவர்களுக்கு ஆயுள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது.

தில்லி, குஜராத் படுகொலைகளில் இரையானோருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் என்றாவது ஒரு நாள் நீதி கிடைக்குமா ? அப்படி தெரியவில்லை.

**ஆதாரம்: 'ஃபிரன்ட் லைன்' டிசம்பர் 26, 2014**

# முடிக்கப்பட்ட 'என்கவுன்டர்' வழக்கில் முளைத்து வரும் கேள்விகள்

– சித்தார்த் வரதராஜன்

2005–06ம் ஆண்டுகளில் ஷோராபுதீன் ஷேக், அவரது மனைவி கவுசர் பீ, துளசி ராம் பிரஜாபதி ஆகியோர் கொலை செய்யப்பட்டது தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் பாஜக தலைவர் அமித் ஷா விடுவிக்கப்பட்டிருக்கிறார். சிபிஐ நீதிமன்றத்தின் இந்த முடிவில் உள்ள மிக அதிர்ச்சியளிக்கும் அம்சம் என்னவென்றால், அமித் ஷா இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று நீதிபதி கருதினார் என்பதல்ல. மாறாக இந்தத் தீர்ப்பின் பின் விளைவுகள் குறித்தும், அதனால் தனது சொந்த மரியாதைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும், அந்த என்கவுன்டர் வழக்கின் எதிர்காலம் குறித்தும் மத்திய புலனாய்வுத் துறை (சிபிஐ) கவலைப்பட்டதாக தெரியவில்லை என்பதுதான் அதிர்ச்சியளிக்கிறது. பரபரப்பை ஏற்படுத்திய அந்த குற்றச்செயல் தொடர்பான புகார்களிலிருந்து அமித் ஷாவை விடுவித்த சிபிஐ நீதிமன்றம், குஜராத்தின் முன்னாள் உள்துறை அமைச்சருக்கு எதிரான முக்கிய ஆதாரங்களை தூக்கி எறிந்துவிட்டது என்பது மட்டுமல்லாமல், 20க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீதான விசாரணை தொடங்குவதற்கு முன்பே, அவர்கள் மீதான புகார்களுக்கு அடிப்படையாக உள்ள அம்சங்களையும் புறக்கணித்துள்ளது.

கடத்தல் கும்பலைச் சேர்ந்த ஷோராபுதீனுக்கு குஜராத் காவல்துறையினரோடும் அரசியல் சக்திகளோடும் தொடர்பு இருந்தது, அவரது முன்னாள் கூட்டாளிகளுக்கு அவர் ஒரு சங்கடமாக மாறியிருந்தார் என்று சிபிஐ கூறியிருந்தது. இந்த வாதத்தை தள்ளுபடி செய்துள்ள நீதிமன்றம், ஷோராபுதீனுக்கு எதிராக வழக்குகள் இருந்ததால் அவரை கைது செய்ய வேண்டிய எல்லா நியாயங்களும் காவல்துறைக்கு இருந்தன என்று நீதிபதி கூறியுள்ளார். இந்த விளக்கத்தின் அர்த்தம் என்னவென்றால், ஷோராபுதீன் கொல்லப்பட்ட அந்த 'மோதல்' சம்பவம் சரியானதே என்பதுதான்! உண்மை என்னவென்றால், ஷோராபுதீன் கைது செய்யப்படவில்லை. மாறாக அவர் பயணம் செய்துகொண்டிருந்த பேருந்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவரோடு பேருந்தில் பயணம் செய்த அவரது மனைவியும் இப்படித்தான் கொல்லப்பட்டார்.

''குஜராத் மாநில காவல்துறை அதிகாரிகள், குறிப்பாக உயர் அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை கருத்தில்கொண்டு பார்க்கிறபோது இந்த வழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று ஆணையிட வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது,'' என்று 2010 ஜனவரியில் உச்சநீதிமன்றம் கூறியது. 2006 டிசம்பரில் அமித் ஷா–வுக்கும், மாநில காவல்துறையின் அன்றைய தலைமை இயக்குநர் பி.சி. பாண்டே, கூடுதல் தலைமை இயக்குநர் (சிஐடி) ஜி.சி. ராய்கர், ஐ.ஜி.காவல்துறை தலைமை ஆய்வாளர் (சி.ஐ.டி.) கீதா ஜோஹ்ரி ஆகியோருக்கிடையே நடைபெற்ற ஒரு கூட்டம் பற்றி உச்சநீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கில் முக்கிய புலனாய்வாளராக செயல்பட்டவர் கீதா ஜோஹ்ரி. அந்தக் கூட்டத்தில் அமித் ஷா, ஜோஹ்ரியின் உதவியாளர் சோலன்கி தயாரித்த புலனாய்வு அறிக்கைகளில் திருத்தம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியதாக கூறப்படுகிறது.


ராய்கர் தாக்கல் செய்த வாக்குமூலம், தொலைபேசி அழைப்பு விவரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சிபிஐ அமித் ஷா மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. ஆதாரங்களை அழிக்க உதவியதாக ஜோஹ்ரி, பாண்டே ஆகியோர் மீதும் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால், பின்னர், 2006 டிசம்பரில் அப்படியொரு கூட்டம் நடக்கவில்லை என்று பாண்டே, ஜோஹ்ரி இருவரும் கூறினார்கள் என்பதற்காக, ஷா–வுக்கு எதிரான ராய்கர் வாக்குமூலத்தை சிபிஐ நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள இரண்டு பேர் கூறியதை, அதிலும் ஒருவரை உச்சநீதிமன்றம் வெளிப்படையாகவே கடிந்துகொண்டுள்ள நிலையில், சிபிஐ நீதிமன்ற நீதிபதி நம்பிவிட்டார்.

உச்சநீதிமன்றத்தின் வாதங்களுக்கு முற்றிலும் எதிரானதாக சிபிஐ நீதிமன்றத்தின் வாதங்கள் இருக்கின்றன. எனவே, இந்த வழக்கின் எதிர்காலம் சிபிஐ கையில்தான் இருக்கிறது. சிபிஐ முனைப்புடன் மேல்முறையீடு செய்யப் போகிறதா அல்லது, அந்த ''கூண்டுக் கிளி'' தனது முடக்கப்பட்ட இறக்கைகளை விரித்து தான் என்ன செய்ய வேண்டும் என்று தனது அரசியல் எஜமானர்கள் கூறுவதைத்தான் சொல்லப் போகிறதா ? இந்தக் கேள்விக்கான பதிலில் இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி என்பதற்கான எதிர்காலமும் ஜனநாயகத்தின் எதிர்காலமும் இருக்கின்றன.

**கட்டுரையாளர்:** புதுதில்லியில் உள்ள பொது விவகாரங்கள் மற்றும் ஆய்வுக் கோட்பாட்டு மையத்தின் மூத்த ஆய்வாளர்.

**ஆதாரம்: Times of India, January 4, 2015**

# நவீன அடிமைத்தனம் அதிகமாக உள்ள நாடுகள்




உலகம் முழுவதும் குழந்தைகள் உள்பட 3 கோடியே 58 லட்சம் மக்கள் அடிமைகளாக இருப்பதாக 2014ம் ஆண்டுக்கான உலக அடிமைத்தன குறியீடு புள்ளி விவரம் காட்டுகிறது. இரண்டாவது வருடாந்திர பதிப்பாக இந்த புள்ளி விவரத்தை வாக் ஃப் ஃபவுண்டேஷன் அமைப்பு வெளியிட்டுள்ளது. ஆஸ்திரிலேயா நாட்டின் தொழிலதிபர் ஆண்ட்ரூ ஃபாரஸ்ட், அவரது மனைவி இருவருமாக இந்த ஆவணத்தை வெளியிட்டுள்ளனர். இருவரும் தங்களது செல்வத்தில் பாதியை, தங்களது வாழ்நாளிலேயே அறப்பணிகளுக்காக எழுதி வைத்தவர்கள். உலகிலேயே நவீன அடிமைத்தனம் மிக அதிகமாக இருக்கும் நாடு மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மாரிடானியா. அதன் மக்கள் தொகையில் 4 சதவீதத்தினர் நவீன அடிமைத்தனத்தில் சிக்கியுள்ளனர். அதற்கடுத்து வருவது உஸ்பெகிஸ்தான் (3.97 சதவீதம்); ஹெய்த்தி (2.3 சதவீதம்); கத்தார் (1.36 சதவீதம்); இந்தியா (1.14 சதவீதம்). உலக அளவில் நவீன அடிமைத்தனத்தில் சிக்கியிருப்போரின் மொத்த எண்ணிக்கையில் 71 சதவீதத்தினர், இவை உள்ளிட்ட 10 நாட்களில் உள்ளனர். சதவீதக் கணக்கைப் பொறுத்தவரையில் இந்தியா 5வது இடத்தில் இருக்கிறது. ஆனால், மொத்த எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் பட்டியலின் முதல் இடத்தில் இருப்பது இந்தியாதான். இந்தியாவில் மொத்தம் 1,42,90,000 பேர் நவீன அடிமைகளாக உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அடுத்து வருவது சீனா (32,40,000); பாகிஸ்தான் (20,60,000); உஸ்பெகிஸ்தான் 12,000,00; (10,50,000). உஸ்பெகிஸ்தான் இந்த முதல் ஐந்து இடங்களுக்குள் புதிதாக வந்திருக்கிறது. இந்த எண்ணிக்கைகளின் மொத்தம் நவீன அடிமைத்தனத்தில் வாழ்வோரில் 61 சதவீதமாகும்.

நவீன அடிமைத்தனம் என்பது கொத்தடிமைத் தொழிலாளர் முறை (தலைமுறை தலைமுறையாக தொடர்கிறது), பாலியல் தொழிலுக்காகக் கடத்தப்படுதல், பாலியல் தொழிலில் கட்டாயப்படுத்தி ஈடுபடுத்துதல், வலுக்கட்டாய திருமணங்கள், வீட்டு வேலை சார்ந்த அடிமைத்தனம், பிச்சை எடுப்பதற்காக திட்டமிட்ட முறையில் கும்பலாக ஈடுபடுத்தப்படுதல் ஆகியவற்றைக் குறிக்கிறது. செங்கல் சூளை, சமுக்கால நெசவு, துணிகளில் பூ வேலைப்பாடு குறிப்பிட்ட வகையான துணி உற்பத்தி, விவசாயம், கனிமச் சுரங்கங்கள் போன்ற சில தொழில்களிலும் நவீன அடிமைத்தனம் இருக்கிறது. (வேடிக்கை என்னவென்றால் வாக் ஃப்ரீ ஃபவுண்டேஷன் அமைப்பை ஏற்படுத்தியவர் ஒரு கனிமச் சுரங்க அதிபர்தான்!) இந்தியாவில் சில குறிப்பிட்ட பிரிவினர் நவீன அடிமைத்தனத்திற்கு பெரிதும் உள்ளாக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பகுதியினர்தான் தலித் மக்கள். மிகத் தாழ்வான சமூகப் பாதுகாப்பு நிலையில் உள்ள அவர்கள் தங்களது சமூகப் பிரிவைவிட்டு வெளியேற முடியாதவர்களாக இருக்கிறார்கள். முறைசாரா தொழிலாளர்கள், பெண்கள், சிறுமிகளும் கூட எளிதில் நவீன அடிமைத்தனத்தின் பிடியில் சிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. ஒரு சராசரி இந்திய குடிமகன் நவீன அடிமைத்தனத்தில் சிக்குவதற்கு 56.7 சதவீத வாய்ப்பு உள்ளது. (நவீன அடிமைத்தனத்திற்குத் தீர்வுகாண்பதில்) இந்திய அரசின் பொறுப்புணர்ந்த செயல்பாடு CCC என்ற அளவில் – அதாவது மோசம் என்ற அளவில் – இருப்பதாக இந்த புள்ளி விவரம் காட்டுகிறது. அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவான சேவைகளை வழங்குவது ஒரு வரம்புக்கு உட்பட்ட அளவிலேயே இருக்கிறது, பாதிப்புக்கு உள்ளாகிறவர்களை குற்றவாளிகளாக்கக்கூடிய மற்றும்/அல்லது வெளியேற்றக்கூடிய மற்றும் / அல்லது அடிமைத்தனத்திற்கு உதவக்கூடிய கொள்கைகளைக் கொண்டிருக்கிறது என்பதே இதன் பொருள். இத்தகைய பிரச்சனைகளைக் கையாள்வதற்கு வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படும் அரசுசாரா அமைப்புகளையே (என்.ஜி.ஓ.) சார்ந்திருக்கிறது என்பது உள்ளிட்ட அர்த்தமும் இதற்கு உண்டு. மக்கள். மிகத் தாழ்வான சமூகப் பாதுகாப்பு நிலையில் உள்ள அவர்கள் தங்களது சமூகப் பிரிவைவிட்டு வெளியேற முடியாதவர்களாக இருக்கிறார்கள். முறைசாரா தொழிலாளர்கள், பெண்கள், சிறுமிகளும் கூட எளிதில் நவீன அடிமைத்தனத்தின் பிடியில் சிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. ஒரு சராசரி இந்திய குடிமகன் நவீன அடிமைத்தனத்தில் சிக்குவதற்கு 56.7 சதவீத வாய்ப்பு உள்ளது. (நவீன அடிமைத்தனத்திற்குத் தீர்வுகாண்பதில்) இந்திய அரசின் பொறுப்புணர்ந்த செயல்பாடு CCC என்ற அளவில் – அதாவது மோசம் என்ற அளவில் – இருப்பதாக இந்த புள்ளி விவரம் காட்டுகிறது. அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவான சேவைகளை வழங்குவது ஒரு வரம்புக்கு உட்பட்ட அளவிலேயே இருக்கிறது, பாதிப்புக்கு உள்ளாகிறவர்களை குற்றவாளிகளாக்கக்கூடிய மற்றும்/அல்லது வெளியேற்றக்கூடிய மற்றும் / அல்லது அடிமைத்தனத்திற்கு உதவக்கூடிய கொள்கைகளைக் கொண்டிருக்கிறது என்பதே இதன் பொருள். இத்தகைய பிரச்சனைகளைக் கையாள்வதற்கு வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படும் அரசுசாரா அமைப்புகளையே (என்.ஜி.ஓ.) சார்ந்திருக்கிறது என்பது உள்ளிட்ட அர்த்தமும் இதற்கு உண்டு. அடிமைத்தனத்தின் பிடியில் சிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. ஒரு சராசரி இந்திய குடிமகன் நவீன அடிமைத்தனத்தில் சிக்குவதற்கு 56.7 சதவீத வாய்ப்பு உள்ளது. (நவீன அடிமைத்தனத்திற்குத் தீர்வுகாண்பதில்) இந்திய அரசின் பொறுப்புணர்ந்த செயல்பாடு CCC என்ற அளவில் – அதாவது மோசம் என்ற அளவில் – இருப்பதாக இந்த புள்ளி விவரம் காட்டுகிறது. அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவான சேவைகளை வழங்குவது ஒரு வரம்புக்கு உட்பட்ட அளவிலேயே இருக்கிறது, பாதிப்புக்கு உள்ளாகிறவர்களை குற்றவாளிகளாக்கக்கூடிய மற்றும்/அல்லது வெளியேற்றக்கூடிய மற்றும் / அல்லது அடிமைத்தனத்திற்கு உதவக்கூடிய கொள்கைகளைக் கொண்டிருக்கிறது என்பதே இதன் பொருள். இத்தகைய பிரச்சனைகளைக் கையாள்வதற்கு வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படும் அரசுசாரா அமைப்புகளையே (என்.ஜி.ஓ.) சார்ந்திருக்கிறது என்பது உள்ளிட்ட அர்த்தமும் இதற்கு உண்டு.

2014ம் ஆண்டில் இந்தியாவின் உள்துறை அமைச்சகம் ஆள்கடத்தல் தடுப்புக்கான இணையதளம் (போர்ட்டல்) ஒன்றை ஏற்படுத்தியது என்பது இந்த ஆய்வில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. குற்றவியல் நீதிமுறைத் தொடர்பான புள்ளி விவரங்கள், ஆள்கடத்தல் தடுப்புக்கான காவல் அமைப்புகள், அரசுத் துறை பயிற்சிகள், சட்ட அமலாக்கத் துறைக்கான பயிற்சிகள், ஆள்கடத்தல் தடுப்புச் சட்டம், சைல்டு லைன் தொடர்பு எண் உள்ளிட்ட, புகார் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் ஆகிய தகவல்களுக்காக இந்த இணையத்தளம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், கட்டாய உழைப்பு அல்லது கொத்தடிமை உழைப்பு பற்றிய முக்கியத் தகவல்களை தருகிற பொறுப்பு தொழிலாளர் துறையிடம் விடப்பட்டுள்ளது. அதேபோல், ஆள் கடத்தல் தொடர்பான தகவல்களைத் தரும் பொறுப்பு நீதித்துறை அமைச்சகத்திற்குத் தரப்பட்டிருக்கிறது.

கொத்தடிமை உழைப்பு நிலவரத்தை தேசிய மனித உரிமைகள் ஆணையம் கண்காணிக்கிறது. மாவட்ட கண்காணிப்புக் குழுக்கள் அந்தந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய கொத்தடிமை முறை குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என உச்சநீதிமன்ற ஆணை ஒன்று பணித்திருக்கிறது. அந்த ஆணையை செயல்படுத்திய ஒரே மாநில கர்நாடகம்தான்.

– ஆதாரம்: ஃபிரன்ட் லைன், பிப்ரவரி 20, 2015

For Private Circulation Only



# உலகளாவிய அடிமைத்தனம்

உலகிலேயே அடிமைப்படுத்தப்பட்டிருக்கிற மக்கள் மிக அதிக எண்ணிக்கையில் இருப்பது இந்தியாவில்தான் என்று உலக அடிமைத்தன குறியீட்டெண் ஆய்வறிக்கை கூறுகிறது.

## இந்திய நிலை

உலக அடிமைத்தன குறியீடு மதிப்பீட்டில்

**5வது இடம்**

மக்கள் தொகை

**1,252,139,596**

நவீன அடிமைத்தனத்தில் உள்ள மக்களின் தோராய மதிப்பீடு

**14,285,700**

நவீன அடிமைத்தனத்திற்கான அரசு நிலைபாடு

**CCC**

(மிகச் சிறந்த தர மதிப்பீடு என்பது AA. மிக மோசமான மதிப்பீடு D)

நவீன அடிமைத்தனத்தில் சிக்கியுள்ள மக்கள்

**56.7%**

## இந்தியாவில் சர்வசாதாரணமாக நவீன அடிமைத்தனம் உள்ள துறைகள்

செங்கல் சூளை



கல்குவாரி



பருத்தி விவசாயம் (உயர் விளைச்சல்)



ஜம்காளம்



மற்றும் துணிகளில் பூ/ஓவிய வேலைப்பாடுகள்; ஆடைகள், நெல் உற்பத்தி

*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*
*Human Rights Advocacy and Research Foundation (HRF)*

# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.
☎ 044 2235 3503, 044 2235 1919 Fax : 044 2235 5905,
E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com
website : www.humanrightsfoundation.org.in